## நான்காம் பகுதி

### இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1980 ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


1. 1980 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் பற்றிய (திருத்தச்) சட்டம் (i)

2. 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மரணச்சொத்துவரிச் சட்டம் ,(iv)

3. 1980 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் (திருத்தச்) சட்டம் (Liii)

4, 1980 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் (Lvi)

5. 1980 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் (Lxxviii)

6. 1980 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் (Lxxix)

7, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம் (Lxxxi)

8, 1980 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் (Lxxxxix)

9, 1980 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் (C)

10. 1980 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இலங்கை வங்கி (திருத்தச்) சட்டம் (Cii)

11. 1980 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம் (Ciii)

12: 1980 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, பண (திருத்தச்) சட்டம் (Civ)

# 1980ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் பற்றிய (திருத்தச்) சட்டம்

*(1980, பெப்புருவரி மாதம் 13ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

**தேசிய அரசுப் பேரவையின் 1972ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் பற்றிய சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

**1.** இச்சட்டம் 1980ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் பற்றிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**2.** இதன்பின்னர் இச்சட்டத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் தேசிய அரசுப் பேரவையின் 1972ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் பற்றிய சட்டத்தின் 8 ஆம் பிரிவு, ''1972, ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''1972 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனுல் 1974, ஏப்பிரல் 1 ஆம் தேதிக்குப் பின்னரல்லாமல்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன்மூலமும்:—

''(9) உதவுதொகையின் காலாண்டுத் தவணைப்பணம் முழுவதும் அல்லது அதன் பாகமொன்று தவணை தவறியதாகவுள்ள விடத்து, தவறுநர் தவணை தவறிய தொகையுடன் மேலதிகமாக—

(அ) தவணை தவறிய தொகையின் நூற்றுக்கு ஐந்து வீதத்திற்குச் சமமான பணத்தொகையொன்றையும், அத்துடன்

(ஆ) தவணை தவறிய தொகையானது தவணை தவறியதாக வந்த தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறுமுன்னர் செலுத்தப்படாதுள்ளவிடத்து, அத்தொகை தவணை தவறியதாகவுள்ள முப்பது நாட்களைக்கொண்ட மேலதிகக் காலப்பகுதி ஒவ்வொன்றும் தொடர்பில் அல்லது அத்தகைய காலப்பகுதியின் பாகம் தொடர்பில் தவணை தவறிய தொகையின் நூற்றுக்கு ஒரு வீதத்திற்குச் சமமான மேலுமொரு பணத்தொகையையும்,

தண்டமாகச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தப் பணத் தொகையானது, இவ்விடயத்திலும் தவணை தவறிய தொகையின் நூற்றுக்கு இருபத்தைந்து வீதத்தை விஞ்சுதலாகாது.''. அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(10) ஆணையாளர் தலைமையதிபதி, அவர், எவையேனும் சிறப்பான சூழ்நிலைகள் காரணமாக தவணை தவறப்பட்டுள்ள அத்தகைய தொகையை விட்டுவிடுதல் அல்லது குறைத்தலொன்று நீதியானதும் ஒப்புரவானதுமெனத் திருப்திப்படுவாரெனின், இப்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டத்தை விட்டுவிடலாம் அல்லது குறைக்கலாம்.''.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவில் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1972, ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது—

''செலுத்தப்பட்ட உதவு தொகைகள் தொடர்பில் சான்றிதழ்கள் வழங்குதல்

42. (1) மத்திய வங்கியின் பணச்சபையானது—

(i) 1973, ஏப்பிரல் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதியின் போதும்,

(ii) 1974 யூன் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதியின்போதும், அத்துடன்

(iii) அடுத்துவருகின்ற ஏதேனும் ஆண்டின் யூன் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதியின் போதும்,

ஒவ்வோர் ஆளினாலும் செலுத்தப்பட்ட, அல்லது அவரிடமிருந்து அறவிடப்பட்ட உதவுதொகைகள் தொடர்பில் ஒவ்வோர் ஆளுக்கும் அத்தகைய காலப்பகுதிகள் ஒவ்வொன்றின்போதும் அவரினால் செலுத்தப்பட்ட அல்லது அவரிடமிருந்து அறவிடப்பட்ட உதவு தொகைகளின் மொத்தத் தொகையைக் காட்டும் சான்றிதழொன்றை வழங்குவித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 1973 மே 1 ஆம் தேதி தொடங்குகின்றதும், 1973 யூன் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப் பகுதியின்போது எவரேனும் ஆளினுற் செலுத்தப்பட்ட அல்லது ஆளிடமிருந்து அறவிடப்பட்ட ஏதேனும் உதவுதொகை 1974, யூன் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதியின்போது அவரால் செலுத்தப்பட்டதாக அல்லது அவரிடமிருந்து அறவிடப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

''உதவு தொகைகளின் மீதான வட்டி

44. நாற்பத்திரண்டாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்றிற் குறித்துரைக்கப்பட்ட தொகையானது, எப்பன்னிரண்டு மாதகாலத் தொடர்பில் அச்சான்றிதழ் வழங்கப்பட்டதோ அப்பன்னிரண்டு மாதகாலத்தின் கடைசி நாளை உடனடுத்துப் பின்வரும் நாளன்று தொடங்குகின்ற நாளிலிருந்து கணிக்கப்படும் ஈராண்டு காலத்திற்கு வைப்பிலிருப்பின், அத்தகைய தொகைமீது வட்டி செலுத்தப்படல் வேண்டும். எப்பன்னிரண்டு மாத காலப்பகுதி தொடர்பில் அச்சான்றிதழ் வழங்கப்பட்டதோ அப்பன்னிரண்டு மாதகாலத்தின் கடைசி நாளை உடனடுத்துப் பின்வரும் நாளிலிருந்து தொடங்குகின்ற முதலிரு ஆண்டுகள் தொடர்பிலான வட்டி, நூற்றுக்கு ஐந்து வீதம் என்ற வீதத்திலும், அத்துடன் அடுத்துவரும் ஆண்டுகள் தொடர்பிலும் வட்டி நூற்றுக்கு ஐந்து வீதம் என்ற வீதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.''.

# 1980ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மரணச்சொத்து வரிச் சட்டம்

[1980 பெப்புருவரி மாதம் 20ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1978, ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்ற ஆட்களின் மரணச் சொத்துக்களின் பெறுமதியின்மீது மரணச்சொத்து வரியை விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும், ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டமானது, 1980 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, மரணச்சொத்து வரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## அத்தியாயம் I

### மரணச்சொத்து வரி விதித்தல்

2. இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, 1978ஆம்ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் மரணமெய்துகின்ற ஒவ்வோர் ஆளினதும் மரணச்சொத்தினது பெறுமதியின் மீது 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்படுவதும், மரணச்சொத்து வரியென அழைக்கப்படுவதுமான வரியொன்று விதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், அவ்வரி செலுத்தப்படுதலும் வேண்டும்.

3. (1) 1978 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்ற எவரேனும் ஆளினது மரணச்சொத்தினதும் பெறுமதியின்மீது செலுத்தப்படற்பாலதான மரணச்சொத்து வரித்தொகையானது, இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) மரணமெய்திய எவரேனும் ஆளினதும் மரணச்சொத்தின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கத்திற்காக, அவரது மரணச் சொத்தின் பாகமாக அமையும் எல்லா ஆதனங்களும், ஒரே மரணச் சொத்தாக அமையக்கூடியவகையில் கூட்டு மொத்தமாக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் மரணத்தின்மேல் கைமாறும் ஆதனமானது, மரணமெய்திய ஆளினது மரணச்சொத்தின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கத்திற்காக ஒரு தடவைக்குமேல் கூட்டுமொத்தமாக்கப்படுதலோ அல்லது அதே மரணத்தின் மேல் ஏதேனும் ஆதனத்தின்மீது மரணச்சொத்து வரியானது ஒரு தடவைக்கு மேல் விதிக்கப்படுதலோ ஆகாது.

(4) மரணமெய்திய ஒருவரினது மரணச்சொத்தின் பாகமாக அமையும் ஏதேனும் ஆதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மரணச்சொத்து வரியானது. (1) ஆம் உட்பிரிவிற்கிணங்கக் கணிக்கப்படுவதும்,அந்த ஆதனத்தின் பெறுமதி அந்த மரணச் சொத்தின் பெறுமதிக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமாகவுள்ளதும், அந்த மரணச் சொத்தினது பெறுமதியின்மீது செலுத்தப்படற்பாலது மான மரணச்சொத்து வரியின் அத்தகைய விகிதாசாரமாதல் வேண்டும், அந்த ஆதனத்தின்

பெறுமதியைத் தீர்மானிப்பதில், அந்த ஆதனத்துடன் தொடர்புறுத்திக் காட்டப்படற்பாலதான ஏதேனும் கடனுக்கென அல்லது பாரபந்தத்துக்கென 17 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட விடுதொகை ஒன்றுக்குச் சமமான தொகை ஒன்றிலான கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

### மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம்

**4.** மரணமெய்திய ஆளொருவரின் மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம் பின்வருவனவற்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்:-

(அ) மரணமெய்திய ஆள் மரணமெய்திய நேரத்தில் எந்த ஆதனத்தைக் கையுதிர்க்கத் தகுதிவாய்ந்தவராக இருந்தாரோ அந்த ஆதனம்;

(ஆ) மரணமெய்திய ஆளினுல் செய்யப்பட்டதும் சாவேதுக் கொடையாக, எடுக்கப்பட்டதுமான ஆதனம்;

(இ) மரணமெய்தியவர் எந்த ஆதனத்தின் மீது முற்றுன உரித்தை உடையவராக இருந்தாரோ, அந்த ஆதனத்திலுள்ள அல்லது அதன் ஏதேனும் பாகத்திலுள்ள பயனுகர் அக்கறையானது அவரது மரணத்தின்மேல் வேறு எவரேனும் ஆள், அவருக்குப்பின் உயிருடன் இருப்பதனுல் அந்த வேறு ஆளுக்குக் கைமாறக் கூடியவகையில் அல்லது வந்துறக்கூடியவகையில் கையுதிர்த்தல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ மரணமெய்தியவரினுல் தமக்கும் அத்தகைய வேறு ஆளுக்கும் கூட்டாகக் கைமாற்றுவிக்கப்பட்ட அல்லது உரித்தாக்குவிக்கப்பட்ட ஆதனம்; இது, மரணமெய்தியவரினுல் தனித்தோ அல்லது வேறு எவரேனுமாளுடன் இணைந்தோ, அல்லது வேறு எவரேனுமாளுடனுன ஒழுங்குபாட்டாலோ செய்யப்பட்டதான ஏதேனும் கொள்வனவையும் அல்லது ஏதேனும் முதலீட்டையும் உள்ளடக்கும்.

(ஈ) நியமத்தராயினுஞ்சரி அல்லது சாட்டுநராயினுஞ்சரி கொடை பெறுபவர் ஒருவரின் நன்மைக்காக மரணமெய்திய ஆளினுல் தமது ஆயுளின் மீதான காப்புறுதிப் பத்திரம் முழுமையாக வைத்திருக்கப்பட்டுள்ளவிடத்து, அந்தக் காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் கிடைக்கப்பெற்ற பணம், அல்லது அத்தகைய நன்மைக்காக அக்காப்புறுதிப் பத்திரம் மரணமெய்தியவரினுல் பகுதியளவில் வைக்கப்பட்டுள்ளவிடத்து, மரணமெய்தியவரினுல் செலுத்தப்பட்ட கட்டுப்பணத்திற்கான விகிதாசாரத்தில், அத்தகைய பணத்தின் பாகமொன்ருக அமையும் பணம்.

(உ) மரணமெய்தியவரின் மரணத்தின்மேல் மரணமெய்தியவருக்குப் பின் உயிருடன் இருப்பதனுல் அல்லது வேறு விதமாக வந்துறும் அல்லது எழும் பயனுகர் அக்கறையின் அளவிற்கு, மரணமெய்தியவரினுல் தனித்து அல்லது வேறு எவரேனுமாளுடன் இணைந்து அல்லது வேறு எவரேனுமாளுடன் ஒழுங்குசெய்து கொள்வனவு செய்யப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் ஆண்டுத் தொகை அல்லது வேறு அக்கறை.

## அத்தியாயம் III
## விலக்களிப்புக்கள்

**5.** சட்டத்திஞல் வலுவுக்கிடப்படற்பாலதானதும், மரணமெய்தியவரிஞல் செய்யப்படாததுமான கையுதிர்ப்பு ஒன்றின் கீழ், அல்லது சட்டத்திஞல் வலுவுக்கிடப்படற்பாலதானதும், மரணமெய்தியவரிஞல் செய்யப்பட்டதுமானகையுதிர்ப்பு ஒன்றின் கீழ் இன்னேர் ஆளுக்கான நம்பிக்கைப்பொறுப்பாளராக மரண மெய்தியவரிஞல் வைத்திருக்கப்பட்ட ஆதனம், (அக் கையுதிர்ப்பின்கீழ் அவ்வாதனத்தின் உடைமையும் துய்ப்பும் நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கியதன்மேல் உடனடியாகப் பயன் பெறுநரால் நன்ஞேக்கத்துடன் கையேற்கப்பட்டு மரணமெய்தியவரை, அல்லது ஒப்பந்தம் மூலம் அல்லது வேறுவிதமாக மரணமெய்தியவர் பெறக்கூடிய ஏதேனும் நன்மையை முழுமையாக விலக்கி அதன் பின்னர் வைத்திருக்கப்படுவதாக அக் கையுதிர்ப்பானது இருத்தல் வேண்டும்) மரணமெய்தியவரின் மரணத்தின்மேல் கைமாறுவதாகக் கருதப்படுதல் ஆகாது.

**6.** மரணமெய்தியவரினதும் வேறு எவரேனும் ஆளினதும் ஆயுட்காலத்துக்கெனவும், அத்துடன் அவர்களுள் பின் உயிருடன் இருப்பவரின் ஆயுட்காலத்துக்கெனவும், அல்லது அவரது சொந்த மரணத்தின்மேல் வேறு எவரேனும் ஆளுக்குச் சாதகமாக எழுவதும், மரணமெய்தியவரிஞல் தனித்து, அல்லது வேறு எவரேனுமாளுடன் இணைந்து அல்லது வேறு எவரேனுமாளுடன் கூட்டாக அல்லது ஒழுங்கு செய்து, கொள்வனவு செய்யப்பட்டதும் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டதுமான கூட்டுமொத்தத்தில் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஓர் ஆண்டுத்தொகை தொடர்பாக அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்டுத் தொகைகள் தொடர்பாக மரணச்சொத்து வரி செலுத்தப்படவேண்டியதாதலாகாது.

**7.** இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் பல்கலைக்கழகத்திற்கு அல்லது பொது நூல் நிலையத்திற்கு, அல்லது 1970 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைகள் சபைச்சட்டத்திஞல் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைகள் சபைக்கு, அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு மரணமெய்தியவரிஞல் விட்டுச் செல்லப்பட்டதும், அத்தகைய அரசாங்கத்திஞல், பல்கலைக்கழகத்திஞல், நூல்நிலையத்திஞல், சபையிஞல் அல்லது உள்ளூரதிகார சபையிஞல் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஏதேனும் ஆதனம் தொடர்பாக மரணச்சொத்து வரி செலுத்தப்படற்பாலதாகாது.

**8.** விதவைகள், அஞதைகள் ஒய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், அல்லது பகிரங்க அலுவலர்களுக்கென அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள அலுவலர்களுக்கெனத் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஒய்வூதிய நிதியத்தின்கீழ் அல்லது திட்டத்தின் கீழ் மரணமெய்தியவரின் விதவைக்கு அல்லது பிள்ளைக்கு வழங்கப்பட்ட ஏதேனும் ஒய்வூதியம் தொடர்பாக, அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தினது மரணமெய்திய எவரேனும் அலுவலரின் விதவைக்கு அல்லது பிள்ளைக்கு அத்தகைய அரசாங்கத்திஞல் செலுத்தப்படவேண்டிய ஏதேனும் ஒய்வூதியம் அல்லது ஆண்டுத் தொகை தொடர்பாக அத்தகைய ஒய்வூதியம் அல்லது ஆண்டுத்தொகை எத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுகிறதோ அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு மரணமெய்தியவர் உதவுதொகை செலுத்திஞர் என்பது எப்படி இருப்பினும், மரணச் சொத்து வரி செலுத்தப்படற்பாலதாகாது.

**9.** பிரிபடா இந்துக் குடும்பமொன்றின் உறுப்பினர் ஒருவர் மரணமெய்து மிடத்து,

(அ) அக்குடும்பத்தின் கூட்டு ஆதனமாக இருந்துவந்ததாக ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தின்மீது; அல்லது

(ஆ) அத்தகைய ஆதனம் அசைவுள்ள ஆதனமாக இருந்திருந்தால், அக் குடும்பத்தின் கூட்டு ஆதனமாக இருந்திருக்குமென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்பட்ட ஏதேனும் அசைவற்றஆதனத்தின்மீது,

மரணச்சொத்து வரி எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது.

**10.** எவ்வாள், அவர் மரணமெய்திய தேதியன்று 1979ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, வதி அதிதி (வரி விலக்களிப்பு)ச் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப் பட்டவாறாக வதி அதிதியாக இருந்தாரோ அவ்வாள் எவரினதும் மரணச் சொத்துத் தொடர்பாக மரணச்சொத்து வரி செலுத்தப்படற்பாலதாகாது.

**11.** எவரேனுமாளின் மரணத்தின்மேல் கைமாறு ஆதனம் எவையேனும் வதிவிட வளவுகளையும் உள்ளடக்குமிடத்து, அத்தகைய வளவுகளில் ஒன்றின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபாவுக்குச் சமமாயின் அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சுமெனின், அத்தகைய வளவின் பெறுமதியில் மூன்று இலட்சம் ரூபாத் தொகை, அல்லது அத்தகைய வளவின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாததெனின், அத்தகைய வளவின் பெறுமதி, மரணச்சொத்து வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**12.** மரணமெய்திய ஆளொருவரின் இறுதி விருப்பாவணத்தின் கீழ், மரண மெய்தியவரின் உண்மையில் ஊழியர்களாக இலங்கையிலிருந்த ஒருவருக்கு அல்லது அதிலும் மேற்பட்டவர்களுக்கு கூட்டுமொத்தமாக முப்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையொன்று செலுத்தப்பட வேண்டுமெனப் பணிக்கப் பட்டுள்ளவிடத்து, 6ஆம் பிரிவின்கீழ் அது தொடர்பாக விலக்களிப்பு எதுவும் வழங்கப்பட்டிராவிட்டால், அத்தகைய தொகையானது மரணச் சொத்து வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**13.** மரணமெய்திய ஆளொருவரின் இறுதி விருப்பாவணத்தின்கீழ், 1979 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 31 (9) (அ) என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமாகக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரினால் வெளிப் படுத்தப்பட்ட தரும நிறுவனம் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தரும நிறுவனங்களுக்கு கூட்டுமொத்தமாக ஓர் இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தொகையொன்று செலுத்தப்படும்படி பணிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தொகையானது மரணச்சொத்து வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

**14.** ஆளொருவரின் மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம் எவையேனும் வீட்டுப்பொருட்களையும் அல்லது எவையேனும் நகைகளையும் உள்ளடக்குமிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவுக்கு அல்லது அத்தகைய பொருட்களின

DISCARDED

தும் நகைகளினதும் பெறுமதிக்கு, இவற்றுள் எது குறைந்ததோ அதற்கு மேற்படாத ஒரு பணத்தொகை, மரணச் சொத்து வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IV
## ஆதனத்தின் பெறுமதியைத் தீர்மானித்தல்

**15.** *(1)* இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டதற்கு அமைய, வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் மரணமெய்தியவர் மரணமடைந்த தேதியன்று ஏதேனும் ஆதனம் பகிரங்க சந்தையில் விற்கப்பட்டிருந்தால் அத்தகைய ஆதனத்துக்கு எவ்விலை கிடைத்திருக்குமோ அவ்விலையாகவே ஏதேனும் ஆதனத்தின் பெறுமதி மதிப்பிடப்படுதல் வேண்டும்; அத்துடன் முழு ஆதனமும் ஒரே நேரத்தில் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்படுகின்றதென்ற ஊகத்தின்மீது மதிப்பீடானது செய்யப்பட்டதென்ற காரணத்துக்காக, மதிப்பீட்டில் எக்குறைப்பனவும் செய்யப்படுதலாகாது ;

ஆயின், மரணமெய்தியவரின் மரணம் காரணமாக ஆதனத்தில் மதிப்பிறக்கமேற்பட்டுள்ளதென்று வரிமதிப்பீட்டாளரின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டுள்ளவிடத்து, வரிமதிப்பீட்டாளர், அத்தகைய ஆதனத்தின் பெறுமதியை மதிப்பிடுவதில், அத்தகைய மதிப்பிறக்கத்தைக் கருத்திற்கெடுத்தல் வேண்டும் :

ஆயின், மேலும் பெறுமதி மதிப்பிடப்படவுள்ள ஆதனம் அசைவற்ற ஆதனமாக இருக்குமிடத்து, அத்தகைய ஆதனத்தின் பெறுமதியானது —

(அ) அத்தகைய ஆதனமானது, 1977 ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆந் தேதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் மரணமெய்தியவரால் கொள்ளப்பட்டிருந்தால் —

(i) அந்த ஆதனம் 1977ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆந் தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்பனைசெய்யப்பட்டிருப்பின் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் அது என்ன விலையைப் பெற்றிருக்குமோ அவ்விலையுடன், 1977 ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆந் தேதிக்குப் பின்னரும் மரணமெய்தியவரின் மரணத் தேதிக்கு முன்னரும் அத்தகைய ஆதனத்துக்குச் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள், மாற்றங்கள், சேர்ப்புக்கள் (எவையேனும் இருப்பின்) அவற்றின் ஆகுசெலவுக்குச் சமமான தொகையொன்றைச் சேர்த்து வரும் ஒரு விலை ; அல்லது

(ii) அந்த ஆதனம் மரணமெய்தியவரின் மரணத் தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் அது என்ன விலையைப் பெற்றிருக்குமோ அந்த விலை,

ஆகிய இவற்றுள் எந்த விலை குறைவானதோ அந்த விலையென மதிப்பிடப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆதனமானது, 1977 ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆந் தேதிக்குப் பின்னர் மரணமெய்தியவரால் கொள்ளப்பட்டிருந்தால் —

(i) அந்த ஆதனம் மரணமெய்தியவரினல் கொள்ளப்பட்ட தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் அது என்ன விலையைப் பெற்றிருக்குமோ

அவ்விலையுடன், அத்தகைய ஆதனம் மரணமெய்தியவரினால் கொள்ளப்பட்ட தேதிக்குப் பின்னரும், மரணமெய்தியவரின் மரணத் தேதிக்கு முன்னரும் அத்தகைய ஆதனத்திற்குச் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள், மாற்றங்கள், சேர்ப்புக்கள் (எவையேனும் இருப்பின்) அவற்றின் ஆகுசெலவுக்குச் சமமான தொகையொன்றைச் சேர்த்து வரும் ஒரு விலை ; அல்லது

(ii) அந்த ஆதனம் மரணமெய்தியவரின் மரணத் தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் அது என்ன விலையைப் பெற்றிருக்குமோ அந்த விலை,

ஆகிய இவற்றுள் எந்த விலை குறைவானதோ அந்த விலையென மதிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஆதனம் தொடர்பான வருமானம் வருமதியாக வந்துற்றபோதிலும், மரணமெய்தியவரின் மரணத்தின் முன்னர் அவரினால் அவ்வருமானம் பெற்றுக்கொள்ளப்படாதுள்ளவிடத்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்த ஆதனத்தின் பெறுமதியானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் மதிப்பிடப்பட்ட விலையினதும் அத்தகைய வருமானத் தொகையினதும் கூட்டுமொத்தமாதல் வேண்டும்.

(3) பெறுமதி மதிப்பிடப்படவுள்ள ஆதனம், ஏதேனும் காணியிலுள்ள பிரிபடாப் பங்காக இருக்குமிடத்து, அப்பிரிபடாப் பங்கின் பெறுமதியானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் மதிப்பிடப்பட்டவாறாக முழுக் காணியினதும் பெறுமதியின் விகிதாசாரத்தொகை எதுவோ அவ்விகிதாசாரத்தொகையிலிருந்து அவ்விகிதாசாரத்தொகையின் பத்து சதவீதத்துக்குச் சமமான தொகை ஒன்றைக் கழித்த பின்னர் பெறப்படும் தொகையாதல் வேண்டும்.

(4) (அ) பெறுமதி மதிப்பிடப்படவுள்ள ஆதனமானது, அகவிதியினால் அதிலுள்ள பங்குகளை மாற்றும் உரிமையை மட்டுப்படுத்தும் ஏதேனும் கம்பனியின் அல்லது ஐவருக்கு மேற்படாத ஆட்களினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனியின் (முன்னுரிமைப் பங்குகள் அல்லாதனவான) பங்குகளைக் கொண்டிருக்குமிடத்தும், மரணமெய்தியவரின் மரணத்துக்கு நேர்முற்போந்த பன்னிரண்டு மாத காலத்திற்குள், அங்கீகரிக்கப்பட்ட பங்குத்தொகுதி மாற்றியின் உத்தியோகபூர்வ நிரலில் அல்லது இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காகத் திறைசேரிச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தரகர்கள் கழகத்தினால் இலங்கையில் வழங்கப்பட்ட ஒத்ததன்மையினதான நிரலொன்றில் அந்தப் பங்குகள் விலை குறித்துக் கேட்கப்படவில்லையென்று ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்தும், இச்சட்டத்தின் நோக்கத்திற்காக அத்தகைய பங்குகளின் பெறுமதியானது, (1)ஆம் உட்பிரிவிலுள்ளதெதுவும் எப்படியிருப்பினும், கம்பனியின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியைக் கருத்திற்கொண்டு மதிப்பிடப்படலாம்.

(ஆ) பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக—

"ஐவருக்கு மேற்படாத ஆட்களினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனி" என்பது எக்கம்பனியில் வழங்கப்பட்ட மொத்த பங்குகளில் அரைவாசிக்கு மேற்பட்ட பங்குகள் நேரடியாகவோ அல்லது நியமத்தர்கள் மூலமாகவோ ஐவருக்கு மேற்படாத ஆட்களினால், அவர்களின் மனைவிமாரினால், அல்லது பாராயமடையாத பிள்ளைகளினால் வைத்திருக்கப்படுகின்றனவோ அக்கம்பனியொன்று எனப் பொருள்படும்.

'' முன்னுரிமைப் பங்கு'' என்பது, எப்பங்கை வைத்திருப்பவர் நிர்ணயிக்கப் பட்ட வீதத்தில் மட்டும் பங்கிலாபத்தைப் பெற உரித்துடையவராகிருரோ அத்தகைய ஒரு பங்கு எனப் பொருள்படும்;

''பங்கு'' என்பது, பங்கு ஒன்றை ஒத்ததும், எத்தகையதுமான பெயரினுல் அழைக்கப்படுவதும், கம்பனியொன்றிலுள்ளதுமான எத்தகையதுமான ஏதேனும் அக்கறையையும் உள்ளடக்கும்;

''கம்பனியொன்றின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி'' என்பது—

(i) கம்பனியின் ஏதேனும் தொகுதிக்கடன் முதலினதும் எவையேனும் முன்னுரிமைப் பங்குகளினதும் சம பெறுமதியை அல்லது மீட்புப் பெறுமதியை, இவற்றில் எது கூடியதோ அதனையும்;

(ii) பணத்தைக் கொண்ட, அல்லது பணத்தின் பெறுமதியைக் கொண்ட பிரதிபயனுக்காக நன்னேக்கத்துடன் உறப்பட்ட அல்லது உருவாக்கப் பட்ட கம்பனியின் எல்லாக் கடன்களையும்;

(iii) நீதியானதும் நியாயமானதுமான ஒரு கணிப்பின் மேல் கம்பனியின் ஏதேனும் எதிர்காலப் பொறுப்புக்களாக அல்லது எதிர்பாராப் பொறுப்புக்களாக அல்லது தொகை நிச்சயமற்றதாக இருக்கும் அதன் ஏதேனும் பொறுப்புக்களாக அமையும் அத்தகைய தொகை யையும்;

(iv) வேறு ஏதேனும் முறையில் அல்லாது, ஊழியர்களுக்கான ஓய்வூதியத் தினைச் செலுத்துவதற்காக அல்லது ஊழியர்களின் அல்லது அவர்களு டைய தங்கிவாழுநர்களின் அல்லது உறவினர்களின் நன்மைக்காக வேறு வகையில் பயன்படுத்துவதற்கென நன்னேக்கத்துடன் கருதப் பட்டுள்ளதும், தனியாக முதலீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் ஒதுக்கு நிதியத்தின் தொகையையும்,

கழித்த பின்னர், நன்மதிப்பின் பெறுமதி உட்பட தொழிற்படு நிறுவனம் எனும் வகையில் கம்பனியின் எல்லாச் சொத்துக்களினதும் (1) ஆம் உட் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மதிப்பிடப்பட்ட பெறுமதியெனப் பொருள்படும்.

**16**, மரணமெய்திய ஆளொருவரின் மரணத்தின் மேல் கைமாறும் ஆதன மானது, மரணமெய்தியவரினுல் அவரது ஆயுளின் மீது செய்து கொள்ளப்பட்ட காப்புறுதிப் பத்திரமொன்றின் மேல் வந்த தொகைகளை அல்லது மரணமெய்திய வரினுல் கொள்வனவு செய்யப்பட்ட எவைவேனும் வரி ஒதுக்குச் சான்றிதழ் களின் மேல் வந்த தொகைகளைக் கொண்டிருக்குமிடத்து, அவ்வாறு வந்த தொகைகளின் பெறுமதியானது-

(அ) மரணச்சொத்து வரியைச் செலுத்துவதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள அந்தத் தொகையின் அத்தகைய பாகத்தினுல்; அல்லது

(ஆ) அத்தகைய தொகை முழுவதும் மரணமெய்தியவரினது மரணச்சொத் தின் பாகமாக அமைந்திருப்பின், செலுத்தப்படற்பாலதாக வரக்கூடிய மர ணச் சொத்து வரித்தொகையினுல்,

இவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகையினுல் குறைக்கப்பட்ட அவ்வாறு வந்த தொகைகளெனக் கருதப்படுதல் வேண்டும்.

**17.** *(1)* மரணமெய்திய ஆளொருவரினது மரணச் சொத்தின் பெறுமதியைத் தீர்மானிப்பதில், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு அமைய, நியாயமான மரணச் சடங்குச் செலவுகளுக்கும், மரணமெய்தியவரினல் உறப்பட்டவையும் அல்லது உருவாக்கப்பட்டவையும், அல்லது மரபுரிமை, கொடை, உரித்துமாற்றம், கொள்வனவு என்பன மூலம் அல்லது வேறு விதமாக மரணமெய்தியவரினல் கொள்ளப்படுவதற்கு முன்னர் மரணச் சொத்தின் பாகமாக அமையும் ஏதேனும் ஆதனத்தில் பொறுப்பாக்கப்பட்டிருப்பதுடன் மரணத் தேதியன்று தொடர்ந்தும் அவ்வாறு பொறுப்பாக்கப்பட்டவையுமான கடன்களுக்கும் பாரபந்தங்களுக்கும் விடுதொகையொன்று அளிக்கப்படுதல் வேண்டும்; ஆனல் பின்வரும் சந்தர்ப்பங்களில் விடுதொகையொன்று அளிக்கப்படுதலாகாது:—

(அ) மரணமெய்தியவரினல் உறப்பட்ட கடன்கள் அல்லது மரணமெய்தியவரினல் உருவாக்கப்பட்ட பாரபந்தங்கள் மரணமெய்தியவரின் சொந்தப் பயன்பாட்டுக்கும் நன்மைக்கும் என, பணத்தைக் கொண்ட அல்லது பணத்தின் பெறுமதியைக் கொண்ட முழுமையான பிரதி பயனுக்காக நன்னேக்கத்துடன் உறப்பட்டு அல்லது உருவாக்கப்பட்டு இருப்பதுடன், அவரது அக்கறையிலிருந்து பயனுடையதாகவும் இருந்தாலன்றி, மரணமெய்தியவரினல் உறப்பட்ட அத்தகைய கடன்களுக்கும் அல்லது மரணமெய்தியவரினல் உருவாக்கப்பட்ட அத்தகைய பாரபந்தங்களுக்கும்; அல்லது

(ஆ) எந்தக் கடன் தொடர்பில் வேறு ஏதேனும் மரணச் சொத்திலிருந்து அல்லது ஆளிடமிருந்து மீளளிப்புக்கு உரிமை இருக்கின்றதோ அத்தகைய மீளளிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் ஒழிய, அந்த ஏதேனும் கடனுக்கு அல்லது;

(இ) மரணச் சொத்தின் வெவ்வேறு பாகங்களின் மீது இறுக்கப்பட்ட ஒரே கடனுக்கு அல்லது பாரபந்தத்துக்கு ஒரு தடவைக்கு மேற்பட; அல்லது

(ஈ) மரணமெய்தியவரினது மரணச் சொத்தின் பாகமாக அமைவதும், இலங்கைக்கு வெளியே அமைந்ததுமான மரணமெய்தியவரின் ஆதனம் ஏதேனுமிருப்பின் அதன் பெறுமதித் தொகையின் அளவு தவிர, இலங்கையில் செலுத்தப்படுவதற்கு ஒப்பந்தஞ் செய்யப்பட்ட அல்லது இலங்கையில் அமைந்துள்ள ஆதனத்தைப் பிணைப் பொறுப்பாக வைத்து, பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் நீங்கலாக இலங்கைக்கு வெளியே உறப்பட்ட ஏதேனும் கடன்களுக்கு,

அத்துடன், விடுதொகை அளிக்கப்பட்ட ஏதேனும் கடன் அல்லது பாரபந்தம் அதற்கு இலக்காகவுள்ள ஆதனத்தின் பெறுமதியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) மரணமெய்திய ஆளொருவரின் மரணச் சொத்தின் பெறுமதியைத் தீர்மானிப்பதில் பின்வருவனவற்றுக்கும் விடுதொகை அளிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அவரது மரணத் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலத்திற்கு மரணமெய்தியவரின் இலாபங்கள் அல்லது வருமானம் அல்லது கொடைகள் அல்லது செல்வம் தொடர்பாக, மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிக்கும் எவரேனும் மரணசாதன நிறைவேற்றுநரால், மரணச் சொத்து நிருவாகியினல் அல்லது வேறு ஆளினல் இலங்கையில் வலுவில் இருக்கும்

ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வருமானவரிக்கு, கொடைவரிக்கு, செல்வவரிக்கு அல்லது வேறு ஒத்த வரிக்கு; அத்துடன்

(ஆ) மரணமெய்தியவரினது மரணச் சொத்தின் பாகமாக அமையும் ஏதேனும் ஆதனத்திலிருந்து எழுகின்றவையும்அல்லது பெறப்படுகின்றவையும், அவர் மரணமெய்துவதற்கு முன்னரான ஏதேனும் காலத்திற்கானவையுமான மரணமெய்தியவரின் இலாபங்கள், வருமானம் என்பன தொடர்பாக வேறு ஏதேனும் நாட்டில் வலுவில் இருக்கும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வரிக்கு,

விடுதொகை அளிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V
## நிவாரணங்கள்

**18.** எவரேனுமாளின் மரணத்தின்மேல் கைமாறுவதும் காணியை அல்லது (ஒரு கம்பனியினால் கொண்டு நடாத்தப்படும் தொழில் அல்லாத) ஒரு தொழிலை, அல்லது காணியில் அல்லது அத்தகைய தொழிலொன்றில் உள்ள ஏதேனும் அக்கறையைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் ஆதனத்தின்மீது மரணச் சொத்துவரி செலுத்தப்பட வேண்டியதாக வந்துள்ளதென்றும், அதன் பின்னர் முதலாவது மரணத்தின் மேல் அந்த ஆதனம் எவ்வாளுக்குக் கைமாறியதோ அவ் ஆளின் மரணத்தின்மேல் கைமாறிய அதே ஆதனத்தின்மீது அல்லது அதே ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின்மீது ஐந்து ஆண்டுகளுக்குள் மரணச்சொத்து வரியானது மீண்டும் செலுத்தப்பட வேண்டியதாக வந்துள்ள தென்றும் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்து, அவ்வாறுகைமாறும் ஆதனம் தொடர்பாக இரண்டாவது மரணத்தின்மீது செலுத்தப்பட வேண்டிய மரணச் சொத்து வரித்தொகையானது பின்வருமாறு குறைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

(அ) இரண்டாவது மரணமானது, முதலாவது மரணத்திற்குப் பின்னர் ஓர் ஆண்டிற்குள் ஏற்படுமிடத்து, ஐம்பது சதவீதத்தால்;

(ஆ) இரண்டாவது மரணமானது, முதலாவது மரணத்திற்குப் பின்னர் இரு ஆண்டுகளுக்குள் ஏற்படுமிடத்து, நாற்பது சதவீதத்தால்;

(இ) இரண்டாவது மரணமானது, முதலாவது மரணத்திற்குப் பின்னர் மூன்று ஆண்டுகளுக்குள் ஏற்படுமிடத்து, முப்பது சதவீதத்தால்;

(ஈ) இரண்டாவது மரணமானது, முதலாவது மரணத்திற்குப் பின்னர் நான்கு ஆண்டுகளுக்குள் ஏற்படுமிடத்து, இருபது சதவீதத்தால்;

(உ) இரண்டாவது மரணமானது, முதலாவது மரணத்திற்குப் பின்னர் ஐந்து ஆண்டுகளுக்குள் ஏற்படுமிடத்து, பத்து சதவீதத்தால்:

குறைக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், இரண்டாவது மரணத்தின்மேல் ஆதனத்தின் எப்பெறுமதியின்மீது வரிசெலுத்தப்படல் வேண்டுமோ அப்பெறுமதியானது அவ்வாதனத்தைப் பொறுத்து முதலாவது மரணத்தின்மேல் எப்பெறுமதிமேல் வரிசெலுத்தப்பட

வேண்டியிருந்ததோ அப்பெறுமதியை விஞ்சுமிடத்து இப்பிரிவின்கீழ் குறைக்கப்பட வேண்டிய தொகை எவ்வரித்தொகையிலிருந்து குறைக்கப்பட வேண்டுமோ அவ்வரித் தொகையைக் கணிக்கும் நோக்கத்துக்காக, பிந்திய பெறுமதியானது முந்திய பெறுமதிக்காகப் பதிலிடப்படல் வேண்டும்.

**19.** மரணமெய்தியவரினது மரணச்சொத்தின் பாகமாக அமையும் ஆதனமானது வெளிநாடொன்றில் அமைந்திருக்குமிடத்தும், அந்த ஆதனம் தொடர்பாக அந்த நாட்டில் மரணமெய்தியவரின் மரணத்தின்மேல் ஏதேனும் வரிசெலுத்தப்பட வேண்டியதாகவுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்தும்:—

(அ) அந்த நாட்டில் செலுத்தப்பட வேண்டிய வரித்தொகைக்கு; அல்லது.

(ஆ) அந்த மரணச்சொத்தினது பெறுமதியின்மீது இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டியதும், அந்த நாட்டில் அமைந்துள்ள ஆதனத்தின் பெறுமதி மரணச் சொத்தின் பெறுமதிக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்திற்குச் சமமானதுமான மரணச் சொத்தின் மீதான வரியின் அத்தகைய விகிதாசாரத்தொகை,

இவற்றுள் எத்தொகை குறைவானதோ, அதற்குச் சமமான தொகையின் கழிவொன்றை அத்தகைய ஆதனத்தின் பெறுமதியினைத் தீர்மானிப்பதில், அவர் அனுமதித்தல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### மரணச்சொத்து வரிக்கான பொறுப்பு

**20.** (*1*) மரணமெய்தியவரின் மரணச்சொத்தின் நிறைவேற்றுநர், மரணமெய்தியவர் தமது மரணத்தின்பொழுது கையுதிர்க்கக் தகுதிவாய்ந்தவராயிருந்த எல்லா ஆதனம் தொடர்பிலும் மரணச் சொத்து வரியைச் செலுத்துதல்வேண்டும் என்பதுடன், அத்தகைய மரணத்தின்மேல் கைமாறும் வேறு ஏதேனும் ஆதனம் தொடர்பாக மரணச் சொத்து வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆட்கள் அத்தகைய கொடுப்பனவைச் செய்யும்படி அவரை வேண்டினால் மரணமெய்தியவரின் நிறைவேற்றுநர் அவ்வாறு செலுத்தலாம்; ஆனால் மரணமெய்தியவரின் மரணச்சொத்தின் நிறைவேற்றுநர், மரணமெய்தியவரின் மரணச் சொத்தின் நிறைவேற்றுநர் என்ற முறையில் பெற்றுக்கொண்ட அல்லது அவர் கவனவீனமாக இராதிருப்பின் அல்லது தவறுகை புரியாதிருப்பின் பெற்றிருக்கக்கூடிய சொத்துக்களுக்கு மேலதிகமான ஏதேனும் வரியைச் செலுத்துதற்கு ஆளாதலாகாது.

(*2*) மரணமெய்தியவரினது மரணத்தின்மேல் ஆதனம் கைமாறுமிடத்தும் மரணமெய்தியவரின் நிறைவேற்றுநர், அத்தகைய ஆதனம் தொடர்பான மரணச் சொத்து வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவிராதவிடத்தும், ஏதேனும் ஆதனம் அவ்வாறு கைமாறிய அல்லது கைமாறியதாகக் கருதப்படும் ஒவ்வோர் ஆளினாலும் உண்மையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது கையுதிர்க்கப்பட்ட ஆதனத்தின் அளவிற்கு அத்தகைய ஒவ்வோர் ஆளும், அவ்வாறு கைமாறும் ஆதனத்திலுள்ள ஏதேனும் அக்கறை அல்லது அதன் முகாமை எந்நேரத்திலேனும் உரித்தாகும் ஒவ்வொரு நம்பிக்கை பொறுப்பாளரும்; பாதுகாவலரும், காப்பாளரும், முகாமையாளரும் அல்லது வேறு ஆளும், அத்துடன் பராதீனப்படுத்துதல் மூலம் அல்லது வேறு வழிவந்த உரித்து மூலம் அதன்

உடமை உரித்தாக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும் அந்த ஆதனத்தின்மீதான மரணச்சொத்து வரியைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் காலத்திற்குள் அல்லது அனுமதிக் கப்படக் கூடிய அத்தகைய பிந்திய காலத்திற்குள் ஆதனம்பற்றிய வெளிப் படுத்துகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைத்தலும் வேண்டும்:

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், இலங்கையில் வதியும் இன்னோர் ஆளுக்கு முகவராக மட்டும் செயலாற்றுகின்ற ஆளொருவரை மரணச்சொத் துவரி செலுத்துவதற்கு ஆளாக்குதலாகாது.

**21.** *(1)* இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக —

(அ) மரணமெய்தியவரின் நிறைவேற்றுநர் ஒருவரால் செலுத்தப்படவேண் டிய மரணச் சொத்துவரி, மரணமெய்தியவர் தமது மரணத்தின்போது கையுதிர்க்கத் தகுதிவாய்ந்தவராகவிருந்த ஆதனமெல்லாவற்றின் மீதும் முதற் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொறுப்பு அத்தகைய மரணச்சொத்துவரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அறவிடுவதற்காக அத்தகைய ஏதேனும் ஆதனத்திற்கு எதி ராக வலியுறுத்தவும்படலாம் ;

(ஆ) ஏதேனும் ஆதனம் தொடர்பாக மரணமெய்தியவரின் நிறைவேற்றுநர் அல்லாத வேறு எவரேனும் ஆளினால் செலுத்தப்படவேண்டிய மரணச் சொத்துவரி, அவ்வாதனத்தின்மீது முதற் பொறுப்பாதல் வேண்டும்.

*(2)* இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு அமைய, *(1)* ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முதற்பொறுப்பு, மரணத்தின் முன்னர் அல்லது மரணத்தின் பின்னர் செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட பரா தீனப்படுத்துதல்கள், குத்தகைகள், பாரபந்தங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின் —

(அ) அத்தகைய பொறுப்பு, அறிவித்தல் இல்லாமல் பெறுமதியான பிரதிபய னுக்காக அதன் நன்னோக்கக் கொள்வனவுகாரர் ஒருவருக்கு அத்தகைய பொறுப்பை நிறைவேற்றுவதில் அதனைக் கைப்பற்றிய தேதிக்கு முன் னர் விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் ஆதனத்திற்கு நீடித்தலாகாது:

(ஆ) அசைவற்ற ஆதனம் தொடர்பாக, அத்தகைய பொறுப்பு மரணத் தேதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட சாதனம் மூலம் பெறுமதிக்காக நன்னோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஏதேனும் குத்தகைக்கு அல்லது பாரபந்தத்திற்கு மேலாக முன்னுரிமை கொண்டிருத்தலாகாது ;

(இ) அசைவுள்ள ஆதனம் தொடர்பாக, அத்தகைய பொறுப்பு, மரணத் தேதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட சாதனம் மூலம் பெறுமதிக்காக நன்னோக்கத்துடன் உருவாக்கப்பட்ட அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் ஈட்டுக்கு அல்லது அடைமானத்திற்கு மேலாக முன்னுரிமை கொண்டி ருத்தலாகாது.

(3) இச்சட்டத்திலுள்ளதெதுவும், இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் ஆதனத்தின்மீது மரணச்சொத்து வரிக்கான பொறுப்பொன்றை உருவாக்குவதாகக் கருதப்படுதலாகாது.

22. (1) ஏதேனும் ஆதனம் தொடர்பாக மரணச்சொத்து வரியைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவர், அவ்வரியைச் செலுத்தும் நோக்கத்திற்காக அல்லது ஏற்கனவே செலுத்தப்பட்ட வரித்தொகையைத் திரட்டும் நோக்கத்திற்காக, அவ் ஆதனம் அவருக்கு உரித்தாக்கப்பட்டிருப்பினும் சரி அல்லாவிடினுஞ்சரி அந்த ஆதனத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் விற்பனை மூலம் அல்லது ஈடுமூலம் அல்லது அதன்மீதான முடிவுறுத்தப்படக்கூடிய பொறுப்பொன்றின் மூலம் அது தொடர்பாக அவரினால் தகுந்த முறையில் உறப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட அத்தகைய வரியினதும் ஏதேனும் வட்டியினதும் செலவுகளினதும் தொகையைத் தோதான மாவட்ட நீதிமன்றத்தின் சம்மதத்துடன் திரட்டுவதற்குத் தத்துவம் உடையவராதல் வேண்டும்.

(2) அந்த ஆதனம் தொடர்பான மரணச்சொத்து வரியைச் செலுத்தும் ஏதேனும் ஆதனத்தின் குத்தகைபெறுநர் ஒருவர் அல்லது ஈடு பெறுநர் ஒருவர், அந்த ஆதனம் தொடர்பான மரணச்சொத்து வரி அவருக்கு ஈடு ஒன்றை வைத்ததன் மூலம் திரட்டப்பட்டிருந்தது என்றாற்போன்று அதேபோன்ற விதிப்பனவிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

23. மரணமெய்தியவரின் நிறைவேற்றுநர் ஆளொருவரின் எந்த ஆதனத்தின் மீது மரணச்சொத்து வரியைச் செலுத்துவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த ஆதனத்தில் பயனுகர் அக்கறை கொள்ளக்கூடியவர்களான பல்வேறு ஆட்களுக்கிடையில். அத்தகைய ஆதனம் தொடர்பாகச் செலுத்தப்பட்ட அத்தகைய எல்லா வரியும், மரணமெய்திய ஆளினால் உறப்பட்ட கடனென்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மரணமெய்திய ஆள் தமது இறுதி விருப்பாவணத்தின் மூலம் (ஏதேனுமிருப்பின்) வேறுவிதமாகப் பணித்திருந்தாலன்றி, அத்தகைய மரணமெய்திய ஆளின் ஆதனத்தில் அத்தகைய ஆட்களுக்குள்ள அக்கறைகளினது பெறுமதிகளின் விகிதாசாரப்படி அத்தகைய ஆட்களுக்கிடையில் பங்கிடப்படுதலும் வேண்டும்.

## அத்தியாயம் VII
## வெளிப்படுத்துகைகள்

24. (1) எந்த மரணச்சொத்துத் தொடர்பாக குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின்கீழ் மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகத்தத்துவப்பத்திரம் வழங்குதல் கட்டாயமாகவுள்ளதோ அந்த மரணச்சொத்துத் தொடர்பாக ஒவ்வொரு மரணச்சொத்தின் நிறைவேற்றுநரும், மரணமெய்தியவர் மரணமெய்திய தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள், அவ்வாதனத்தின் பெறுமதியுட்பட மரணமெய்தியவரின் மரணச்சொத்துத் தொடர்பான விவரங்கள் பற்றிய முழுமையானதும் உண்மையானதுமான கூற்றொன்றைக் கொண்டிருப்பதும், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதுமான ஆதனம் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைத் தோதான மாவட்ட நீதிமன்றத்திற்கு ஊடாக ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன்,

வேறு ஏதேனும் மரணச்சொத்தின் நிறைவேற்றுநர் அவ்வாறு ஒப்படைக்க லாம்; அத்துடன் அவர். ஆதனம்பற்றிய அத்தகைய வெளிப்படுத்துகையுடன் சேர்த்து மரணமெய்தியவரின் விருப்பாவணத்தின் (ஏதேனுமிருப்பின்) அத் தாட்சிப்படுத்திய பிரதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்ப டைத்தல் வேண்டும்.

(2) மரணமெய்திய ஆளொருவரின் மரணத்தின்மீது கைமாறும் ஏதேனும் ஆதனம் தொடர்பாக மரணச்சொத்து வரி செலுத்துவதற்கு மரணமெய்திய வரின் நிறைவேற்றுநர் ஆளாகாதவிடத்து, அத்தகைய வரியைச் செலுத்து வதற்கு ஆளாகவுள்ளவர், மரணமெய்தியவரின் மரணத்தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், அவ் ஆதனத்தின் பெறுமதியுட்பட அத்தகைய ஆதனம் தொடர்பான, விவரங்கள் பற்றிய முழுமையானதும் உண்மையானதுமான கூற்றென்றைக் கொண்டிருப்பதும், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதுமான ஆதனம் பற் றிய வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப் படைத்தல் வேண்டும்.

**25.** எவரேனும் நிறைவேற்றுநரினால் அல்லது மரணச்சொத்துவரி செலுத்து வதற்கு ஆளாகவுள்ள வேறு ஆளினால் ஒப்படைக்கப்பட்ட ஆதனம் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகையில் —

(அ) மரணச் சொத்து வரிக்கு இலக்கான ஆதனம் அதிலிருந்து விடுபட்டுள்ள தான; அல்லது

(ஆ) மரணச் சொத்துவரிக்கு இலக்கான ஆதனம் அதில் குறைவாக மதிப் பிடப்பட்டுள்ளதான ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்படாத கழிவொன்று கோரப்பட் டுள்ளதான,

பிழையொன்று உள்ளதென மரணச் சொத்துவரி செலுத்துவதற்கு ஆளாக வுள்ள எவரேனும் மரணமெய்தியவரினது நிறைவேற்றுநரின் அல்லது வேறு ஆளின் கவனத்திற்கு எந்நேரத்திலாவது வருமிடத்து, அத்தகைய பிழை பற் றிய விவரங்களைக் காட்டுகின்ற மேலுமொரு வெளிப்படுத்துகையை ஆணையா ளர் தலைமையதிபதியிடம் அவர் உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

**26.** (1) இச்சட்டத்தின்கீழ் வரி மதிப்பீடொன்றைச் செய்யும் நோக்கத் திற்காக வரி மதிப்பீட்டாளர் ஒருவர் அவசியமானவையெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய விவரங்களை வரிமதிப்பீட்டாளரினால் கொடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் கொடுத்து தவும்படி தேவைப்படுத்தி அந்த வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் எவ ரேனும் மரணமெய்திய ஆளின் அலுவல்கள் தொடர்பாகத் தகவல் தரக்கூடி யவராகவுள்ள எவரேனுமாளுக்கு அவ்வாறு எழுத்தில் அறிவித்தல் கொடுக் கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் வரிமதிப்பீடொன்றைச் செய்யும் நோக்கத்திற்காக வரிமதிப்பீட்டாளர் ஒருவர் அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான எவையேனும் உறுதிகளை, வரைப்படங்களை, சாதனங்களை, புத்தகங்களை, கணக் குகளை அல்லது ஆவணங்களை வரிமதிப்பீட்டாளரினால் கொடுக்கப்படும் எழுத்

திலான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் வரிமதிப்பீட்டாள ரினால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் காண்பிக்கும்படி, ஆதனம் பற்றிய வெளிப்படுத்துகையொன்றை செய்யுமாறு இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்ட அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று விழித் தெழுதப்பட்ட எவரேனும் ஆளைக் கோரி, அவ்வாறு எழுத்தில் அறிவித்தல் கொடுக்கலாம்.

## அத்தியாயம் VIII

### வரிமதிப்பீடுகள்

**27.** வரிமதிப்பீட்டாளர் ஒருவர், எந்நேரத்திலாயினும் ஆதன வெளிப் படுத்துகை ஒப்படைக்கப்பட்டிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, மரணமெய் திய ஆள் ஒருவரின் மரணச்சொத்துத் தொடர்பாக செலுத்தற்பாலதான மரணச்சொத்து வரியினை மதிப்பீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய மர ணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்கு ஆளானவரென அல்லது ஆளானவர் களென அவர் கருதுகின்ற ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அத்தகைய வரி மதிப்பீடு பற்றிய அறிவித்தல் ஒன்றினை வழங்குதலும் வேண்டும்.

**28** (1) மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச் சொத்துத் தொடர்பாக மரணச்சொத்து வரியினை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானவையென அவர் கருதுவனவான அத்தகைய விவரங்களை வரிமதிப்பீட்டாளர் ஒருவர் பெற் றுக்கொண்டதன் பின்னர், ஆண்டொன்றுக்குள்ளாக மரணச் சொத்துத் தொடர்பாகச் செலுத்தற்பாலதான மரணச்சொத்து வரியினை அவர் வரி மதிப்பீடு செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரியானது எந்த ஆளி னால் அல்லது எந்த ஆட்களினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதனையும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் மரணச்சொத்து வரியென்றவகையில் செலுத்து வதற்கு ஆளாகியிருக்கின்ற தொகை, சரியான தொகையிலும் பார்க்கக் குறைந்த தொகையில் வரிமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதென வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்குத் தோன்றுமிடத்து, வரிமதிப்பீட்டாளர், மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச் சொத்துத் தொடர்பாக மரணசாதனத் தத்துவப்பத்திரம் அல்லது மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென மரண மெய்திய அந்த ஆளின் மரணசாதன நிறைவேற்றுநர் அல்லது மரணச் சொத்து நிருவாகி, எழுத்தில் வரிமதிப்பீட்டாளருக்கு அறிவித்த தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் எந்நேரத்திலாயினும், வரிமதிப் பீட்டாளர், அவரது கருத்துப்படி அந்த ஆள் செலுத்துவதற்கு ஆளாகின்ற தொகைக்கு மேலதிக வரிமதிப்பீடு ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், மேலதிக வரிமதிப்பீடு செய்ததற்கான காரணங்களையும் அந்த ஆளுக்கு எழுத் தில் அறிவித்தல் வேண்டும்;

ஆயின் :—

(அ) குறைத்து வரிமதிப்பிடப்பட்டதற்கு மோசடி அல்லது வேண்டு மென்ற தவிர்வு காரணமாக இருக்குமிடத்து, அத்தகைய மேலதிக வரிமதிப்பீடானது எந்நேரத்திலாயினும் செய்யப்படலாம்;

(ஆ) வரிமதிப்பீட்டாளர் ஒருவர், நிறைவேற்றுநர் ஒருவரால் அல்லது இச்சட்டத்தின்கீழ் மரணச்சொத்துவரி செலுத்துவதற்கு ஆளானவ

ராகவுள்ள வேறு எவரேனும் ஆளினுல் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்படக்கூடியதும் மேலதிக வரிக்கு ஆளாவதற்கானது மான பொறுப்பு எதனையும் எந்நேரத்திலேனும் வரிமதிப்பீடு செய்யலாம்;

(இ) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேலதிக வரிமதிப்பீடு ஒன்று, 40ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களிலன்றி, 40 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஆதனத்தைப் பாதித்தலாகாது அல்லது அந்த ஆதனத்தைப் பொறுப்புக்குள்ளாக்குதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் மரணச்சொத்துமீது மேலதிக வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, நிறைவேற்றுநர் ஒருவர் மோசடி விடயத்திலன்றி, மரணச்சொத்து வரியினைக் கொடுத்துத் தீர்ப்பதற்கென சொத்துக்களைப் பிடித்துவைக்காமல், மரணமெய்தியவரின் மரணச்சொத்தினை நிருவகித்தமை காரணமாக அல்லது பகிர்ந்தளித்தமை காரணமாக அத்தகைய ஏதேனும் மேலதிக வரி மதிப்பீட்டின்கீழ் மரணச்சொத்துவரி எதனையும் தனிப்பட்ட முறையில் செலுத்துவதற்கு ஆளானவராதலாகாது.

(4) வரிமதிப்பீட்டாளர் ஒருவர், 24 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் ஆளினுல் ஒப்படைக்கப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்றினை ஏற்றுக்கொள்ளாது அத்தகைய ஆளின்மேல் வரிமதிப்பீடொன்றினை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றினைச் செய்யுமிடத்து, வரிமதிப்பீட்டாளர் அத்தகைய ஆளுக்கு அந்த வெளிப்படுத்துகையினை ஏற்றுக்கொள்ளாததற்கான அவரது காரணத்தை எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

## அத்தியாயம் IX

## மேன்முறையீடுகள்

**29.** (1) அவர் மரணச்சொத்துவரி செலுத்துவதற்கு ஆளானவரல்ல என்ற ஏதுவின் மீதாயினுஞ்சரி அல்லது வரிமதிப்பீடு தவறுனது என்ற ஏதுவின் மீதாயினுஞ் சரி இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வரிமதிப்பீடொன்றினுல் இன்னலுறுகின்ற ஆள் எவரும், வரிமதிப்பீடு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கொண்ட ஒரு காலப்பகுதிக்குள்ளாக, அத்தகைய வரிமதிப்பீட்டுக்கு எதிராக, ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம் ;

ஆயின், இலங்கையில் இல்லாமை காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது நியாயமான வேறு காரணத்தால் மேன்முறையீட்டாளர் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக மேன்முறையீடு செய்வதினின்றும் தடுக்கப்பட்டார் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டதன்மேல், மேன்முறையீடு செய்வதற்கென காலநீடிப்பு ஒன்றினை அவர் வழங்குதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மேன்முறையீடும், ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனு ஒன்றின் மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைக் குறிப்பாகக் கூறுதலும் வேண்டும்.

(3) எந்த வரிமதிப்பீட்டுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த வரிமதிப்பீடானது, 24 ஆம் பிரிவின்கீழ் ஒப்படைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதான ஆதன வெளிப்படுத்துகையொன்றின்றிற் செய்யப்பட்டுள்ளதாக இருக்குமிடத்து, மேன்முறையீட்டாளர் அவரின் மேன்முறையீட்டு மனுவுடன் சேர்த்து ஆதன வெளிப்படுத்துகை ஒன்றினையும் ஒப்படைத்தல் வேண்டும்.

(4) ஒராம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியமையாதிருக்கும் மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ், அவர் எந்தத் தேதியில் மேன்முறையீடு செய்கிறாரோ அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக, அவரின் மேன்முறையீட்டுக்கு ஆதரவாக எந்த ஆவணங்களையும், எந்த ஆட்களின் சான்றினையும் நம்பியிருக்க உத்தேசித்துள்ளாரோ அந்த ஆவணங்களையும், அந்த ஆட்களின் பெயர்களையும் பதவிப் பெயர்களையும் குறித்துரைக்கும் நிரல் ஒன்றினை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்;

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதியானவர், மேன்முறையீட்டாளரால் அதற்கென விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டதான காலப்பகுதியினை காலத்திற்குக் காலம் நீடிக்கலாம்.

(6) செல்லுபடியான மேன்முறையீட்டு மனு ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதியானவர் வரிமதிப்பீட்டாளரினால் மேலும் விசாரணை நடாத்தப்பட ஏற்பாடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின்போது மேன்முறையீட்டு மனுவில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் உடன்படிக்கை ஏற்படுமிடத்து, வரிமதிப்பீட்டில் தேவையான திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

(7) ஆறும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேன்முறையீட்டாளருக்கும் வரிமதிப்பீட்டாளருக்கும் இடையில் உடன்படிக்கை எதுவும் ஏற்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், மேன்முறையீட்டினை விசாரிப்பதற்கான நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(8) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும், ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னர் மேன்முறையீட்டினை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டதான நேரத்திலும் இடத்திலும் வருகை தருதல் வேண்டும். மேன்முறையீட்டாளரானவர் மேன்முறையீட்டு விசாரணையில் நேரிலோ அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ வருகை தரலாம். ஆணையாளர் தலைமையதிபதியானவர், அவர் பொருத்தமானதெனக் கருதினால், காலத்திற்குக் காலம் அந்நோக்கத்திற்கென அவர் நியமிக்கக்கூடியதான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டு விசாரணையினை ஒத்திவைக்கலாம். அதிகாரம் வழங்கப்பட்டவரான பிரதிநிதி ஒருவர், மேன்முறையீட்டாளர் சார்பில் வருகை தருவதான ஏதேனும் விடயத்தில், ஆணையாளர் தலைமையதிபதியானவர் மேன்முறையீட்டினை ஒத்திவைக்கலாம் என்பதுடன், மேன்முறையீட்டாளர் நேரில் வருகைதருவது மேன்முறையீட்டினைத் தீர்மானிப்பதற்கு அவசியமானதென அவர் கருதினால், மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட விசாரணைக்

கென நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டாளர் நேரில் வருகைதர வேண்டும் எனத் தேவைப்படுத்தலாம். மேன்முறையீட்டாளர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி மேன்முறையீட்டின் விசாரணைக்கென அல்லது மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட விசாரணைக்கென நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதரத் தவறினுல், அல்லது மேன்முறையீட்டாளர், ஆணையாளர் தலைமையதிபதியினுல் வருகைதர வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டபோது வருகைதரத் தவறினுல், ஆணையாளர் தலைமையதிபதியானவர் மேன்முறையீட்டினைத் தள்ளுபடி செய்யலாம்.

ஆயின், மேன்முறையீட்டாளரானவர், மேன்முறையீடு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்டதன் பின்னர், நியாயமான காலத்திற்குள்ளாக, அவர், அல்லது அவரின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி, அத்தகைய மேன்முறையீட்டின் விசாரணையில் அல்லது ஒத்திவைக்கப்பட்ட விசாரணையில் இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக, அல்லது வேறு தவிர்க்கமுடியாத காரணத்தால் உரியமுறையில் வருகைதர முடியாமல் தடுக்கப்பட்டார் என்பது குறித்து ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்தினுல் ஆணையாளர் தலைமையதிபதியானவர், தள்ளுபடி செய்யும் அந்தக் கட்டளையினை வறிதாக்கலாம் என்பதுடன், மேன்முறையீட்டு விசாரணைக்கென நேரத்தையும் இடத்தையும் குறிக்கலாம்.

(9) இப்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டதான ஏதேனும் மேன்முறையீட்டின் மீது தீர்மானம் ஒன்றினைச் செய்வதற்கு முன்னர், ஆணையாளர் தலைமையதிபதியானவர் —

(அ) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிரலில் உள்ளடக்கப்பட்டதான ஆவணம் எதனையும் பார்வையிடலுக்கெனச் சமர்ப்பிக்குமாறு அல்லது அந்த நிரலில் குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆளைச் சான்ருக அழைக்குமாறு மேன்முறையீட்டாளரைத் தேவைப்படுத்தலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டாளர், அவர் முன்னிலையில் முன்வைக்க விரும்பக்கூடிய சான்று எதனையும் சீர்தூக்கிப் பார்க்கலாம்.

(10) ஆணையாளர் தலைமையதிபதியானவர் மேன்முறையீடு தொடர்பான மேன்முறையீட்டாளரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் சான்றினை விசாரிக்குமிடத்து, அவர் அத்தகைய சான்றின் பதிவினை வைத்திருத்தல் வேண்டும் அல்லது வைத்திருக்குமாறு செய்வித்தல் வேண்டும்.

(11) இப்பிரிவின் கீழான மேன்முறையீடு ஒன்றினைத் தீர்மானிப்பதில் ஆணையாளர் தலைமையதிபதியானவர், எந்த வரிமதிப்பீடுபற்றி மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டினை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது நீக்கலாம்; அத்துடன், அவர் மேன்முறையீட்டின் மீதான தமது தீர்மானம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேன்முறையீட்டாளருக்கு வழங்குதல் வேண்டும்.

**30.** (1) ஆணையாளர் தலைமையதிபதி மேன்முறையீடொன்றன் மீதான அவரது தீர்மானத்தை அறிவித்ததன் பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக எந்நேரத்திலாயினும், மேன்முறையீட்டாளர், ஆணையாளர் தலைமையதிபதி

யைத் தமது மனுவுக்கு எதிர்வாதியாகப் பெயர்குறித்து, தோதான மாவட்ட நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்யலாம். அத் தகைய மனுவின் பிரதி ஒன்று ஆணையாளர் தலைமையதிபதியிடம் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டாளர், மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தும், அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக ஆணையாளர் தலைமையதிபதியிடம் மேன்முறையீட்டு மனு வின் ஒரு பிரதியினைச் சேர்ப்பிக்கத் தவறியுள்ளவிடத்து, மாவட்ட நீதிமன்ற மானது அத்தகைய மனுவைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

(3) நீதிமன்றத்தின் இசைவுடனன்றியும், நீதிமன்றம் தீர்மானிக்கும் அத் தகைய நியதிகளுக்கமைவாக அன்றியும், மேன்முறையீட்டாளர் மேன்முறை யீட்டு விசாரணையின்போது —

(அ) இருபத்தொன்பதாம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட நிரலில் உள்ளடக்கப்படாததான ஆவணம் எதனையும் சமர்ப்பிப்பதற்கோ அல்லது அந்த நிரலில் குறிப்பிடப்படாத சாட்சி யாளர் எவரினதும் சான்றை முன்வைப்பதற்கோ; அல்லது

(ஆ) இருபத்தொன்பதாம் பிரிவின் (9) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டபோது சமர்ப்பிக்கத் தவறியதான ஆவணம் எதனையும் சமர்ப்பிப்பதற்கோ அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னர் அந்த உட்பிரிவின்கீழ் எந்தச் சாட்சியாளரின் சான்று முன்வைக்கப்பட வேண்டுமென அழைக்கப்பட்டபோது முன்வைக்கப்படாதிருந்ததோ அந்த எவரேனும் சாட்சியாளரின் சான்றினை முன்வைப்பதற்கோ

அனுமதிக்கப்படுதலாகாது.

(4) மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டதன் மேலும், ஆணை யாளர் தலைமையதிபதியிடம் அதன் ஒரு பிரதியினைச் சேர்ப்பித்ததன் மேலும், மேன்முறையீடானது, வழக்காளியாக மேன்முறையீட்டாளருக்கும் பிரதிவாதி யாக ஆணையாளர் தலைமையதிபதிக்கும் இடையில் உள்ள வழக்கொன்றுகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், வழக்காளியாக மேன்முறையீட்டாளருக் கும் பிரதிவாதியாக ஆணையாளர் தலைமையதிபதிக்கும் இடையில் உள்ள வழக் கொன்று என்றுற்போன்று தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்; அத் துடன் அதற்கிணங்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினதும் முத்திரைக் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் இதனகத்துப்பின்னர் ஏற் பாடு செய்யப்பட்டவற்றிற்கு அமைவாக, ஏற்புடையனவாதலும் வேண்டும்;

ஆயின், மேன்முறையீட்டாளரின் மனு தவிர்ந்த வழக்குரைகள் எதுவும் நீதிமன்றமானது அந்த வழக்கில் பிறப்பித்த கட்டளையில் வேறு வகையாகப் பணித்திருந்தாலன்றி, அத்தகைய வழக்கில் தாக்கல் செய்யப்படுதலாகாது.

ஆயின், மேலும், அத்தகைய ஏதேனும் வழக்கில் எழுதப்பட்டதான தீர் வையானது, இச்சட்டத்தின் கீழ் மரணச்சொத்துவரியென்ற வகையில் மேன் முறையீட்டாளர் செலுத்துவதற்கு ஆளானதான தொகை, ஏதேனும் இருப் பின், அத்தொகையினைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(5) இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மேன்முறையீடொன்றன்மேல் மாவட்ட நீதிமன்றத்தினால் எழுதப்பட்ட தீர்வையினால் அல்லது ஆக்கப்பட்ட கட்டளையினால் இன்னலுறுகின்ற எவரேனும் கட்சிக்காரர் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புக்களுக்கும் கட்டளைகளுக்கும் எதிரான மேன்முறையீடுகள் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ளதான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய தீர்வைகளுக்கு அல்லது கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(6) மாவட்ட நீதிமன்றத்தின், அல்லது வேறு ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் எல்லாவற்றிலும், ஆணையாளர் தலைமையதிபதியானவர், பதவிவழியான வழக்கொன்றில் வழக்குத் தொடருபவரான அல்லது அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டவரான அரசாங்க அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பணத்தை வைப்பிலிடுமாறு அல்லது ஏதேனும் கட்டணத்தைச் செலுத்துமாறு அல்லது ஏதேனும் பிணைப்பொறுப்பினைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது.

### அத்தியாயம் X

### வரிமதிப்பீடுகளின் இறுதியான தன்மையும் பிழையான வெளிப்படுத்துகைகளுக்கான தண்டமும்

**31.** மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச்சொத்துத் தொடர்பாகச் செலுத்தற்பாலதான மரணச்சொத்துவரிபற்றிய வரிமதிப்பீடொன்றுக்கு எதிராக இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாகச் செல்லுபடியான மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து, அல்லது அத்தகைய வரிமதிப்பீடொன்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடொன்று, 29 ஆம் பிரிவின் (11)ஆம் உட்பிரிவின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விடத்து, அல்லது அத்தகைய வரித்தொகை தொடர்பாக, 29 (6)ஆம் பிரிவின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளவிடத்து, அல்லது அத்தகைய தொகையானது மேன்முறையீட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கு ஏற்றுற்போல, செய்யப்பட்டதான அல்லது உடன்பட்டுக் கொள்ளப்பட்டதான அல்லது மேன்முறையீட்டில் தீர்மானிக்கப்பட்டதான வரிமதிப்பீடானது, அத்தகைய தொகை தொடர்பாக இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

ஆயின், இப்பிரிவிலுள்ளதெதுவும் மேன்முறையீட்டில் தீர்மானிக்கப்பட்டதான விடயம் எதனையும் திரும்பவும் பரிசீலனைக்கு எடுப்பதை உள்ளடக்காததான வரிமதிப்பீடொன்றினை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றினை வரிமதிப்பீட்டாளர் செய்வதனைத் தடுத்தலாகாது.

**32.** (I) மரணமெய்திய ஆள் எவரினதும் மரணச்சொத்துத் தொடர்பாகச் செய்யப்பட்ட வரிமதிப்பீட்டொன்றில், மரணச்சொத்தில் அடங்கியுள்ள ஆதனம் எதற்குமிடப்பட்ட பெறுமதி, அந்த மரணச்சொத்துத் தொடர்பாக ஒப்படைக்கப்பட்ட வெளிப்படுத்துகை எதனிலும் அந்த ஆதனத்திற்கிடப்பட்ட பெறுமதியினை விஞ்சுமிடத்தும், அத்தகைய வரிமதிப்பீடானது, 31ஆம் பிரிவின் கீழ் முற்றானதும் முடிவானதுமாக இருக்குமிடத்து, அந்த வெளிப்படுத்து

கையில் அவரால் செய்யப்பட்ட வெளிப்படுத்தலில் மோசடி அல்லது வேண்டுமென்ற கவலையீனம் எதுவும் இல்லை என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படும் வகையில் அந்த வெளிப்படுத்துகையினை ஒப்படைத்த ஆள் எண்பித்தாலன்றி, ஆணையாளர் தலைமையதிபதியானவர், தவறான வெளிப்படுத்துகையினைச் செய்தமைக்கான தண்டமொன்றாக, இரண்டாயிரம் ரூபாவையும் மேலதிகத் தொகையின் மீதான மரணச்சொத்து வரிக்குச் சமமான ஒரு தொகையினையும் கூட்டிவரும் மொத்தத்திற்கு அதிகமாகத் தொகை ஒன்றினையும் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவ்வாள் செலுத்த வேண்டுமென எழுத்தில் கட்டளையிடலாம்.

(2) எவ்வாள் தொடர்பில், (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளை, ஒன்று பிறப்பிக்கப்படுகிறதோ அவ்வாள், அக்கட்டளை அவருக்கு அறிவிக்கப்பட்டபின்னர். இருபத்தொரு நாட்களுக்குள்ளாக, அதற்கு எதிராக எழுத்தில் தோதான மாவட்ட நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம். கட்டளையை ஆட்சேபிப்பதற்கான ஏதுக்களை மேன்முறையீடானது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) முப்பதாம் பிரிவின் ஏற்பாடுகள், முடிந்தவரை இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் மேன்முறையீட்டை விசாரணை செய்தலுக்கும், ஏதேனும் மேன்முறையீட்டை முடிவுசெய்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். மாவட்ட நீதிமன்றமானது, ஆணையாளர் தலைமையதிபதியின் எக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ, அக்கட்டளையினால் விதிக்கப்பட்டதான தண்டத்தினை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது நீக்கலாம், ஆனால், அத்தகைய தண்ட அதிகரிப்பு எதுவும் ஆணையாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய தண்டமாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்திருக்கக்கூடியதான மிக உயர்ந்த தொகைக்கு அதிகமானதாக இருத்தலாகாது.

(4) இப்பிரிவின் கீழ் எவரேனும் ஆளின்மீது தண்டம் ஒன்று விதிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாள், அந்த வெளிப்படுத்துகை தொடர்பில், 64 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான தவறொன்றுக்கான வழக்குத் தொடருகை எதற்கும் ஆளானவராதலாகாது.

## அத்தியாயம் XI
## மரணச்சொத்து வரியினைச் செலுத்துதல்

**33** (1) மரணச்சொத்து வரியானது வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்றில் பணிக்கப்பட்ட விதத்தில், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதியானவர், வரி அல்லது அதனின் ஏதேனும் பாகம் செலுத்தப்படுதல் என்பது கட்டளையொன்றில் குறிக்கப்படும் ஒரு தேதி வரை நிறுத்திவைக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிட்டாலன்றி, ஏதேனும் மேன்முறையீடு உள்ளமை எப்படி இருப்பினும், மரணச் சொத்து வரியானது செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) வரிமதிப்பீட்டு அறிவித்தலில், அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாததான மரணச்சொத்து வரி எதுவும், ஆணையாளர்

தலைமையதிபதியானவர் மரணச்சொத்து வரிக்கொடுப்பனவைத் தவணைப்பணங்களாக ஏற்றுக்கொள்ள இணங்கியிருந்தாலன்றி, செலுத்தத் தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**34.** (I) இச்சட்டத்தின் கீழ் மரணச்சொத்து வரியினைச்செலுத்துவதற்கு ஆளானவரான ஆள் எவரும், அதனைச் செலுத்துவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குமுன்னர், அத்தகைய வரித்தொகைக்கு பெறுமதிவகையில் சமமானதும் மரணமெய்திய ஆளின் மரணத்தின் மேல் கைமாறுவதுமான அசைவற்ற ஆதனத்தை, அத்தகைய வரியினை ரொக்கமாகச் செலுத்துவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திற்கு கைமாற்றப்படவேண்டும் என ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ் செய்யலாம்.

(2) அமைச்சரின் அங்கீகாரத்துடனன்றி, அத்தகைய விண்ணப்பம் எதனையும் ஆணையாளர் தலைமையதிபதியானவர் வழங்குதல் அல்லது மறுத்தல் ஆகாது.

(3) இப்பிரிவின் கீழ் வரியினைச்செலுத்தும்வகையில் கைமாற்றப்பட்டதான அசைவற்ற ஆதனம் எதனதும் பெறுமதியானது இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென தீர்மானிக்கப்பட்டவாறான அவ்வாதனத்தின் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

(4) மரணச்சொத்து வரியினைச் செலுத்தும் வகையில் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அரசாங்கத்துக்கு கைமாற்றுவதன் இடைநேர்விளைவாகவும் அத்தகைய ஆதனத்திற்கான உரித்தைப் பரிசீலனை செய்தல், அத்தகைய ஆதனத்தின் கைமாற்று உறுதியை எழுதி நிறைவேற்றுதல் ஆகியவற்றின் இடைநேர் விளைவாகவும் அல்லது இவை தொடர்பிலும் உறப்படுகின்ற எல்லாக்கட்டணங்களும், இறுப்பனவுகளும், செலவுகளும் விண்ணப்பகாரரினாலேயே பொறுக்கப்படல் வேண்டும்.

**35.** (1) ஏதேனும் மரணச்சொத்துவரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினை ரொக்கமாகச் செலுத்துவதற்குப் பதிலாக, இப்பிரிவின் அடுத்துப் பின்வரும் ஏற்பாடுகளுக்கு இணங்க, அரசாங்கப் பங்குத் தொகுதிகளாகத் திறைசேரிச் செயலாளரிடம் ஒப்படைக்கப்படலாம்.

(2) பங்குத் தொகுதி எதுவும்-

(அ) இலங்கையில் வழங்கப்பட்டதான இலங்கை அரசாங்கப் பங்குத்தொகுதியாக இருந்தாலன்றி, அத்துடன்

(ஆ) மரணமெய்தியவராலேயே அது வழங்கப்பட்ட நேரத்தில் அதற்குப் பணம் கொடுக்கப்பட்டதாக அல்லது மரணமெய்தியவர் இறப்பதற்குக் குறைந்தது ஓர் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டதாக இருந்தாலன்றி, இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

(3) ஒப்படைக்கப்பட்ட பங்குத்தொகுதியானது முற்றாகப் பணம்செலுத்தப்பட்ட பங்குத் தொகுதியாக வும், வழங்கப்பட்டதாகவும் சம பெறுமதியில் மீட்கப்படக்கூடியதாகவும் இருக்குமிடத்து, அத்தகைய பங்குத் தொகுதியினை ஒப்படைப்பதானது,

(அ) அத்தகைய பங்குத் தொகுதியின் முகத்தோற்ற அளவிலான பெறுமதி; அத்துடன்

(ஆ) அத்தகைய பங்குத் தொகுதியின்மீதான திரண்ட வட்டி, ஆகியனவற்றின் கூட்டு மொத்தத்திற்குச் சமமான தொகையொன்றினை ரொக்கமாகச் செலுத்துவதற்குச் சமமானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒப்படைக்கப்பட்ட பங்குத்தொகுதி முற்றாகப் பணம் செலுத்தப்படாதது தாக, அல்லது சம பெறுமதிக்குக் குறைவாக வழங்கப்பட்டதாக, அல்லது சம பெறுமதிக்கு அதிகமானதான அல்லது குறைவானதான தொகை ஒன்றினால் மீட்கப்படக்கூடியதாக இருக்குமிடத்து, அத்தகைய பங்குத்தொகுதியினை ஒப்படைப்பதானது,

(அ) அத்தகைய பங்குத் தொகுதியின் முகத்தோற்றமளவிலான பெறுமதியின் விதித்துரைக்கப்பட்ட விகிதாசாரத்தைக் கொண்டிருக்கும் ஒரு தொகை; அத்துடன்

(ஆ) அத்தகைய பங்குத் தொகுதியின்மீதான திரண்ட வட்டி, ஆகியனவற்றின் கூட்டுமொத்தத்திற்குச் சமமான தொகை ஒன்றினை ரொக்கமாகச் செலுத்துவதற்குச் சமமானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில், ஏதேனும் பங்குத்தொகுதி தொடர்பாக, "விதித்துரைக்கப்பட்ட விகிதாசாரம்" என்பது, பங்குத்தொகுதிகளுக்காக தொடக்கத்தில் கொடுக்கப்பட்ட தொகை அல்லது பங்குத் தொகுதியினை மீட்பதற்குச்செலுத்தற்பாலதான தொகை, இவற்றில் எது குறைந்ததோ அத்தொகைக்குக் குறையாததான, ஒரு விகிதாசாரமாகவுள்ளதும், 74ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால், அமைச்சரினால், விதித்துரைக்கப்படக்கூடியவாறானதுமான அத்தகைய விகிதாசாரம் எனப் பொருளாகும்.

(5) இப்பிரிவின்கீழ் எவரேனும் ஆளினால் பங்குத்தொகுதியினை ஒப்படைப்பதானது, (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ், அவரால் செலுத்தற்பாலதான மரணச்சொத்து வரியினை விஞ்சுவதான தொகையினைப் பணமாகச் செலுத்துவதற்குச் சமமானதாகக் கருதப்படுமிடத்து, விஞ்சிய தொகையானது பின்வரும் விதத்தில் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்:

(அ) விஞ்சிய தொகை நூறு ரூபாவுக்குக் குறையாதவிடத்து-

(i) அதன்கண் அடங்கிய ஒவ்வொரு முழு நூறு ரூபாத் தொகையும் ஓர் அலகாகக் கணக்கிடப்படும், திறைச்சேரிச் செயலாளர் தீர்மானிக்கக் கூடியவாறான ஒவ்வோர் அலகும் அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கு அதிகமான அலகுகளைக்கொண்ட ஒவ்வொரு தொகுதியும் ஒப்படைக்கப்பட்ட பங்குத்தொகுதியைப்போன்ற அதேவழங்கல் முறையிலுள்ள பங்குதொகுதியின் வடிவத்தில் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும், அத்துடன்,

(ii) அலகொன்றன் எஞ்சியுள்ள பின்னம், பணமாகத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விஞ்சிய தொகையானது நூறு ரூபாவுக்குக் குறைவானதாக இருக்குமிடத்து அத்தகைய தொகையானது பணமாகத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

**36.** (1) மரணமெய்திய ஆள் மரணமெய்திய தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் செலுத்தப்படாதிருக்கும் எல்லா மரணச் சொத்து வரிகளின்மீதும் ஆண்டுக்கு எட்டு சதவீத சாதாரண வட்டியும் அத்தகைய தேதியிலிருந்து முப்பத்தாறு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் செலுத்தப்படாதிருக்கும் எல்லா மரணச்சொத்து வரியின்மீதும் பன்னிரண்டு சதவீத சாதாரண வட்டியும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய காலப்பகுதி ஒன்று தொடங்கும்போது செலுத்தப்படாதிருக்கும் வரித்தொகையின் மேல் மூன்று பஞ்சாங்க மாதங்களின் ஒரு முழுக் காலப்பகுதிக்கும் வட்டி கணக்கிடப்படவேண்டும்; அத்தகைய முதல் காலப்பகுதியானது மரணமெய்திய தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடைந்ததை அடுத்தமுதல்மாதம் முதலாம் நாள் தொடங்குவதாகும்.

(3) இப்பிரிவின் கீழ் செலுத்தற்பாலதான வட்டியானது, அது செலுத்தத் தவறிய மரணச்சொத்துவரியின் ஒரு பாகமென்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் வரியினைச் செலுத்துவதற்கு ஆளானவரான எவரேனும் ஆள், அவர் அத்தகைய வரியினை அல்லது அதன் ஏதேனும் தவணைப்பணத்தினைச் செலுத்த வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டதான தேதியன்று அல்லது அதன்முன்னர், இலங்கை அரசாங்கத்தினால் மரணமெய்திய ஆளின் மரணச் சொத்துக்கு மீளவும் செலுத்தப்பட இருப்பதான ஏதேனும் தொகையிலிருந்து, அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் மரண மெய்தியவரின் கணக்கில் வரவில் இருப்பதான பணத்திலிருந்து, அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓய்வூதியத்திலிருந்து அல்லது சகாயநிதியத்திலிருந்து மரணமெய்திய ஆளுக்குச் செலுத்தப்பட இருப்பதான பணங்களிலிருந்து, விடயத்திற்கு ஏற்ப, அத்தகைய வரியினை அல்லது தவணைப்பணத்தினைச் செலுத்துவதற்கு அவர் ஒழுங்குகள் செய்துள்ளார் என்பது பற்றி ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், விடயத்திற்கு ஏற்ப, அத்தகைய வரியினை அல்லது தவணைப் பணத்தினைச் செலுத்துவதற்கு அத்தகைய ஆளுக்கு கால நீடிப்பு ஒன்றினை வழங்கலாம் என்பதுடன், விடயத்திற்கு ஏற்ப, அத்தகைய வரி அல்லது தவணைப்பணம் அவ்வாறு நீடிக்கப்பட்ட காலம் முடிவடையும்வரையில் செலுத்தத்தவறாததொன்றாகவே கருதப்படுதல் வேண்டும்; அத்துடன், அத்தகைய கால நீடிப்பு வழங்கப்பட்ட தேதியன்று தொடங்கி கால நீடிப்பு முடிவடையும் தேதியன்று முடியும் காலப்பகுதியின்போது அத்தகைய வரியின் மீது அல்லது தவணைப்பணத்தின்மீது வட்டி எதுவும் செலுத்தப்படற்பாலதாதலாகாது.

(5) இருபத்தெட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்டதான மேலதிக வரிமதிப்பீடு ஒன்றன்மேல் எழுந்ததான மரணச்சொத்து வரியின் அந்தப் பாகத்தின்மேல், வட்டி செலுத்தற்பாலதாக இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய மேலதிக வரிமதிப்பீடு எத்தகைய சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டது என்பதனைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வரியினை விட்டுவிடலாம் அல்லது குறைக்கலாம்.

(6) மரணச்சொத்து வரி, வரிமதிப்பீடு செய்யப்படாதவிடத்து, நிறைவேற்றுநர் அல்லது வரியினைச் செலுத்துவதற்கு ஆளானவரான வேறு ஆள், அதன்பின்னர் வரிமதிப்பீடு செய்யப்பட இருப்பதான மரணச்சொத்து வரிக்

காக ஏதேனும் தொகையினை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தலாம் என்பதுடன், அவ்வாறு செலுத்தப்பட்டதான தொகை எதுவும் வரிமதிப்பிடப் படும்போது அத்தகைய ஆளிடமிருந்து வருமதியாக உள்ளதான மரணச் சொத்துவரிக்கு எதிராக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

**37.** இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளினால் ஏதேனும் தொகை வட்டியாகவும் மரணச்சொத்து வரியாகவும் செலுத்தற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவானது முதலில் வட்டிக்கும், அதன் பின்னர் மரணச்சொத்து வரிக்கும் என ஒதுக்கீடு செய்யப் படுதல் வேண்டும்.

**38.** *(1)* மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச்சொத்தானது முழுமையாக அல்லது பிரதானமாக அசைவற்ற ஆதனத்தையே கொண்டுள்ளதெனவும், மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்குக் கிடைக்கத்தக்கதாகவிருக்கின்ற மரணச்சொத்தின் அசைவுள்ள ஆதனம் அத்தகையவாறு செலுத்துவதற்குப் போதாததாக உள்ளதெனவும், ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டால், ஆணையாளர் தலைமையதிபதியானவர், விதித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள், நடவடிக்கைமுறைகள் ஆகியவற்றிற்கு அமைவாக, பதினாறு சமமான அரையாண்டுத் தவணைப்பணத்திற்கு அதிகமாகாத தவணைகளில் மரணச்சொத்து வரிக் கொடுப்பனவினை ஏற்றுக் கொள்ளலாம். செலுத்த வேண்டியதான அத்தகைய முதற்றவணைத் தேதியானது, மரணமெய்திய ஆள் மரணமெய்தியதில் இருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்ததும் வரும் தேதியாகும்.

*(2)* ஆள் எவரும், மரணச்சொத்து வரியினைத் தவணைப் பணங்களாகச் செலுத்துவதற்கு பிணைப்பொறுப்பினை ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப் படும்வகையில் கொடுத்துதவினாலன்றியும் அதுவரையும் மரணச்சொத்து வரியினைத் தவணைப்பணங்களாகச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

*(3)* எவரேனும் ஆள், தவணைப்பணங்களாக மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டு, அவ்வாறு செலுத்துவதற்கு உரியதாக வரும் தேதியின் பின்னர் இருபத்தெட்டு நாட்களுக்குள்ளாக அத்தகைய தவணைப்பணம் எதனையும் செலுத்தத் தவறியவிடத்து, மீதியாக உள்ள தவணைப் பணங்கள் செலுத்தத் தவறியவையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், செலுத்தப்படாதிருக்கும் மரணச்சொத்து வரியின் முழுத்தொகையும், செலுத்தத் தவறிய மரணச்சொத்து வரியினை அறவிடுவதற்கென இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடப்படலாம்.

## அத்தியாயம் XII

### கொடுப்பனவும், பொறுப்பு விடுவிப்பும் பற்றிய சான்றிதழ்

**39.** *(1)* எவரேனும் நிறைவேற்றுநர், அவர் செலுத்துவதற்கு ஆளானதான மரணச்சொத்துவரி எல்லாவற்றையும் செலுத்தியிருக்கும்போது, அல்லது ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையும் வண்ணம் செலுத்துவதற்குப் பிணைப்பொறுப்புக் கொடுத்திருக்கும்போது, ஆணையாளர் தலைமையதிபதியானவர், அப்பயன்பட அமைந்ததும், அதனுடன் எந்த ஆதனத்தின் தொடர்பான மரணச்சொத்து வரி செலுத்தப்பட்டதோ அல்லது செலுத்துவதற்குப் பிணைப்பொறுப்புக் கொடுக்கப்பட்டதோ அந்த ஆதன வெளிப்படுத்துகையின் பிரதியொன்று இணைக்கப்பட்டதுமான, சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

(2) எவரேனும் நிறைவேற்றுநர், இச்சட்டத்தின்கீழ் மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்கு ஆளானவரல்லர் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், அப்பயன்பட அமைந்ததும், அத்துடன், எந்த ஆதனத்தின் தொடர்பாக மரணச்சொத்து வரி செலுத்தப்படற்பாலதல்லுறோ அந்த ஆதன வெளிப்படுத்துகையின் பிரதியொன்று இணைக்கப்பட்டதுமான சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

**40.** (1) மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணத்தின்மேல் கைமாறுவதான எந்த ஆதனம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றுநர் மரணச்சொத்துவரி செலுத்துவதற்கு ஆளாகியிருக்கின்றாரோ அந்த ஆதனம் யாவும் தொடர்பில் மரணச் சொத்து வரி பூரணமாகச் செலுத்தப்பட்டுள்ளது அல்லது செலுத்தப்படும் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடைந்ததன் மேல், நிறைவேற்றுநரால் தேவைப்படுத்தப்பட்டால், அப்பயன்பட அமைந்த சான்றிதழ் ஒன்றினை ஆணையாளர் தலைமையதிபதி வழங்கலாம். இச்சான்றிதழ் அதன்கண் குறிப்பிடப்பட்டதான ஆதனத்தினை, மேலும் ஏதேனும் மரணச் சொத்து வரி கோரப்படுவதிலிருந்து விடுவித்தல் வேண்டும்.

(2) நிறைவேற்றுநர் ஒருவரல்லாதவரான ஆள் ஒருவர் ஒரு மரணத்தின் மேல் கைமாறும் ஆதனம் எதனதும் தொடர்பாக மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்கு ஆளாகுமிடத்து, அத்தகைய ஆள், நிறைவேற்றுநர் 24ஆம் பிரிவின்கீழ் அந்த ஆதனம் பற்றிய குறிப்பீடொன்றை உள்ளடக்குவதான வெளிப்படுத்துகை ஒன்றினை ஒப்படைக்காதுவிட்டால், அத்தகைய மரணத்தின் மேல் கைமாறும் எல்லா ஆதனங்கள் பற்றியும் அவற்றிற்கு உரித்துடைய பல்வேறு ஆட்கள் பற்றியும் அவரது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையிலான பூரண கூற்று ஒன்றினை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர் எந்த ஆதனம், தொடர்பில் மரணச்சொத்து வரி செலுத்த விண்ணப்பகாரர் ஆளானவராகிறாரோ அந்த ஆதனம் தொடர்பான மரணச் சொத்து வரி வீதத்தினைத் தீர்மானித்தல் வேண்டும்; அத்துடன், அந்த வீதத்தில் வரியினைச் செலுத்தியதன்மேல், அந்த ஆதனத்தைப் பொறுத்தவரையில், ஆதனமும் விண்ணப்பகாரரும், மேலதிக மரணச் சொத்துவரி எதுவும் கோரப்படுவதிலிருந்து முறையே விடுவிக்கப்படல் வேண்டும், விடுவிக்கப்பட்டவராதல் வேண்டும்; அத்துடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய விடுவித்தல் பற்றிச் சான்றிதழ் ஒன்றினை வழங்குதலும் வேண்டும்.

(3) நிறைவேற்றுநரின் விண்ணப்பத்தின்மேல் அல்லது மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம் எதிலும் அக்கறை ஒன்றுள்ள எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மேல், ஆணையாளர் தலைமையதிபதியானவர், அந்த ஆதனம் தொடர்பாகச் செலுத்தற்பாலதான மரணசாதன வரியினையும், அதன்மீதான வட்டியினையும் அத்துடன், மரணச்சொத்தின் ஒரு பாகமாக அமையும் வேறு ஆதனங்களின் மீது செலுத்தற்பாலதான மரணச் சொத்து வரித் தொகையைக் கருத்திற்கொண்டு ஆணையாளர் தலைமையதிபதியானவர் செலுத்துமாறு தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய மேலதிகத் தொகையுடன்சேர்த்துச் செலுத்தியதன்மேல், அதன்கண் குறிப்பிடப்பட்டதான ஆதனத்தைப் பொறுத்தவரை மேலும் ஏதேனும் மரணச் சொத்துவரி கோரப்படுவதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழ் ஒன்று, எவரேனும் ஆளை அல்லது ஏதேனும் ஆதனத்தை, மோசடியின் விடயத்தில் அல்லது முக்கிய நிகழ்வுகளை வெளிக்காட்டத் தவறியதன் விடயத்தில் விடுவித்தலாகாது என்பதுடன், அதன்பின்னர் மரணத்தின்மேல் கைமாறியதாகக் காண்பிக்கப்பட்ட ஆதனம் எதுவும் தொடர்பாக செலுத்தற்பாலதான வரிவீதத்தினையும் பாதிப்பதாகாது; அத்துடன் அத்தகைய ஆதனத்தின் மீதான வரியானது, எந்த ஆதனம் தொடர்பில் வரியானது ஏற்கனவே கணக்கிடப்பட்டதோ அந்த ஆதனத்தின் பெறுமதியுடன் அதன் பெறுமதி சேர்க்கப்பட்டவிடத்து, செலுத்தப்படற்பாலதான அத்தகைய வீதத்தில் இருத்தல் வேண்டும் :

ஆயின், சான்றிதழில் உள்ளடக்கப்பட்டதான ஆதனம் எதனதும் தொடர்பாக, செலுத்தற்பாலதான முழு மரணச் சொத்து வரியினை விடுவிப்பதாகக் கொள்ளப்படும் சான்றிதழ் ஒன்று, அத்தகைய மோசடி அல்லது தவறுகை எப்படியிருப்பினும், அறிவிப்பின்றி பெறுமதியான பிரதிபயனுக்கு நல்லெண்ணத்துடன் கொள்வனவு செய்த ஒருவருக்கு மரணச்சொத்துவரி செலுத்தப்பட வேண்டியதிலிருந்து விலக்களித்தல் வேண்டும்.

41. ஆணையாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட சான்றிதழ் எதனிலும் செய்யப்பட்ட கூற்று எதுவும், முரணானது எண்பிக்கப்படும் வரையில் செம்மையானதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன், முரணானது பற்றிய எண்பிப்பு இல்லாதவிடத்து, நீதிமன்றம் அதுபற்றிய மேலதிக எண்பிப்பினைத் தேவைப்படுத்தாமல் அத்தகைய கூற்று எதனிலும் செயற்படுதல் வேண்டும்.

42. மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச்சொத்துத் தொடர்பாக —

(அ) இச்சட்டத்தின்கீழ்நிறைவேற்றுநர் செலுத்துவதற்கு ஆளானதான மரணச் சொத்து வரி செலுத்தப்பட்டுள்ளதென அல்லது செலுத்துவதாகப் பிணைப் பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளதென அல்லது இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றுநர் மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்குஆளானவரல்லர் என ஆணையாளர் தலைமையதிபதி சான்றிதழை வழங்கும் வரையிலும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு வழங்கப்பட்ட சான்றிதழ் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் வரையிலும்,

மரணசாதனத் தத்துவப்பத்திரம் அல்லது மரணசாதன அதிகாரப்பத்திரம் எதுவும் நீதிமன்றத்தால் வழங்கப்படுதலாகாது.

43. மரணமெய்திய ஆள் ஒருவரினது மரணத்தின்மீது கைமாறுவதான ஆதனம் —

(அ) பிரிவு 4 (ஈ) என்பதன் பொருளெல்லைக்குட்பட்ட காப்புறுதிப்பத்திரம் ஒன்றாகவிருக்கும் மரணமெய்திய ஆளினால் அவர் உயிரோடிருக்கும்போது பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதிப்பத்திரம் ஒன்றின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட பணமாக, அல்லது

(ஆ) மரணமெய்தியவரினதும் வேறு எவரேனும் ஆளினதும் கணக்கில், ஏதேனும் வங்கியில் அல்லது நிறுவனத்தில் அல்லது எவரேனும் ஆளிடம் வைப்பிலிடப்பட்ட பணமாக,

இருக்கின்றவிடத்து, ஏதேனும் ஒப்பந்தத்தில், உடன்படிக்கையில், அல்லது எழுத்திலான சட்டத்தில் முரணுனது எதுவும் எப்படியிருப்பினும் —

(i) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தின் ஏதேனும் பாகத்தினை ; அல்லது

(ii) பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தின் ஒருபாதிக்கு அதிகமானதை,

ஆணையாளர் தலைமையதிபதியின் விடுவித்தல் சான்றிதழ் ஒன்றை அவர் பெற்றிருந்தாலன்றி, மரணமெய்தியவரின் மரணத்தின்மேல் அத்தகைய பணத்திற்கு உரித்துடையவரான எவரேனும் ஆளுக்குக் கொடுப்பனவு செய்வது, எவரேனும் ஆளுக்குச் சட்டமுறையற்றதாதல் வேண்டும்.

## அத்தியாயம் XIII
## மரணச்சொத்து வரியினை அறவிடுதல்

**44.** *(1)* எவரேனும் ஆள், அவர் மரணச்சொத்து வரியினைச் செலுத்திய தன்மேல், மரணசாதனத் தத்துவப்பத்திரத்திற்கு அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரத்திற்கு உரித்துடையவராகிறுர் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமாறு எண்பித்து, அத்தகைய ஆளால் மரணச்சொத்து வரிக் கணக்கின் வகையில் செலுத்தப்பட வேண்டிய ஒரு தொகையினை, மரணமெய்திய ஆளின் மரணச் சொத்தின் ஒரு பாகமாக அமையும் ஏதேனும் பணத்திலிருந்து அல்லது கடன்களிலிருந்து சேகரிக்குமாறு ஆணையாளர் தலைமையதிபதியை வேண்டுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய பணத்தை வைத்திருப்பவரான அல்லது அத்தகைய கடனைச் செலுத்தவேண்டியவரான எவரேனும் ஆளை அல்லது ஆட்களை, அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட முறையிலும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாகவும் மரணமெய்திய ஆளின் ஆதனம் தொடர்பாகச் செலுத்தற்பாலதான மரணச்சொத்து வரியினை மேவுவதற்குப் போதுமானதென ஆணையாளர் தலைமையதிபதி கருதுவதான அத்தகைய அளவு பணத்தை அல்லது கடன்களைச் செலுத்துமாறு தேவைப்படுத்தலாம்.

*(2)* ஆணையாளர் தலைமையதிபதியினுல், *(1)* ஆம் உட்பிரிவுக்கு இணங்க அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட்டவரான எவரேனும் ஆள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தில, ஒப்பந்தத்தில், உடன்படிக்கையில் உள்ள எதுவும் எப்படியிருப்பினும், மரணமெய்திய ஆளின் மரணச்சொத்தின் கணக்கின்பேரில் அவரால் வைத்திருக்கப்படும் பணத்தின் அல்லது அத்தகைய மரணச்சொத்துக்கு அவரால் செலுத்தப்படவேண்டிய பணத்தின் அளவுக்கு, அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கி ஒழுகவேண்டும் என்பதுடன், அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் எதிராக இத்தால் பழிவிலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

*(3)* ஒராம் அல்லது *(2)* ஆம் உட்பிரிவுகளிலுள்ள எதுவும், எவரேனும் ஆளிடமிருந்து, ஏதேனும் கடனை, அந்தக் கடன் அந்த ஆளால் மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்குச் செலுத்தப்பட உரியதான அந்த நாளுக்கு முன்னதான, சேகரிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினை இயலுவதாக்காது அல்லது இயலுவதாக்குவதாகக் கருதப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றினால், செலுத்தப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் தொகை அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கச் செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய தொகையானது, அத்தகைய அறிவித்தல் எந்த ஆளுக்கு அனுப்பப்பட்டதோ அந்த ஆளிடமிருந்து வருமதியான மரணச்சொத்து வரி என்றாற்போன்றும், அத்தகைய மரணச்சொத்துவரி செலுத்தத் தவறப்பட்டது என்றாற்போன்றும் அந்த ஆளிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

45. (1) ஏதேனும் வரி தவணை தவறிவுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் முறையில் அத்தகைய வரியினை அறவிடத் தொடங்குமுன்னர் —

(அ) அத்தகைய வரி விவரங்களையும் ;

(ஆ) அத்தகைய வரியினை அறவிடுவதற்கென நடவடிக்கை எடுக்கும் எண்ணம் உள்ளதென்றும்,

கூறி, தவணை தவறியவருக்கு எழுத்தில் அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

(2) அத்தகைய வரி, விதிக்கப்பட்டதான வரிமதிப்பீட்டுக்கு எதிராக 29 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய தவணை தவறியவர் மேன்முறையீடு செய்யாதுவிட்டிருந்தால், அத்தகைய அறிவித்தற் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அவ்வாறு அறவிடப்பட்ட வரிக்கு எதிராக ஆட்சேபனை எதனையும் செய்யலாம் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப்பார்த்தலும் வேண்டும்; அத்துடன், அதன் மீது தனது முடிவை அளித்தல் வேண்டும்; அத்துடன், அம்முடிவு இறுதியானதாதலும் வேண்டும்.

46. (I) ஆணையாளர் தலைமையதியானவர் மரணச்சொத்து வரிச் சேகரிப்பாளர்களாக இருப்பதற்கென ஆட்களை நியமிக்கலாம்.

(2) (அ) ஏதேனும் மரணச்சொத்து வரி தவணை தவறியுள்ளதாக இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வரியின் விவரங்களையும், அந்த வரியானது எந்த ஆளால் செலுத்தற் பாலதாக உள்ளதோ அந்த வரியானது எந்த ஆளால் செலுத்தற்பாலதாக உள்ளதோ அந்தஆளின் பெயரையும் முகவரியையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அரசாங்க அதிபர் ஒருவருக்கு, உதவி அரசாங்க அதிபர் ஒருவருக்கு, பிசுக்காலுக்கு, பிரதிப் பிசுக்காலுக்கு அல்லது மரணச் சொத்து வரிச் சேகரிப்பாளருக்கு வழங்கலாம் என்பதுடன், எவ்வலுவலருக்கு அத்தகை சான்றிதழ் வழங்கப்பட்டதோ அவ்வலுவலர் அச்சான்றிதழிற் பெயர் குறிக்கப்பட்டுள்ள ஆளிடமிருந்து, எந்த ஆளின் மரணச் சொத்துத் தொடர்பாக வரி தவணை தவறியதாக உள்ளதோ அந்த ஆளின் மரணத்தின்மேல் கைமாறுவதான அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் மரணச்சொத்து வரியினை அறவிடச் செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யும்படி இத்தால் தேவைப்படுத்தவும் படுகிறார்.

(ஆ) அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுகையானது, சொல்லப்பட்ட அலுவலர் அது தொடர்பாக மிக உசிதமானதெனக் கருதும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், அசைவுள்ள ஆதனம் எது

வும் அத்தகைய அலுவலரினால் கைப்பற்றப்பட்டவுடன் உடனடியாக, அத்தகைய ஆதனத்தின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டு அவ்வலுவலரினால் கையொப்பமிடப்பட்டு, தவணை தவறியவருக்குக் கொடுபடுதல் வேண்டும், அத்துடன், அதன் பிரதி ஒன்று ஆணையாளர் தலைமையதிபதிக்கும் வழங்கப்படல் வேண்டும்.

(இ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனம்-

(i) இலங்கை நாணயத்திலான காசாகவிருக்குமிடத்து, அக்காசு தவணைதவறிய வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்:

(ii) வெளிநாட்டு நாணயக் காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு இலங்கை மத்திய வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிலிருந்து வரும் வருவாய்கள் தவணைதவறிய வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்.

(iii) காசு தவிர்ந்ததாக இருக்குமிடத்து, அத்தகைய ஆதனம், தவணை தவறியவரது செலவிலும் கட்டணத்திலும் ஐந்து நாட்களுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும். தவணை தவறியவர், முன்னர் சொல்லப்பட்ட ஐந்து நாட்களுக்குள்ளாக தவணை தவறிய வரியைச் செலவுகளுடனும் கட்டணங்களுடனும் செலுத்தாவிடின், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிசுக்கால், பிரதிப் பிசுக்கால் அல்லது மரணச்சொத்து வரிச்சேகரிப்பாளர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படச் செய்தல் வேண்டும், அல்லது அத்தகைய ஆதனம் கைமாற்றத்தகு சாதானமொன்றாக அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்தில் அல்லது பகிரங்கக் கம்பனியிலுள்ள ஒரு பங்காக இருக்குமிடத்து அதனை அந்நாளிலுள்ள சந்தை வீதப்படி தரகர் ஒருவர் மூலம் விற்கச் செய்தல்வேண்டும்.

(ஈ) உட்பந்தி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனையினால் பெறப்பட்ட தொகை-

(i) முதலாவதாக அவ்வாதனத்தைக் கைப்பற்றவும் வைத்திருக்கவும் விற்கவும் ஏற்பட்ட செலவுகளையும் கட்டணங்களையும் கொடுப்பனவு செய்வதற்கும்,

(ii) இரண்டாவதாக, தவணை தவறிய வரியைக் கொடுப்பதற்கும்.

பிரயோகிக்கப்படவேண்டும் என்பதுடன், ஏதேனும் மீதித் தொகையானது மரணச் சொத்து வழக்கின் கணக்கின் வரவுக்கு மீதி மீட்கப்படுதலும் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதியானவர் இப்பிரிவின் கீழ் சான்றிதழொன்றை வழங்கும்போதிலெல்லாம், அதுபற்றிய அறிவிப்பொன்றை நேரடிவாகச் சேர்ப்பிப்பதன்மூலம், அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுக்கடிதமூலம், அல்லது தந்திமூலம் சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டவரான ஆளுக்கு அதே நேரத்தில் வழங்குதல் வேண்டும்: ஆயின், அத்தகைய அறிவிப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது இப்பிரிவின் கீழான நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது.

47. (I) ஏதேனும் மரணச்சொத்துவரி, தவணை தவறியதாக உள்ளவிடத்து ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய வரியின் விவரங்களையும் அவ்வரிஎந்த ஆளால் கொடுக்கற்பாலதாக உள்ளதோ அந்த ஆளின் பெயரையும் முகவரியையும், அத்துடன் எந்த ஆதனத்தை விற்பதால் வரி அறவிடப்படலாமோ அந்த ஆதன அட்டவணை ஒன்றினையும் கொண்டுள்ளதும் இச்சட்டத்தில் சேகரிப்புச் சான்றிதழ் என்று குறிப்பீடு செய்யப்படுவதுமான சான்றிதழ் ஒன்றை, தோதான மாவட்ட நீதிமன்றத்திற்கு வழங்கலாம். ஆணையாளர் தலைமையதிபதி, பொருத்தமானதெனக் கருதினல், எந்த விலைக்குக் குறைவாக ஆதனம் விற்கப்படுதலாகாதோ அந்த விலையினையும் குறிப்பிடலாம். அதன்மேல் மாவட்ட நீதிமன்றமானது, பிசுக்காலுக்கு அல்லது பிரதிப்பிசுக்காலுக்கு, சொல்லப்பட்ட ஆதனத்தை அல்லது அவர் அவசியமானதெனக் கருதும் அதன் அத்தகைய பாகத்தினைக் கைப்பற்றி ஆணையாளர் தலைமையதிபதியால் குறிப்பிடப்பட்டதான ஏதேனும் விலை இருப்பின், அந்த விலைக்குக் குறையாததான விலையில் விற்பதற்கு பிசுக்காலை அல்லது பிரதிப் பிசுக்காலைத் தேவைப்படுத்தும் எழுத்தாணையினை வழங்குதல் வேண்டும். அத்துடன், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின், 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அத்தகைய கைப்பற்றுதலுக்கும் விற்பனைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் மாவட்ட நீதிமன்றமொன்றுக்குச் செய்யப்பட்ட மேன்முறையீட்டில் மரணச்சொத்து வரிக் கொடுப்பனவுக்கான தீர்வையொன்று, எவ்வழக்கில் எழுதப்பட்டுள்ளதோ அத்தகைய ஒரு வழக்குக்கு இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகா.

48. (1) ஏதேனும் விடயத்தில் தவணை தவறிய வரியை, கைப்பற்றுதல் மூலமும், விற்பனை மூலமும் அறவிடுதல் செய்யப்பட முடியாததென அல்லது உசிதமானதல்லவென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது அவ்வரியின் முழுத்தொகையும் கைப்பற்றுதல் மூலமும் விற்பனை மூலமும் அறவிடப்படாதவிடத்து, அவர், அத்தகைய வரி பற்றிய விவரங்களும் தவணை தவறியவரின் பெயரும் கடைசியாக இருந்ததாக அறியப்படும் அவரது வதிவிடமும் அடங்கிய சான்றிதழொன்றை அவ்விடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானெருவருக்கு வழங்கலாம். அதன் மேல் அந்நீதிவான், அவருக்கெதிராக அவ்வரியை அறவிடுவதற்காக ஏன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு அத்தவணை தவறியவரை அவர் முன்பாகக் கட்டளை விட்டழைத்துக் கேட்டல் வேண்டுமென்பதுடன், போதிய காரணம் காட்டத்தவறும் பட்சத்தில் தவணை தவறியவ்ரின், குற்றப்பணத்தினல் மட்டும் தண்டிக்கக்கூடிய, அல்லது மறியற்றண்டனையினல் தண்டிக்கப்படற்பாலதாகாத தவறென்றுக்காக அத்தகைய தவணை தவறியவர்மீது நீதிவானின் தண்டனைத்தீர்ப்பின் மூலம் விதிக்கப்பட்ட குற்றப்பணமாகக் கருதப்படல் வேண்டும்; அத்துடன், அத்தகைய தவறென்றுக்காக விதிக்கப்படும் குற்றப் பணத்தைச் செலுத்தத் தவறுதல் தொடர்பாக, 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 291ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் [(அ), (ஈ), (ஐ) என்னும் பந்திகள் தவிர்ந்த] ஏற்பாடுகள் அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன், நீதிவான் அத்தகைய தண்டனைதீர்ப்பை விதிக்கும் நேரத்தில், அவ்வுட் பிரிவினது ஏற்பாடுகளின் மூலம் விடுத்திருக்கக்கூடிய பணிப்பு எதனையும் அவர் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட சான்றிதலொன்றிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மை, இப் பிரிவின் கீழான ஏதேனும் நடவடிக்கையின்போது நீதிவானால் கேள்விக்குட் படுத்தப்படுதல் அல்லது விசாரிக்கப்படுதல் ஆகாது; அத்துடன், அதற்கிணங்க அவ்வுட் பிரிவிலுள்ள எதுவும், அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைச் சீர்தூக்கிப் பார்க்க அல்லது முடிவுசெய்ய அல்லது எந்த வரி மதிப்பீடு தொடர்பாகத் தவணை தவறிய வரிவிதிக்கப்படுகிறதோ அவ்வரிமதிப் பீட்டுக்கெதிரான மேன்முறையீடொன்று முடிவுறுதிருக்கின்றதென்ற ஒரு காரணத்திற்காக அத்தகைய நடவடிக்கையை ஒத்திவைக்க அல்லது பின் போட நீதிவானொருவருக்கு அதிகாரமளிப்பதாகாது.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின், 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளிலுள்ள எதுவும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்திற்கு ஏற்புடையதாதலாகாது.

(4) தவணைதவறிய ஒருவர் மீது குற்றப்பணம் ஒன்று (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படும் ஏதேனும் விடயத்தில், நீதிவான், சொல்லப்பட்ட குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கெனக் கால அவகாசமளிக் கலாம் அல்லது அத்தொகை தவணைப் பணங்களாகக் கொடுப்பனவு செய்யப் பட வேண்டுமெனப் பணிக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, காரணம் காட்டுவதற்கென அந்த உட்பிரிவின்கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கென கால அவகாசமளிப்பதற்கு முன் நிபந்தனையாகப் பிணை கொடுக்கப்படவேண்டுமென நீதிமன்றம் தேவைப்படுத் தலாம்; அத்துடன், தவணை தவறியவர் அவ்வாறு பிணை கொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து, 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றயியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) கொடுப்பனவு தவணைப்பணங்களாகச் செலுத்தப்பட வேண்டும் என, (4) ஆம் உட்பிரிவின்கீழ் பணிக்கப்பட்டுள்ளவிடத்தும், ஏதேனும் ஒரு தவணைப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதில் தவணை தவறப்படுமிடத்தும், அப் பொழுது கொடுபடாது எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப் பணங்களையும் கொடுப்பனவு செய்வதில் தவணை தவறப்பட்டாற்போன்றே நடவடிக்கை எடுக்கப்படலாம்.

49. (1) மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணத்தின்மேல் செலுத்தற்பால தான மரணச்சொத்து வரி தவணை தவறியிருந்து எவரேனும் ஆள்—

(அ) மரணமெய்திய ஆளின் மரணச்சொத்திற்கு அல்லது அதன் கணக்கில் நிறைவேற்றுநர் ஒருவருக்கு ஏதேனும் பணத்தைச் செலுத்தவுள் ளாரென; அல்லது

(ஆ) அத்தகைய மரணச்சொத்துக்காக அல்லது அதன் கணக்கில் ஏதேனும் பணம் வைத்திருக்கிறாரென; அல்லது

(இ) அத்தகைய மரணச்சொத்துக்காக அல்லது அதன் கணக்கில் நிறை வேற்றுநர் ஒருவருக்கு ஏதேனும் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற் கென வேறெவரேனும் ஆளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளாரென; அல்லது

(ஈ) நிறைவேற்றுநர் ஒருவருக்குக் கொடுப்பனவு செய்திருந்தால் அவரால் அந்த மரணச்சொத்தின் கணக்கில் வரவுவைத்திருக்கப்படவேண்டிய தான பணத்தை, அத்தகைய மரணச்சொத்துக்காக அல்லது அதன் கணக்கில் கொடுப்பனவு செய்வதற்கு ஆளானவரென,

ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுமிடத்து, ஆணையாளர் தலைமையதி பதியானவர் தவணை தவறிய மரணச்சொத்து வரித்தொகையினை விஞ்சாத அத்தகைய ஏதேனும பணத்தினை அத்தகைய அறிவித்தலில் பணிக்கப்பட்ட வாறுகச் செலுத்தும்படி அவரைத் தேவைப்படுத்தி, எழுத்திலான அறிவித்தலை அத்தகைய ஆளுக்குக் கொடுக்கலாம். அத்தகைய அறிவித்தலைப் பெற்றுக் கொண்ட தேதியில் அறிவித்தல் கொடுக்கப்பட்டவரான ஆளின் கைவசமுள்ள அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது அவரால் செலுத்தப்பட வுள்ள அல்லது அத்தேதியின் பின்னர் முப்பது நாட்கள் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்குள்ளாக எந்நேரத்திலேனும் அவரது கைக்கு வருகின்ற அல்லது அவ ரிடமிருந்து வருமதியான அல்லது அவரால் செலுத்தப்படவுள்ள அத்தகைய பணத்திற்கு, சொல்லப்பட்ட அறிவித்தல் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவிற்கிணங்க, செலுத்தப்பட்டதான ஏதேனும் மரணச்சொத்து வரியானது, 58ஆம் பிரிவின் பொருளெல்லைக்குள்ளாக வேறு ஆளின் சார் பாகச் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றவரும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முப்பது நாட்கள் கொண்ட காலப் பகுதிக்குள்ளாக, சம்பந்தப்பட்ட பணம் அவரது கைக்குவராத காரணத்தால் அல்லது அவரிடமிருந்து வருமதியாகாத காரணத்தால், அதற்கு இணங்கி யொழுக இயலாதவராக இருக்கின்றவருமான எவரேனும் ஆள், அக்காலப் பகுதி முடிவடைந்ததன்பின்னர், பதினன்கு நாட்களிலேனும், அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்கு எந்த நிகழ்வுகளின் காரணமாக முடியாமல் போனதோ அந்த நிகழ்வுகள் பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள் அதற்கிணங்கியொழுகவியலாதிருந்ததுடன், (3) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறுக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கத் தவறியுமுள்ளவிடத்து, அல்லது அவ்வாள் அவ்வறிவித்தல் தொடர்புறுத்தும் மரணச்சொத்து வரியினை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கழித்து அல் லது கழிக்கக்கூடியவராயிருந்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முப்பது நாட்கள் கொண்ட காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் வரும் பதி ஞன்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய மரணச்சொத்து வரியினை அல்லது அதன் பாகத்தை ஆணையாளர் தலைமையதிபதியால் பணிக்கப்பட்டவாறு கொடுக்காத விடத்து, அவ்வாள், அவர் கழிக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட மரணச்சொத்து வரி முழுவதற்கும் தனிப்பட்ட தன்மையில் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரியானது அவ்வாளிடமிருந்து அரசிற்குச் செலுத்தவேண்டியதான கடன் என்றாற்போன்று அறவிடவும் படலாம்.

**50.** *(1)* மரணமெய்திய ஆள் ஒருவர், அவர் மரணமெய்தியபோது இலங்கையில் தொழில் கொண்டு நடாத்துவதான பங்குடைமை ஒன்றின் பங்காளி ஒருவராக இருக்குமிடத்தும், அத்தகைய மரணமெய்திய ஆளின் மரணத்தின் மேல் கைமாறுவதான ஆதனம் தொடர்பாகச் செலுத்தற்பாலதான ஏதேனும் மரணச்சொத்து வரி தவணை தவறியதாக இருக்குமிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதியானவர், அப்பங்காளி மரணமெய்தியபோது அத்தகைய பங்குடைமையில் வேறு பங்காளி ஒருவராக இருந்த எவரேனும் ஆளுக்கு, அத்தகைய அறிவித்தலில் பணிக்கப்பட்டவாறாக தவணை தவறியதாக உள்ள மரணச்சொத்து வரித்தொகை அல்லது அத்தகைய பங்குடைமையில் மரணமெய்திய ஆளுக்கு இருந்த அக்கறையின் தொகை, இவற்றுள் எது குறைந்ததோ அத்தொகையினைச் செலுத்துமாறு தேவைப்படுத்தி, எழுத்திலான அறிவித்தல் ஒன்றினை வழங்கலாம்.

*(2)* இப்பிரிவிற்கிணங்க செலுத்தப்பட்டதான ஏதேனும் மரணச்சொத்து வரியானது 58ஆம் பிரிவின் பொருளெல்லைக்குள்ளாக வேறு ஆளின் சார்பாகச் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3)* ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டதான அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுக எவரேனும் ஆள் தவறுமிடத்து, தவணை தவறியதாக உள்ள மரணச்சொத்து வரித்தொகை அல்லது மரணமெய்திய நேரத்தில் பங்குடைமையில் மரணமெய்திய ஆளின் அக்கறையின் தொகை, இவற்றுள் எது குறைந்ததோ அத்தொகை, அவர் செலுத்தப்படவேண்டியதான மரணச்சொத்து வரி என்றாற்போன்றும் அத்தகைய மரணச்சொத்து வரி தவணை தவறியதாக உள்ளது என்றாற்போன்றும் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

**51.** எவரேனும் ஆளிடமிருந்து மரணச்சொத்து வரியினை அறவிடுவதற்கு இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டதான சிறப்பு நடவடிக்கை முறையானது, அரசிற்கு வருமதியாகவுள்ள கடன்களை அறவிடுவதற்கென எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் கிடைக்கத்தக்கதாக இருப்பதான வேறு ஏதேனும் முறைமூலம் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கை முறைமூலம் அத்தகைய ஏதேனும் வரியினை அல்லது அதன் பாகத்தினை அறவிடுவதற்கு அரசிற்குரிய உரிமையை பாதித்தல் அல்லது நீக்குதல் ஆகாது. அல்லது பாதிப்பதாக அல்லது நீக்குவதாகக் கருதப்படுதலாகாது.

**52.** *(1)* ஆணையாளர் தலைமையதிபதியானவர், எவரேனும் ஆளுக்கு எழுத்தில் வழங்கப்பட்ட அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தல்ல் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக, அத்தகைய ஆளிடமிருந்து அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியாக உள்ள மரணச்சொத்து வரி எதனையும் அறவிடும் நோக்கத்திற்காக ஆணையாளர் தலைமையதிபதியானவர் தேவைப்படுத்தக்கூடியதான ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

*(2)* ஆணையாளர் தலைமையதிபதியானவர், அவர் கைப்பட எழுதுவதன் மூலம், இவ்வத்தியாயத்தினால் ஆணையாளர் தலைமையதிபதியின்மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் எவரேனும் வரிமதிப்பீட்டாளருக்குக் கையளிக்கலாம்.

*(3)* இரண்டாம் உட்பிரிவின்கீழ் தத்துவம் அல்லது பணி எதுவும் எவ் வரிமதிப்பீட்டாளருக்குக் கையளிக்கப்பட்டதோ அவ் வரிமதிப்பீட்டாளர்

ஒவ்வொருவரும், ஆணையாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாக, அத்தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றல் வேண்டும்.

**53.** இவ்வத்தியாயத்தில் ''வரி'' என்பது மரணச்சொத்து வரி எனப் பொருளாவதுடன், அத்தகைய வரியின்மேல் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வட்டியையும் இச்சட்டத்தின்கீழ் உறப்பட்ட எவையேனும் குற்றப் பணங்கள், தண்டங்கள், கட்டணங்கள், செலவுகள், அல்லது இறுப்பனவுகள் ஆகியனவற்றையும் உள்ளடக்கும்.

## அத்தியாயம் XIV
### பல்லினமானவை

**54.** (1) இச்சட்டத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால், ஆணையாளரினால் அல்லது பிரதி ஆணையாளரினால் அல்லது வரிமதிப்பீட்டாளரினால் கொடுக்கப்படும் ஒவ்வோர் அறிவித்தலும், விடயத்துக்கு ஏற்ப, ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது ஆணையாளரின் அல்லது பிரதி ஆணையாளரின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது ஆணையாளரின் அல்லது பிரதி ஆணையாளரின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயர் அத்தகைய ஒவ்வோர் அறிவித்தல்மீதும் உரியமுறையில் அச்சிடப்பட்டிருந்தால் அல்லது பொறிக்கப்பட்டு இருந்தால் அந்த அறிவித்தலானது அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியினால், ஆணையாளரினால், பிரதி ஆணையாளரினால் அல்லது வரிமதிப்பீட்டாளரினால் ஒப்பமிடப்பட்டிருந்தாற்போன்று செல்லுபடியுடைத்ததாதலும் பயனுடையதாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் பயனைக்கொண்டு கொடுக்கப்படும் ஒவ்வோர் அறிவித்தலும் ஆள் ஒருவரிடம் நேரடியாகச் சேர்ப்பிக்கப்படலாம் அல்லது அறிவித்தல்களைச் சேர்ப்பிப்பதற்கென அவரால் கொடுத்துதவப்பட்ட ஒரு முகவரிக்கு அல்லது கடைசியாக அவர் வதிவதாக அறியப்பட்ட முகவரிக்கு அல்லது வதிவிடத்திற்கு அல்லது அவர் தொழில்கொண்டுநடாத்துகின்ற அல்லது நடாத்திக் கொண்டிருந்த ஏதேனும் இடத்திற்கு நேரடியாக ஒப்படைப்பதன்மூலம் அல்லதுஅந்த இடத்திற்கு தபாலில் அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்:

ஆயின், வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்று, நேரடியாகச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும், அல்லது முன்னர் சொல்லப்பட்டவாறுன அத்தகைய ஏதேனும் முகவரிக்கு அல்லது இடத்திற்கு தபால்மூலம் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) தபாலில் அனுப்பப்பட்ட அறிவித்தல் எதுவும், தபாலில் சாதாரணமாக அது சேர்ந்திருக்கக்கூடியதான நாளுக்கு அடுத்து வரும் நாளில் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) தபால்மூலம் சேர்க்பிக்கப்பட்டமையை எண்பிப்பதற்கு அறிவித்தலைக் கொண்டிருப்பதான கடிதம், உரியமுறையில் முகவரியிடப்பட்டதென் பதனையும் தபாலில் சேர்க்கப்பட்டதென்பதனையும் எண்பித்தல் போதுமானதாகும்.

(5) வதிவற்ற ஆள் ஒருவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும் என இச்சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டதான அறிவித்தல் ஒவ்வொன்றும் அவரது முகவரிடம் சேர்ப்பிக்கப்படலாம்.

*(6)* ஏதேனும் அறிவித்தல் அல்லது சான்றிதழ் எவரேனும் ஆளின் பெயரையும் அலுவலகமுறையான பதவிப்பெயரையும் கொண்டிருப்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அவரால் வழங்கப்பட்டதெனவும் கொள்ளப்படுமிடத்து, அந்த அறிவித்தல் அல்லது சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியில் அந்தப் பெயரைக் கொண்டிருப்பவரான ஆள் ஒருவர் அந்த அலுவலக முறையான பதவிப் பெயருக்கு உரித்துடையவராக இருந்தார் என்பது, (முரணனது எண்பிக்கப் படும்வரையில்) உண்மையானதெனக் கருப்படுதல் வேண்டும்; அத்துடன், அந்த ஆளின் பெயரும் பதவியும் நீதிநெறிக் கவனத்துக்குட்படுத்தப்படுதல் வேண்டும்.

**55.** ஒவ்வொரு கம்பனியினதும் அல்லது ஆட்கள் குழுவினதும் செயலாளர், முகாமையாளர், தவிசாளர், அல்லது வேறு பிரதான அலுவலர், அத்தகைய கம்பனியினல் அல்லது ஆட்கள் குழுவினல் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ்ச் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவையான அத்தகைய எல்லாச்செயல்களையும், கருமங்களையும் அல்லது விடயங்களையும் செய்வதற்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்:

ஆயின், கம்பனி ஒன்றன் அல்லது ஆட்கள் குழுவொன்றின் பிரதிநிதியாக விருக்கின்றுர் என்றவகையில் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் அறிவித்த லொன்று வழங்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், அக்கம்பனியுடன் அல்லது ஆட்கள்குழுவுடன் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லையென அல்லது இலங்கையில் வதியும் வேறோர் ஆளே அதன் பிரதான அலுவலர் என எண்பித்தாலொழிய, அந்த ஆள் அதன் பிரதான அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

**56.** *(1)* இச்சட்டத்தினல் அல்லது இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளினல் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் அல்லது விடயம், அத்தகைய ஆள் இயலாதவராக அல்லது வதிவற்றவராக இருந்தால், விடயத்திற்கேற்றுற்போல, அத்தகைய இயலாத ஆளின் நம்பிக்கைப்பொறுப்பாளரினல் அல்லது அத்தகைய வதிவற்ற ஆளின் முகவரினல் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) வதிவற்ற ஆள் ஒருவர் மரணமெய்துமிடத்து, மரணமெய்திய நேரத்தில் அத்தகைய வதிவற்ற ஆளின் முகவராக இருந்தவரான எவரேனும் ஆள், அவருடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் மரணச்சொத்து வரியினை விதிக்கும் நோக்கத்திற்காக, காலத்துக்குக்காலம் தேவைப்படுத்துவதான அத்தகைய எல்லாத் தகவல்களையும் விவரங்களையும் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

**57.** பங்குடைமையில் அல்லது வேறுவகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள், அவர்கள் சார்பில் அல்லது வேறு எவரேனும் ஆளின் சார்பில், ஏதேனும் தன்மையில் கூட்டாகச் செயற்படுமிடத்து, அவர்கள் அத்தகைய தன்மையில் தனியாள் ஒருவரினல் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறுன அத்தகைய எல்லாச் செயல்களுக்கும், விடயங்களுக்கும், பொருட்களுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் வகைசொல்ல வேண்டியவராதல் வேண்டும்.

**58.** *(1)* நம்பிக்கைப் பொறுப்பாளராக மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்கு ஆளானவரான ஆள் ஒவ்வொருவரும், அல்லது வேறோர் ஆளின்

சார்பில் மரணச்சொத்து வரி எந்த ஆளிடமிருந்து அறவிடற்பாலதோ அல்லது அறவிடப்பட்டுள்ளதோ அந்த ஆளும், அத்தகைய வேறு ஆளின் சார்பில் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற முறையில் அவருடைய உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் வரும் எவையேனும் சொத்துக்களிலிருந்து அத்தகைய வரித்தொகையினைக் கொடுப்பதற்குப் போதுமான பகுதியைப் பிடித்து வைத்திருக்கலாம்; அத்துடன், அத்தகைய சொத்துக்களை அவர் அவ்வாறு வைத்திருப்பது தொடர்பாக எவரேனும் ஆளுக்கு எதிராக இத்தால் பழிவிலக்களிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பழிவிலக்களிக்கவும்படுகிறார்.

(2) நம்பிக்கைப் பொறுப்பாளராக செயலாற்றும் எவரேனும் ஆள் மரணச் சொத்து வரியைச் செலுத்தியிருந்து, அவ்வாறு செலுத்தப்பட்ட வரியை மீட்க வல்லதாக நம்பிக்கைப்பொறுப்பின் சொத்துக்கள் எவையும் அவருடைய உடைமைக்குள் அல்லது கட்டுப்பாட்டுக்குள் வராதவிடத்து, அத்தகைய வரியானது, நம்பிக்கைப்பொறுப்பின் பயன்பெறுபவர்களிடமிருந்து நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு போகுமதியாக உள்ள கடனாதல் வேண்டும்.

(3) வேறு எவரேனும் ஆளின் சார்பில் மரணச்சொத்து வரியினைச் செலுத்துவதற்கு ஆளானவரான எவரேனும் ஆளினால் மரணச்சொத்து வரியானது செலுத்தப்படுமிடத்தும் அல்லது அந்த ஆளிடமிருந்து அறவிடப்படுமிடத்தும் அவ்வாறு செலுத்தப்பட்ட வரியிலிருந்து அவர் பிடித்துவைக்கக் கூடியதாக அத்தகைய வேறு ஆளின் சொத்துக்கள் எவையும் அவருடைய உடைமைக்குள் அல்லது கட்டுப்பாட்டுக்குள் வராதவிடத்தும், அத்தகைய வரியானது அத்தகைய வேறு ஆளிடமிருந்து அவருக்குப் பெறுமதியாக உள்ள கடனென்றாதல் வேண்டும்.

**59.** (1) மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச்சொத்துத் தொடர்பாக எவரேனும் ஆளினால் செலுத்தற்பாலதான மரணச்சொத்து வரித் தொகையினைக் குறைப்பதான அல்லது குறைக்கும் பயனை உடையதான ஏதேனும் கொடுக்கல்வாங்கல், செயற்கையானதென அல்லது புனையப்பட்டதென அல்லது கையுதிர்ப்பு எதற்கும் உண்மையில் பயனளிக்கப்படவில்லை என வரி மதிப்பீட்டாளர் ஒருவர் கருதுமிடத்து, அவர் அத்தகைய கொடுக்கல்வாங்கல் எதனையும் அல்லது கையுதிர்ப்பு எதனையும் பொருட்படுத்தாதுவிட்டுவிடலாம் என்பதுடன், அத்தகைய ஆளை அதற்கிணங்க வரிமதிப்பிடுதலும்வேண்டும்.

(2) இப்பிரிவில் "கையுதிர்ப்பு" என்பது நம்பிக்கைப்பொறுப்பு, வழங்கல், உறுப்புரை, உடன்படிக்கை அல்லது ஒழுங்கு எதனையும் உள்ளடக்குவதாகும்.

**60.** மரணமெய்திய ஆள் ஒருவரின் இறுதிவிருப்பாவணத்தில் நிறைவேற்றுநராக பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர், நிறைவேற்றுநர் ஒருவராக பதவியை ஏற்றுக்கொள்ள அவர் விரும்பாவிட்டால், இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றுநர் ஒருவருக்குள்ள கடப்பாடுகளினின்றும் பொறுப்புக்களினின்றும் விலக்களிக்குமாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் விண்ணப்பிக்கலாம் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியும் விண்ணப்பகாரர் மரணமெய்தியவரின் ஆதனம் எதனையும் உடைமையில் எடுக்கவில்லை என அல்லது அவற்றுடன் தலையிடவில்லையெனத் திருப்திப்பட்டால், அதற்கிணங்க விலக்களிக்கும் சான்றிதழ் ஒன்றினையும் வழங்கலாம்;

ஆயின் சான்றிதழானது, மோசடியாக அல்லது பிழையாகப் பிரதிநிதித்துவம் செய்வதன்மூலம், அல்லது நிகழ்வுகள் பற்றிய பிழையான கூற்றென்றன் மேல் பெற்றுக்கொள்ளப்பட்டதென, அல்லது சான்றிதழ் வழங்கப்பட்டதன் பின்னர் அதனை வைத்திருப்பவர் எந்நேரத்திலாயினும் மரணமெய்தியவரின் ஆதனத்தை உடைமையில் எடுத்துள்ளார் என அல்லது அவற்றுடன் தலையிட்டுள்ளாரென ஆணையாளர் தலைமையதிபதி கருதினுல் அவர் எந்நேரத்திலேனும் அத்தகைய ஏதேனும் சான்றிதழை அழிக்கலாம்.

## அத்தியாயம் XV
### மீளக்கொடுப்பனவு செய்தல்

61. (1) வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகட்கு உள்ளாக எக்காலத்திலேனும் மரணச் சொத்துவரியாகச் செலுத்தப்பட்ட பணங்கள் எவற்றையும் திருப்பிப் பெறுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலானதும் கோரிக்கைக்கான ஏதுக்களை உள்ளடக்கியதுமான கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டு, அத்தகைய மரணச்சொத்துவரியானது மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படும்வகையில் எண்பிக்கப்பட்டால், மேலதிகமாகச் செலுத்தப்பட்டதான வரித்தொகையினைத் திருப்பித்தருவது ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் அவர் அவ்வாறு இத்தால் தேவைப்படுத்தவும்படுகிறுர் :

ஆயின் —

(i) சட்டநடவடிக்கைகள் எவற்றின் காரணமாகவும், கழிவொன்ருக அனுமதிக்கக்கூடியதான, மரணமெய்தியவரால் கொடுக்கப்படவேண்டியதான கடன் எதுவும் கண்டறியப்படாதவிடத்தும், அதன் விளைவாக நிறைவேற்றுநர், முன்னர் சொல்லப்பட்டவாறுன மூன்றுண்டுக் காலத்திற்குள்ளாக மரணச் சொத்துவரியினைத் திருப்பித் தருமாறு கோருவதினின்றும் தடுக்கப்பட்டவிடத்தும், அத்தகைய கோரிக்கையினைச் செய்வதற்கு நியாயமானதான அத்தகைய மேலதிக காலத்தினை அனுமதிப்பது ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ii) இப்பிரிவிலுள்ளது எதுவும் எவரேனும் ஆளின்மீது —

(அ) இச்சட்டத்தின்கீழ் மேன்முறையீட்டு வகையில் அத்தகைய ஆளினுல் எடுத்துக்காட்டப்பட்டதான அல்லது காட்டியிருக்கக்கூடியதான ஏதேனும் ஏதுவின்மேல் மரணச்சொத்து வரியாகச் செலுத்தப்பட்ட எவையேனும் பணங்களைத் திருப்பிப் பெறுவதற்கான கோரிக்கையினைச் சமர்ப்பிக்கும் ஏதேனும் உரிமையினை அல்லது திருப்பிப் பெறுவதற்கான ஏதேனும் உரிமையினை ;

ஆ) மரணச்சொத்து வரியாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டனவான எவையேனும் பணங்களை அறவிடுவதற்கு அல்லது திருப்பித் தருவதற்கு அரசிற்கு எதிராக வழக்குத் தொடருவதற்குள்ள ஏதேனும் உரிமையினை,

அளித்தலாகாது அல்லது அளிப்பதாகக் கருதலாகாது.

(2) எவரேனும் ஆளினுல் செலுத்தப்பட்ட ஏதேனும் மரணச்சொத்துவரித் தொகையினை மீளப்பெறுவதற்கு அவ்வாள் உரித்துடையவராக இருக்கின்றவிடத்து —

(அ) அத்தகைய மீளளிப்பானது, 29 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் வரிமதிப்பீட்டாளரொருவருடனுன உடன்படிக்கையின்மீது அல்லது வரி மதிப்பீடு தொடர்பிலான மேன்முறையீடொன்றன் இறுதித் தீர்மானத் தின்மீது வரிமதிப்பீட்டுத் தொகையைக் குறைத்ததன் விளைவாக எழுந்த தாயின், அவ்வாறு உடன்பட்டுக்கொண்ட தேதியிலிருந்து அல்லது அத் தகைய தீர்மானம் அவ்வாளுக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலங்களுக்குள்ளாக; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் விடயத்தில், அவ்வாறு மீளளிப்புச் செய்யவேண்டு மென்று ஆணையாளர் தலைமையதிபதிக்கு அவ்வாளினுல் எத்தேதியன்று எழுத்திலான கோரிக்கை செய்யப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஆறு மாத காலங்களுக்குள்ளாக,

அத்தொகையானது, ஆணையாளர் தலைமையதிபதியினுல் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படாதிருந்தால், அப்போது, (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆறுமாத காலப்பகுதியின் பின் னர் அத்தொகை திருப்பிக் கொடுக்கப்படாதிருக்கும் ஒவ்வொரு முழு மாத காலப்பகுதிக்கும் ஒரு வீதத்தில் கணக்கிடப்படும் வட்டியினை அத்தொகைமீது பெறுவதற்கு அவ்வாள் உரித்துடையவராவார்.

## அத்தியாயம் XVI

### தவறுகளும் தண்டங்களும்

62. ஆதனவெளிப்படுத்துகை ஒன்றினை அல்லது இச்சட்டத்தின்கீழ் அவ ரால் ஒப்படைக்கப்பட வேண்டுமென அல்லது அவரால் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் வேறு கூற்றினை ஒப்படைக் கத் தவறியவரான ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாவார் என்பதுடன், நீதிவாஞெருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய ஒவ்வொரு தவறுக்கும் ஐநூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

63. இருபத்தாறும் பிரிவின் கீழ் அல்லது 49 ஆம் பிரிவின் கீழ் அல்லது 52 ஆம் பிரிவின்கீழ் அல்லது 77 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டதான அறிவித் தலொன்றுக்கு இணங்கியொழுகத் தவறும் ஆள் ஒவ்வொருவரும் தவறென் றுக்குக் குற்றவாளியாவார் என்பதுடன், நீதிவாஞெருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அத்தகைய ஒவ்வொரு தவறுக்கும், ஐநூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

64. நியாயமான காரணமின்றி—

(அ) ஆதனவெளிப்படுத்துகை ஒன்றில் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஒப் படைக்கப்பட வேண்டுமென அல்லது கொடுத்துதவப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட எத்தன்மைத்தானதுமான ஏதேனும் வேறு கூற் றில், உள்ளடக்கப்பட்டுள்ள அல்லது உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய ஏதேனும் ஆதனத்தின் பெறுமதியினை உள்ளடக்காது விட்டுவிடுகின்ற அல்லது குறைத்துக் கூறுகின்ற; அல்லது

(ஆ) பதினேழாம் பிரிவின் கீழான ஒரு விடுதொகைக்கான கோரிக்கை ஒன்று தொடர்பாக பிழையான கூற்றொன்றினைச் செய்கின்ற; அல்லது

(இ) மரணச்சொத்துவரியினைச் செலுத்துவதற்கு அவருக்குள்ள அல்லது வேறு எவரேனும் ஆளுக்குள்ள பொறுப்பினைப் பாதிக்கும் ஏதேனும் கருமம் அல்லது விடயம் தொடர்பாக பிழையான ஏதேனும் தகவலைக் கொடுக்கின்ற,

ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாவாரென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு தவறுக்கும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், மொத்தத்தில் இரண்டாயிரம் ரூபாவினதும் மரணச் சொத்து வரி ஏதேனும் இருப்பின், அத்தகைய தவறின் விளைவாக, எத்தொகையால் மரணச் சொத்துவரி குறைத்து விதிக்கப்பட்டதோ அத்தொகையினதும் அல்லது அத்தகைய தவறு கண்டுபிடிக்கப்படாதிருந்தால் எத்தொகையால் மரணச்சொத்து வரி குறைத்து விதிக்கப்பட்டிருக்குமோ அத்தொகையினதும் மொத்தத்தினை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளானவராதலும் வேண்டும்.

65. மரணச்சொத்து வரிக் கொடுப்பனவைத் தட்டிக்கழிக்கும் உளக்கருத்துடன் அல்லது எவரேனும் ஆள் தட்டிக்கழிப்பதற்கு உதவும் உளக்கருத்துடன்—

(அ) இச்சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டதான ஏதேனும் வெளிப்படுத்துகையிலிருந்து, அந்த வெளிப்படுத்துகையில் சேர்ந்திருக்கப்பட வேண்டியதான ஏதேனும் ஆதனத்தை சேர்க்காது தவிர்க்கும்; அல்லது

(ஆ) பதினேழாம் பிரிவின்கீழான ஒரு விடுதொகைக்கான கோரிக்கை ஒன்று தொடர்பாகப் பிழையான கூற்றொன்றினைச் செய்யும், அல்லது

(இ) உண்மையானதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களின்றி, இச்சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட வெளிப்படுத்துகை, கூற்று அல்லது விவரத்திரட்டு ஏதனிலும் கையொப்பமிடும்; அல்லது

(ஈ) இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க, கேட்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட தகவல்கள் பற்றிய எவையேனும் கேள்விகளுக்கு அல்லது வேண்டுகோள்களுக்கு வாய்ச் சொல்மூலமாயினுஞ்சரி அல்லது எழுத்துமூலமாயினுஞ்சரி பொய்யான பதிலை அளிக்கும் அல்லது கொடுத்துதவும்; அல்லது

(உ) எவையேனும் பொய்க்கணக்குப் புத்தகத்தை அல்லது வேறு பொய் ஆவணத்தைத் தயாரிக்கும் அல்லது வைத்திருக்கும் அல்லது தயாரிக்க அல்லது வைத்திருக்க அதிகாரமளிக்கும்; அல்லது

(ஊ) ஏதேனும் மோசடியான முறையை, தந்திரத்தை அல்லது உபாயத்தை பிரயோகிக்கும் அல்லது பிரயோகிப்பதற்கு அதிகாரமளிக்கும்,

எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாவாரென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்—

(i) இச்சட்டத்தின்கீழ்க் கொடுப்பதற்கு ஆளானவரான, அவர் அல்லது அவ்வாறு உதவிசெய்த வேறு ஆள் தட்டிக் கழித்த அல்லது தட்டிக் கழிக்க எத்தனித்த மரணச் சொத்து வரித்தொகையின் இருமடங்கிற்குச் சமானமான ஒரு தொகைக்கும்;

(ii) பத்தாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத ஒரு தொகைக்கும்;

அல்லது ஆறு மாதங்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்திற்கான இரு வகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**66.** (i) பிரிவு 73 (2) இன் கீழ் இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்கான சத்தியத்தைச் செய்துகொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டிருக்கும் ஆள் ஒருவராக இருந்து, அத்தகைய சத்தியத்தைச் செய்துகொள்ளாது இச்சட்டத்தின்கீழ்ச் செயலாற்றுகின்ற; அல்லது (ii) பிரிவு 73 (1) இன் ஏற்பாடுகளுக்கு முரணுக அல்லது 73 (2) ஆம் பிரிவின்கீழ்ச் செய்துகொள்ளப்பட்ட ஒரு சத்தியத்திற்கு முரணுகச் செயலாற்றுகின்ற; அல்லது

(iii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணுகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் ஆளுக்கு உதவிபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற அல்லது அந்த ஆளைத் தூண்டுகின்ற,

ஆளொவ்வொருவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாவாரென்பதுடன், நீதிவானெருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**67.** நாற்பத்து மூன்றும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ்த் தவறென்றுக்கு குற்றவாளியாவாரென்பதுடன், நீதிவானெருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அப் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுகச் செலுத்தப்பட்ட பணத்தொகைக்குச் சமமான ஒரு குற்றப்பணத்திற்கு ஆளானவராதலும் வேண்டும்.

**68.** ஆணையாளர் தலைமையதிபதி, தவறு புரியப்பட்டதான சந்தர்ப்பங்களைக் கருத்திற்கொண்டு, அத்தவறு தொடர்பாகத் தொடரப்பட்ட குற்ற வழக்குத் தொடுப்பு ஒன்றில் நீதித் தீர்ப்பு வழங்குவதன்முன்னர் எக்காலத்திலாயினும், இச்சட்டத்தின் கீழான தவறு எதனையும் இணங்கித்தீர்க்கலாம்.

**69.** இச்சட்டத்தின்கீழான தவறென்றுக்காக எவரேனும் ஆளின்மீது வழக்குநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை, ஏதேனும் அத்தகைய தவறுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமை, அல்லது இச்சட்டத்தின் கீழ் தண்டம், குற்றப் பணம் அல்லது மறியற்றண்டனை சுமத்தப்பட்டமை, எவரேனும் ஆள், மரணச்சொத்து வரி வரிமதிப்பிடப்படுவதினின்றும் அல்லது அத்தகைய வரி செலுத்தப்படுவதினின்றும் ஆளாவதற்கு அவருக்குள்ள பொறுப்பினின்றும் அவரை விடுவிப்பதாகாது.

**70** இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பாக, ஆணையாளர் தலைமையதிபதியின் தூண்டுதலின்பேரிலன்றி, அல்லது எழுத்திலான அனுமதியுடனன்றி, வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

**71.** இச்சட்டத்தின்கீழ் மரணச்சொத்து வரிக்கு ஆளானவரான எவரேனும் ஆளினுல், அல்லது அவரது அதிகாரம்பெற்ற பிரதி நிதியினுல், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஆணையாளர் ஒருவருக்கு அல்லது பிரதியாணை

யாளர் ஒருவருக்கு அல்லது ஒரு வரிமதிப்பீட்டாளருக்கு, இச்சட்டத்தின் கீழ் எழுவதான ஏதேனும் கருமம் தொடர்பாகக் கூற்று எதுவும் செய்யப்படுமிடத்து அல்லது ஆவணம் முன்வைக்கப்படுமிடத்து, ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளது, எது எப்படியிருப்பினும், அத்தகைய கூற்று அல்லது ஆவணம், இச்சட்டத்தின் 63 ஆம், 64 ஆம் அல்லது 65 ஆம் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டதான ஏதேனும் தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிரான வழக்குநடவடிக்கைகள் எதனிலும் சான்றாக அனுமதிக்கற்பாலதாதல் வேண்டும்.

## அத்தியாயம் XVII

## நிருவாகம்

**72.** (1) ஆணையாளர் தலைமையதிபதியானவர் இச்சட்டத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதியானவர், எவரேனும் ஆணையாளரை, அல்லது பிரதி ஆணையாளரை அல்லது வரிமதிப்பீட்டாளரை, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றினாலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்டதான அல்லது அவர்மேல் சுமத்தப்பட்டதான, அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டதான ஏதேனும் தத்துவத்தினை, கடமையினை அல்லது பணியினை பிரயோகிப்பதற்கு. புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு, பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கலாம்.

(3) இச்சட்டத்தினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்ட அல்லது அவர்மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தினை, கடமையினை அல்லது பணியினை பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் ஆணையாளர், பிரதி ஆணையாளர், அல்லது வரிமதிப்பீட்டாளர் ஒருவர், முரணானது எண்பிக்கப்படும்வரையில், அந்தத் தத்துவத்தினை, கடமையினை அல்லது பணியினை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவராக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் ஒருவர், இச்சட்டத்தினால் வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அல்லது அவர்மேல் சுமத்தப்பட்ட, அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது பணி எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

**73.** (1) இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆளொவ்வொருவரும், அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் எவரேனும் ஆளுக்கு உதவிபுரிவதற்காகத் தொழிலுக்கமர்த்தப்படும் அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழான அவரது கடமைகளைப் புரிவதிலன்றி, இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிவதில் எவரேனும் மரணமெய்திய ஆளின் மரணச்சொத்து தொடர்பாக அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லாக் கருமங்கள் சம்பந்தமாகவும் இரகசியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதுடன், அத்தகைய கருமத்தை, அத்தகைய மரணமெய்திய ஆளின் நிறைவேற்றுநருக்கு அல்லது அத்தகைய நிறைவேற்றுநரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு, அல்லது அமைச்சருக்கு அல்லது அமைச்சரின் செயலாளருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அறிவித்தலாகாது

அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள எவையேனும் பதிவேடுகளைப் பார்வையிடுவதற்கு எவரேனும் ஆளை விடுதல் அல்லது அனுமதித்தல் ஆகாது.

(2) இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்படும் அல்லது இச்சட்டத்தினது ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகத் தொழிலுக்கமர்த்தப்படும் ஒவ்வோராளும், இச்சட்டத்தின்கீழ்ச் செயலாற்றுவதற்கு முன்னர், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சமாதான நீதிவானொருவர் முன்னிலையில் இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்கான சத்தியத்தைச் செய்து கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அமைச்சரும், அமைச்சரின் அமைச்சின் செயலாளரும் இச்சட்டத்தின்கீழ்ச் செயலாற்றுவதற்கு முன்னர்; விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சமாதான நீதிவானொருவர் முன்னிலையில் இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்கான சத்தியத்தைச் செய்து கையொப்பமிடலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் அல்லது இச்சட்டத்தினது ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகத் தொழிலுக்கமர்த்தப்படும் எவ்வாளும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறு தவிர, இச்சட்டத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையினை, ஆவணத்தினை அல்லது வரிமதிப்பீட்டினை ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்குமாறு, அல்லது இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரியும்போது அவரது கவனத்துக்கு வரும் ஏதேனும் கருமத்தை அல்லது விடயத்தை ஏதேனும் நீதிமன்றத்திற்கு வெளிவிடுமாறு அல்லது அறிவிக்குமாறு தேவைப்படுத்தப் படுதல் ஆகாது.

(4) இப்பிரிவில் அடங்கியுள்ளது, எது எவ்வாறிருப்பினும், உண்ணாட்டு அரசிறைத் திணைக்களத்தைச் சார்ந்த எவரேனும் அலுவலர், இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் கீழ் அவரது கடமையைப் புரிகையில் அவருக்குத்தெரியவரும் ஏதேனும் கருமத்தை–

(அ) இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான அத்தகைய வேறு சட்டத்தின் கீழ் ஏதேனும் கடமையைப் புரிவதற்கு அத்தகைய தெரியப்படுத்துகை அவசியமாயின், அத்திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலருக்கு; அத்துடன்

(ஆ) மரணமெய்திய ஆள் ஒருவரின் மரணச்சொத்து தொடர்பாக அந்த நாட்டில் செலுத்தற்பாலதான மரணச் சொத்து வரியிலிருந்து நிவாரணம் வழங்குவதனை இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவசியமான அத்தகைய அளவுக்கு, ஏதேனும் நாட்டின் மரணச்சொத்துவரி அதிகாரிக்கு,

தெரியப்படுத்தலாம், அத்துடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தின் கீழ் அல்லது அவரால் நிருவகிக்கப்படும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட அல்லது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட வெளிப்படுத்துகை அல்லது ஆவணம் எதனிலும் அடங்கியுள்ள விவரங்கள் எவற்றினதும், சரியான பிரதியொன்றென அவரால் அல்லது அவர் சார்பில் சான்றுபடுத்தப்பட்ட அத்தகைய விவரங்களின் உண்மைப் பிரதியை, இச்சட்டத்தின் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் ஏதேனும்

நீதிமன்றத்தில் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கப்படச் செய்யலாம்; அத்துடன் அத்தகைய பிரதியானது ஆவணங்களின் எண்பிப்புத் தொடர்பான சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், எது எப்படியிருப்பினும் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும்:

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி, ஏதாவது விடயத்தில் அத்தகைய வெளிப்படுத்துகையை அல்லது ஆவணத்தை எழுதிய, ஆக்கிய, கையொப்பமிட்ட அல்லது கொடுத்துதவிய ஆளின் கையெழுத்தை அல்லது கையொப்பத்தை எண்பிப்பதற்கு அவசியமான விடத்து, ஆனால் அவ்வாறு எண்பிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே, ஏதேனும் அத்தகைய வெளிப்படுத்துகையின் அல்லது ஆவணத்தின் மூலத்தை காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம்:

ஆயின், மேலும், அத்தகைய வெளிப்படுத்துகையின் அல்லது ஆவணத்தின் அல்லது அத்தகைய வெளிப்படுத்துகையில் அல்லது ஆவணத்தில் அடங்கியுள்ள எவைவேனும் விவரங்களை ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கில் காண்பிக்கும்படி ஆணையாளர் தலைமையதிபதி வற்புறுத்தப்படுதலாகாது.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளதெதுவும் எப்படியிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதியானவர்-

(அ) அவ்வாறு செய்யும்படி அத்தகைய நீதிமன்றத்தினால், தேவைப்படுத்தப்பட்டால், மரணமெய்திய ஆளொருவரின் மரணச்சொத்துத் தொடர்பான மரணசொத்து நிருவாக நடவடிக்கை தொடங்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில், அத்தகைய மரணச்சொத்துத் தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையை, விபரத் திரட்டை அல்லது மதிப்பீட்டைக் காண்பிக்கலாம், அத்துடன்

(ஆ) 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 158ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் அல்லது (6)ஆம் உட்பிரிவில் அல்லது (7) ஆம் உட்பிரிவில் அல்லது (8) ஆம் உட்பிரிவில் அல்லது (9) ஆம் உட்பிரிவில் அல்லது (10) ஆம்உட்பிரிவில் அல்லது (11) ஆம்உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான எல்லாத் தகவல்களையும் ஏதேனும் ஆணைக்குழுவினால் அல்லது எவரேனும் அலுவரினால் அவ்வாறு செய்யும்படி, தேவைப்படுத்தப்பட்டால், எவரேனுமாளின் அலுவல்கள் தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் அவருக்குக் கிடைக்கக்கூடிய எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதல் வேண்டும்.

## அத்தியாயம் XVIII
## பொது

**74** (1) இச்சட்டத்தின் நெறிகளையும், ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும், அல்லது அவற்றுக்குப் பயனளிக்கும் நோக்கத்துக்காகவும். அத்துடன் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பாகவும் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொன்றை மீறுதல், அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுதல், இச்சட்டத்தின்கீழ் நீதிவானொருவரால் சுருக்கமுறைவிசாரணையின் மூலம் விசாரிக்கப்பட்டு, இருநூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணமொன்றினால் தண்டிக்கப்படவேண்டிய தவறொன்றாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குவிதியாவது, பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும்வரை, பயனுடையதாக இருத்தலாகாது. அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**75.** இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்குமாக அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கான படிவங்களை ஆணையாளர் தலைமையதிபதி காலத்துக்குக் காலம் விதித்துரைக்கலாம்.

**76.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தேவைப்படக்கூடிய ஏதேனும் தகவலையளிக்கக்கூடிய நிலைமையில் எவரேனும் பகிரங்க அலுவலர் இருக்கின்றாரென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய தகவலை அளிக்கும்படி எழுத்திலான விண்ணப்பம் மூலம் அத்தகைய பகிரங்க அலுவலருக்கு வேண்டுகோள் விடுக்கலாம்; அத்துடன், அத்தகைய ஒவ்வொரு பகிரங்க அலுவலரும், அவருடைய அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை அவ்வாறு தேவைப்படுத்தப்பட்ட தகவலையளித்தல் வேண்டும்.

(2) எத்தகைய இடாப்பை, புத்தகத்தை, பதிவேட்டை, பத்திரத்தை, ஆவணத்தை அல்லது நடவடிக்கைக் குறிப்பேட்டைச் சோதனை செய்தலானது இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் வரியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அல்லது ஏதேனும் அத்தகைய வரி தொடர்பாக ஏதேனும் மோசடியை அல்லது விடுபட்டமையைக் கண்டுபிடிப்பதற்கு வழிவகுக்கக்கூடியதாக இருக்கக்கூடுமோ அத்தகைய ஏதேனும் இடாப்பை, புத்தகத்தை, பதிவேட்டை, பத்திரத்தை ஆவணத்தை அல்லது நடவடிக்கைக் குறிப்பேட்டை அவருடைய கட்டுக்காப்பில் வைத்திருக்கும் ஒவ்வொரு பகிரங்க அலுவலரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை எல்லா நியாயமான நேரத்திலும், ஏதேனும் கட்டணம் அல்லது இறுப்பனவு இல்லாமல், அத்தகைய நோக்கத்திற்கு ஏதேனும் அத்தகைய இடாப்பை, புத்தகத்தை, பதிவேட்டை, பத்திரத்தை, ஆவணத்தை, நடவடிக்கைக் குறிப்பேட்டைப் பார்வையிடுவதற்கும், அவர் தேவையானதெனக் கருதக்கூடியதான அத்தகைய குறிப்புகளையும், பொழிப்புகளையும் அவற்றிலிருந்து எடுப்பதற்கும் அனுமதித்தல் வேண்டும்,

(3) இப்பிரிவில், ''பகிரங்க அலுவலர்'' என்பது, உள்ளூரதிகார சபையொன்றில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றில் வேலைக்கமர்த்தப்பட்ட எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

**77.** மரணமெய்திய ஆளொருவரின் மரணச்சொத்தின் பாகமாக அமையும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தின் மேற்பார்வையை கட்டுப்பாட்டை, கட்டுக்காவலை, முகாமையை அல்லது உடைமையை வைத்திருக்கும் எவரேனும் ஆளை, அத்தகைய ஆதனத்தைப் பார்வையிடுவதற்கு அத்தகைய அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரை அனுமதிக்கும்படி ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்; அத்துடன், அத்தகைய அறிவித்தல் எவ் ஆளுக்கு முகவரி யிடப்பட்டதோ அவ்வாள், அது கிடைக்கப்பெற்றதன்மேல், அந்த அறிவித்தல் தொடர்புபடுத்தும் ஆதனத்தைப் பார்வையிடுவதற்கு, அத்தகைய அறிவித்தலில் பெயர்குறிக்கப்பட்ட பகிரங்க அலுவலருக்கு எல்லா வசதிகளையும் அளித்தல் வேண்டும்.

**78.** (1) இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"முகவர் என்பது, வதிவற்ற ஆள் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் பொழுது —

(அ) இலங்கையில் அற்றேணியொருவரையும் காரணியையும் அல்லது பெறுநரையும் அல்லது முகாமையாளரையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வதிவற்ற ஆளின் சார்பில் ஏதேனும் ஆதனத்தின் மேற்பார்வையை, கட்டுக்காவலை, உடைமையை, முகாமையை அல்லது கட்டுப்பாட்டை வைத்திருக்கும் இலங்கையிலுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"தோதான மாவட்ட நீதிமன்றம்" என்பது, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாவதோடு, மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு நியாயாதிக்கமுடைய வேறு ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தையும், அல்லது குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின்கீழ் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டதான மரணசாதனத் தத்துவப்பத்திரம் அல்லது மரணசாதன அதிகாரப் பத்திரம், எம்மாவட்ட நீதிமன்றத்தினால் மீள இலச்சினையிடப்பட்டதோ அவ்வேறு ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தையும் உள்ளடக்கும் ;

"வரிமதிப்பீட்டாளர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை வரிமதிப்பீட்டாளர் என்று பொருளாவதோடு, உண்ணாட்டரசிறைச் சிரேட்ட வரிமதிப்பீட்டாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பது, மரணச் சொத்து வரியைச் செலுத்த ஆளாகும் ஆளொருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் பொழுது, சட்டத்தரணியொருவர், இலங்கை வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர், ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவர் அல்லது (145 ஆம் அத்தியாயமான) கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கம்பனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் கணக்காய்வாளராகப் பதியப்பட்டு ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தனிநபரொருவர் என்று பொருளாகும்;

"ஆட்கள் குழு" என்பது, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை அல்லது பகிரங்க அதிகாரசபை. ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது இணைப்பு, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் சகோதரத்துவ சங்கம், இணையுரிமை அமைப்பு; கழகம், அல்லது ஆட்கள் சங்கம் ஆகியவற்றை உள்ளடக்கும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"ஆணையாளர்" என்பது. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் என்று பொருளாகும்;

"கம்பனி" என்பது, இலங்கையில் அல்லது வேறெங்காயினும் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி என்று பொருளாகும்;

"மரணமெய்தியவர்" அல்லது "மரணமெய்திய ஆள்" என்பது, 1978 ஆம் ஆண்டு, நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்பு இறக்கும் எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"ஆதன வெளிப்படுத்துகை" என்பது, மரணச்சொத்து வரியை மதிப்பிடும் நோக்கத்திற்காக, மரணமெய்தியவரின் நிறைவேற்றுநரால் அல்லது மரணச்சொத்து வரியைச் செலுத்த ஆளான வேறு ஆளினால் இச்சட்டத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்ட ஒரு வெளிப்படுத்துகை என்று பொருளாகும்;

"பிரதி ஆணையாளர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைப் பிரதி ஆணையாளர் என்று பொருளாகும்;

"மரணச் சொத்து" என்பது, —

(அ) மரணமெய்தும்பொழுது இலங்கையை வாழிடமாகக் கொண்டிருந்த மரணமெய்திய ஆளொருவரின் விடயத்தில் இலங்கையில் அமையாத அசைவற்ற ஆதனந்தவிர, எங்கே அமைந்திருந்தாலும் அவருடைய மரணத்தின்மேல் கைமாறும் எல்லா ஆதனங்கள் என்றும்;

(ஆ) மரணமெய்தும்போது இலங்கையை வாழிடமாகக் கொண்டிராத மரணமெய்திய ஆளொருவரின் விடயத்தில், அவருடைய மரணத்தின்மேல் கையாறும் இலங்கையிலுள்ள எல்லா ஆதனங்கள் என்றும் பொருளாகும்;

"மரணச்சொத்து வரி" அல்லது "வரி" என்பது, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட வரி என்று பொருளாகும்.

"பாரபந்தங்கள்" என்பது, ஈடுகள் அடைமானங்கள், முடிவுறுத்தப்படக்கூடிய இறுப்பனவுகள் போன்றவைகளை உள்ளடக்கும்;

"நிறைவேற்றுநர்" என்பது, இறந்த ஆளொருவரின் மரணச்சொத்தின் நிறைவேற்றுநர் அல்லது மரணச்சொத்து நிர்வாகி எனப் பொருள்படுவதுடன், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் கடப்பாடு தொடர்பாக, மரணமெய்திய ஆளொருவரின் ஆதனத்தை உடைமையில் எடுக்கும் அல்லது அதனோடு தலையிடும் ஆளொருவரையும், மரணமெய்திய ஆளொருவரின் மரணச் சொத்துத் தொடர்பில் மரணசாதனத் தத்துவப்பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுதற்காக அல்லது மீள இலச்சினை இடப்படுவதற்காக மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பிப்பதற்கு உரித்துடைய ஆளெவரையும் உள்ளடக்கும்;

"இயலாதவராகவுள்ள ஆள்" என்பது, எவரேனும் பராயமடையாதவர் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆள் என்று பொருளாகும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டின சபை அல்லது கிராமசபை எனப் பொருளாவதுடன் அத்தகைய ஏதேனும் சபையினுல் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும் ;

"வதிவற்ற" என்பது, இலங்கையில் வதியாத என்ற பொருளாகும்;

"ஆள்" என்பது, மரணமெய்திய ஓர் ஆளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும்போது தவிர, ஒரு கம்பனியை அல்லது ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும்;

"ஆதனம்" என்பது, ஒவ்வொருவகையினதுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தையும். அவற்றை விற்பனைசெய்வதனுல் பெறப்படும் வருவாய்களையும், விற்பனை வருவாய்களை அப்போதைக்கு காண்பிக்கும் ஏதேனும் பணத்தையும் அல்லது முதலீட்டையும் அல்லது வேறு சொத்தையும் உள்ளடக்கும்;

"மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம்" என்பது, மரணத்தின்மேல் கைமாறுவதாகக் கருதப்படும் ஆதனத்தையும், நிச்சயமான முறையிலேனுஞ் சரி எதிர்பாராதவகையிலேனுஞ்சரி மரணத்தின்மேல் ஒன்றில் உடனடியாக அல்லது ஏதேனும் இடைவேளைக்குப்பின்னர் கைமாறுகின்ற ஆதனத்தையும், அத்துடன் ஒன்றில் தொடக்கத்திலேயே அல்லது பதிலீட்டுமுறையான மட்டுப்பாடு மூலமாக கைமாறுகின்ற ஆதனத்தையும் உள்ளடக்குமாயினும், எவ்வாதனம் மரணவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக உள்ளதோ அந்த ஆதனத்தை உள்ளடக்காது; அத்துடன், "மரணத்தின் மேல்" எனும் சொல்லமைப்பு, "மரணத்தைத் தொடர்புபடுத்தி மாத்திரம் உய்த்தறியப்படக்கூடியதான ஒரு நேரத்தில்" என்பதை உள்ளடக்குகின்றது;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது கம்பனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும் கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினுல் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடைய ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது குழு எனப் பொருளாகும்;

"நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்பது, இயலாதவராகவுள்ள ஆள் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்பொழுது, அத்தகைய இயலாதவராகவுள்ள ஆளின் சார்பில் ஏதேனும் ஆதனம் தொடர்பான பணிப்பை, கட்டுப்பாட்டை அல்லது முகாமையைக் கொண்டிருக்கும் எவரேனும் பாதுகாவலரை, காப்பாளரை, முகாமையாளரை அல்லது வேறு ஆளை உள்ளடக்கும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(அ) எத்தகைய மரணச்சொத்தொன்றை அல்லது அதன் கண்ணுள்ள அக்கறையை அல்லது எத்தகைய பொதுத் தத்துவத்தை ஆளொருவர் கொண்டிருப்பின், அவர் தம்வகையினராக இருந்திருக்குமிடத்து, அந்த ஆதனத்தை அவர் கையுதிர்ப்பதை அது இயலச்செய்திருக்குமோ, அத்தகைய மரணச்சொத்தை அல்லது அதன்கண்ணுள்ள அக்கறையை அல்லது அத்தகைய பொதுத்தத்துவத்தை அவர் கொண்டிருப்பின், அவ்வாள் ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்குத் தகுதி வாய்ந்தவரென்று கருதப் படுதல் வேண்டும். "பொதுத் தத்துவம்" என்ற சொற்றொடர், அவரினல் செய்யப்படாத கையுதிர்த்தல் ஒன்றின்கீழ் நம்பகன் என்ற தன்மையில் பிரயோகிக்கப்படக்கூடிய ஏதேனும் தத்துவம் நீங்கலாக, வாழ்வாரிடையான சாதனம் மூலம் அல்லது இறுதிவிருப்பாவணம் மூலம், அல்லது இவை இரண்டின் மூலமும் பிரயோகிக்கப்படக்கூடியதாக, நன்கொடை பெறுபவரை அல்லது அதனை வைத்திருக்கும் வேறு ஆளை அவர் பொருத்தமென நினைக்கக்கூடியவாறு நியமிக்க அல்லது ஆதனத்தைக் கையுதிர்க்கச் செய்ய இயலும் ஒவ்வொரு தத்துவத்தையும் அல்லது அதிகாரத்தையும் உள்ளடக்கும்;

(ஆ) மரணமெய்திய ஆளொருவரின் அக்கறையிலிருந்து பயனுறும் கையுதிர்த்தல் ஒன்று, வேறு எவரேனும் ஆளின் ஒருப்பாடு தேவைப்படுகின்றதென்றாலும் அல்லது தேவைப்படவில்லையென்றாலும், அவரினல் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) எப்பணத்தை ஆதனத்தில் பொறுப்பாக்குவதற்கு ஆளொருவருக்குப் பொதுத் தத்துவமுண்டோ அப்பணம், அவர் கையுதிர்ப்பதற்குத் தத்துவமுள்ள ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**79.** மரணச்சொத்துவரிக் கட்டளைச்சட்டத்திலுள்ளது எதுவும் 1978ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்பு மரணமாகும் எவரேனும் ஆளின் மரணச்சொத்துப் பெறுமதியின் மீதான மரணச்சொத்து வரியின் விதிப்பனவிற்கும் கொடுப்பனவிற்கும் அல்லது அது தொடர்பாகவும் ஏற்புடையதாகாது.

**80.** (1) மரணச்சொத்து வரிக் கட்டளைச் சட்டத்திலுள்ளதெதுவும் எப்படியிருப்பினும்:—

(அ) ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய கழிவு அல்லது நீக்கம் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதியானதும் ஒப்புரவானதுமெனக் கருதினல். மரணச் சொத்து வரிக் கட்டளைச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் மரணச்சொத்து வரித் தொகையின்மேல் உறப்பட்ட ஏதேனும் வட்டியைக் குறைக்கலாம் அல்லது நீக்கலாம்; அத்துடன்

(ஆ) 1977ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்பும், 1978ஆம் ஆண்டு நவம்பர் 15ஆந் தேதிக்கு முன்பும் மரணமாகும் எவரேனும் ஆளின் மரணச்சொத்தின் பெறுமதிமீது அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான மரணச்சொத்து வரியைக் கணிக்கும் நோக்கத்திற்காக ஏதேனும் அத்தகைய மரணச்சொத்தின் பாகமாக அமையும் ஏதேனும் இசைவற்ற ஆதனத்தின் பெறுமதி —

(i) அவ்வாதனமானது மரணமெய்தியவரினல், 1977ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டிருந்தால், அவ்வாதனமானது வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில், 1977ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆந் தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்பனே செய்யப்பட்டிருப்பின் எவ்விலேயைப் பெற்றிருக்குமோ அவ்விலேயுடன்,1977 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆந் தேதிக்குப் பின்பும் மரணமெய்தியவரின் இறப்புத் தேதிக்கு முன்பும் அத்தகைய ஆதனத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களினதும், மாற்றங்களினதும் சேர்த்தல்களினதும், எவையேனுமிருப்பின், பெறுமதிக்குச் சமனுன தொகையைச்சேர்த்துவரும் தொகை எனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்.

(ii) அவ்வாதனமானது, மரணமெய்தியவரினுல் 1977ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆந் தேதியன்றும் அதன் பின்பும், 1978 ஆம் ஆண்டு நவம்பர் 15ஆந் தேதிக்கு முன்பும் கொள்ளப்பட்டிருந்தால் வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில், அவ்வாதனமானது, மரண மெய்தியவரினுல் கொள்ளப்பட்ட தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்பனே செய்யப்பட்டிருப்பின், எவ்விலேயைப் பெற்றிருக்குமோ அவ்விலேயுடன் அத்தகைய ஆதனம் மரணமெய்தியவரினுல் கொள்ளப்பட்ட தேதியின் பின்பும் மரணமெய்தியவரின் இறந்த தேதிக்கு முன்பும் அத்தகைய ஆதனத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களினதும், மாற்றங்களினதும், சேர்த்தல்களினதும் எவையேனுமிருப்பின், பெறுமதிக்குச் சமனுன தொகையைச் சேர்த்து வரும் தொகை எனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மரணச்சொத்து வரிக் கட்டளேச் சட்டத்தின், 49 ஆம் பிரிவிலுள்ளது, எது எப்படியிருப்பினும், 1978ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் தேதிக்கு முன்பு மரணமாகும் ஆளொருவரின் மரணச் சொத்தின் பெறுமதிமீது, மரணச்சொத்து வரிக் கட்டளேச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் மரணச் சொத்து வரி, 1979ஆம் ஆண்டு நவம்பர் 15ந் ஆந் தேதியன்று தவணே தவறப்பட்டிருக்குமிடத்து, 1979ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியிலிருந்து 1981 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதிவரை அல்லது கொடுப்பனவுத் தேதிவரை, எத்தேதி முந்தியதோ அதுவரை தவணே தவறிய தொகை மீது, ஆண்டுக்கு எட்டு சத வீதப்படி சாதாரண வட்டி செலுத்தப்படுதல் வேண்டும், ஏதேனும் அத்தகைய வரி, 1981 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் தேதியன்றும் தவணே தவறியதாகவுள்ளவிடத்து, 1981ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் தேதியிலிருந்து கொடுப்பனவுத் தேதிவரை தவணே தவறியதாகவுள்ள வரிதொகை மீது ஆண்டுக்குப் பன்னிரண்டு சத வீதப்படி சாதாண வட்டிசெலுத்தப்படுதல் வேண்டும்.

(3) 1978 ஆம் ஆண்டுநவம்பர் 15ஆந் தேதிக்கு முன்பு மரணமாகும்ஆளொருவரின் மரணச்சொத்தின் பெறுமதி மீது மரணச்சொத்து வரிக் கட்டளேச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படவேண்டிய ஏதேனும் மரணச்சொத்து வரி, இச்

சட்டம் தொடங்கும் நாளன்று தவணை தவறியிருக்குமிடத்து, அத்தகையவரித் தொகை, மரணச்சொத்துவரிக் கட்டளைச் சட்டத்திலுள்ளது எது எப்படியிருப் பினும், அத்தகைய வரித் தொகையானது இச்சட்டத்தின் கீழ் தவணைதவறப் பட்ட மரணச் சொத்துவரி என்றுற் போன்று இச்சட்டத்தின் கீழ் சேகரிக்கப் பட்டு அறவிடப்படலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவிலும், (3) ஆம் உட்பிரிவிலும் 'மரணச்சொத்து வரி' என்பது மரணச்சொத்து வரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் என்றாலும் அல் லது இப்பிரிவினுலென்றாலும் உறப்பட்ட வட்டியை உள்ளடக்கும்.

அட்டவணை

(பிரிவு 3)

| பத்தி I (மரணச்சொத்தின் பெறுமதி) | பத்தி II (வரிவீதம்) |
|---|---|
| மரணச்சொத்துப் பெறுமதியில் முதல் 100,000 ரூபாவுக்கு ... | இல்லை |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு ... | 5 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு ... | 10 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுககு ... | 15 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு ... | 20 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு ... | 25 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு ... | 30 வீதம் |
| மரணசசொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு ... | 35 வீதம் |
| மரணசசொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு ... | 40 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு ... | 45 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு ... | 50 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 300,000 ரூபாவுக்கு ... | 55 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு ... | 60 வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு ... | 65 வீதம் |
| மீதியில் ... ... ... ... ... ... | 70 வீதம் |

## 1980 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் (திருத்தச்) சட்டம்

*[1980, ஜூன் மாதம் 6ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.**

**1.** இச்சட்டம், 1980 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன் கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2.** இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1957 ஆம் ஆண்டின் 29ம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் சட் டத்திற்கான விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின் வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது:—

''இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக ஏற்பாடு செய்வதற்கும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக் கும், பகிரங்கத் தொழில் முயற்சிகளுக்கும் வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன்களுக்கு இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.''

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:—

"இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பிலான உடன்படிக்கைகள் முதலானவற்றிலும் இலங்கை அரசாங்கத்தால் கொடுக்கப்படும் உத்தரவாதங்களிலும் ஒப்பமிடத் தத்துவமளிககப்பட்ட் ஆள்.

2. (அ) இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன் ஒன்றன் தொடர்பிலான உடன்படிக்கை ஒன்றில் ;

(ஆ) பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றுக்கு அல்லது பகிரங்கத் தொழில்முயற்சி ஒன்றுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன் ஒன்றன் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினுல் அளிக்கப்படும் உத்தரவாதமொன்றில் ; அத்துடன்

(இ) இலங்கை அரசாங்கத்தால் எழுதி நிறைவேற்றப்பட வேண்டியதென அத்தகைய உடபடிக்கையின்மூலம் அல்லது உத்தரவாதத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில், முறியில், வாக்குறுதிப் பத்திரத்தில் அல்லது வேறு ஆவணத்தில்,

இலங்கை அரசாங்கத்தின் பெயரிலும் இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் சனுதிபதி அல்லது அவரால் அதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் ஒப்பிடலாம்.

இலங்கை அரசாங்கத்தால் உடன்படிக்கைகளின் கீழும் உத்தரவாதங்களின் கீழும் செலுத்தப்படற்பாலவையான பணத் தொகைகள், இலங்கைத் திரட்டு நிதியத்தின் மீதான பொறுப்பொன்ருக இருத்தல் வேண்டும் என்பது.

3. (அ) இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன் ஒன்றன் தொடர்பிலான உடன்படிக்கை ஒன்றின் கீழ் ;

(ஆ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது ஒரு பகிரங்கத் தொழில்முயற்சிக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன் ஒன்றன் தொடர்பிலான உத்தரவாதம் ஒன்றன் நியதிகளின்படி ; அத்துடன்

(இ) அத்தகைய உடன்படிக்கையை அல்லது உத்தரவாதத்தைப் பின்பற்றி எழுதி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின், முறியின் அல்லது வாக்குறுதிப் பத்திரத்தின் கீழ்,

இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்படற்பாலவையான எல்லாப் பணத்தொகைகளும், இலங்கைத் திரட்டு நிதியத்தின் மீது, இத்தால் பொறுப்பிக்கப்படுகின்றன.

வெளிநாட்டுக் கடன் ஒன்று தொடர்பிலான உடன்படிக்கை ஒன்றினை அல்லது உத்தரவாதம் ஒன்றினைப் பயனுறுத்த ஏற்பாடு செய்வதற்கு நிதியமைச்சருக்குள்ள தத்துவம்.

4. (1) இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும் வெளிநாட்டுக் கடன் ஒன்று தொடர்பிலான உடன்படிக்கையொன்றினை அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது பகிரங்கத் தொழில் முயற்சிக்குக் கொடுக்கப்படும் வெளிநாட்டுக் கடன் ஒன்று தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினுல் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் ஒன்றினைப் பயனுறுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாருன அத்தகைய ஏற்பாட்டை கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு வெளியிடப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் சட்டத்தில் வலுவுடையதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு வெளியிடப்படும் ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளை ஆக்கப் படுவதிலிருந்து ஒரு மாத காலத்துள் பாராளுமன்றத் தின் முன்வைக்கப்படுதல் வேண்டும்.''

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

'பொருள் கோடல். 5. இச்சட்டத்தில் —

''வெளிநாட்டுக் கடன்'' என்பது, —

(அ) வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினுல் அல்லது வெளி நாட்டு அரசாங்கமொன்றின் முகவர் நிலையத்தால், அல்லது

(ஆ) ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பினுல், அல்லது

(இ) பொதுவில் அல்லது ஒரு குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்படக்கூடியவாறுக இலங்கைக்கு வெளியில் இருக்கும் ஆளொருவரால் அல்லது ஆட்கள் குழு வொன்றினுல் (இது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ் சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ் சரி),

இலங்கை அரசாங்கத்துக்கு அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு அல் லது ஒரு பகிரங்கத் தொழில் முயற்சிக்கு ஏதேனும் நாணயத்தில் கொடுக்கப் கடும் ஒரு கடன் என்று பொருளாகும் என்பதுடன், விடயத்துக்கேற்றவாறு, இலங்கை அரசாங்கத்துக்கும், அப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கும் அல்லது அப்பகிரங்கத் தொழில் முயற்சிக்கும், இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்குமிடையிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விடயத்துக் கேற்றவாறு இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத் திற்கு அல்லது அப்பகிரங்கத் தொழில் முயற்சிக்கு உள்ள ஏதேனும் பொறுப்பை விடுவிக்கின்றதான அத்தகைய ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்துக்கு, முகவர் நிலையத்துக்கு, ஒழுங்கமைப்புக்கு, ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்குச் செலுத் துவதற்கு விடயத்துக்கேற்றவாறு இலங்கை அரசாங்கம் அல்லது அப்பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அப்பகிரங்கத் தொழில்முயற்சி பொறுப்பேற்கும் ஏதே னும் பணத்தொகையையும் உள்ளடக்கும்;

''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது, கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட் டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும் இலங்கை அரசாங்கத்தால் கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உத வப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடையதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும் ;

''பகிரங்கத் தொழில்முயற்சி'' என்பது கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாத அதன் செலுத்தப்பட்ட மூலதனத்தை இலங்கை அரசாங்கம் வைத்திருப்பது மான ஏதேனும் கம்பெனி என்று பொருளாகும்.''

# 1980 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம்

## 1979ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தினைத் திருத்துதற்கான ஒரு சட்டம்

**1.** இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''(ஏ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய,'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''(ஏ)என்னும் பந்தியின், (ஔ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய,'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில், ''பணத்தொகையாகவிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பணத்தொகையாக விருத்தல் வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(ஔ) ஆதனமானது அசைவற்ற ஆதனமாகவிருந்து, 1977, ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆதனம் எவ் ஆளினால் கொள்ளப்பட்டதோ அவ் ஆளிடமிருந்து, எவ்வாளுக்கு அத்தகைய மூலதன வருமான மிகை எழுகின்றதோ அவ்வாளினால் 1977, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் நன்கொடைவகையாக அல்லது மரபுரிமை வகையாக அந்த ஆதனம் கொள்ளப்பட்டவிடத்து, இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளினால் அவ்வாதனம் கொள்ளப்பட்ட நேரத்தில் அவ்வாதனத்தின் பெறுமதியானது 1977, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அவ்வாதனத்துக்கு இருந்த சந்தைப் பெறுமதிக்குச் சமமான ஒரு தொகையுடன் 1977, ஏப்பிறில் 1 ஆம் தேதியின் பின்னர் இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளினால் அந்த ஆதனத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், சேர்ப்புகள் அல்லது மாற்றங்கள் எவற்றினதும் செலவும் சேர்த்துப் பெறப்படும் தொகையாக இருத்தல் வேண்டும்.'' அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''23ஆம் பிரிவின்கீழ் அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''23 ஆம் பிரிவின்கீழ் அல்லது 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின்கீழ் அல்லது'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (xviii) என்னும் உட்பந்தியில், ''1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க,'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''1979, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க,'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (xxv) என்னும் உட்பந்தியில், ''தேசிய உலொத்தர் சபையின்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''1979, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, தேசிய உலொத்தர் சபையின்'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (xxvi) என்னும் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(xxvii) 1973 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை நிதித் தாபனச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை நிதித் தாபனத்தின்;

(xxviii) 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டபத் தியேட்டர் நிதித் தாபனச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட டவர்மண்டபத் தியேட்டர் நிதித் தாபனத்தின்;

(xxix) 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர்க்கான ஊக்குவிப்புக்கள் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவின்;

(xxx) மருத்துவக் கட்டளைச்சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவையின்;

(xxxi) 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள் வேதச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட ஆயுள்வேத மருத்துவப் பேரவையின்; அத்துடன்

(xxxii) 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட ஓமியோபதிப் பேரவையின்;'';

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் ''இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''1979 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகத் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(iv) ஒரு வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறின் கரைக் கண்மையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும், நாட்டுக்கு வந்துறக்கூடிய சாத்தியமுடைய வெளிநாட்டுச் செலாவணி நலன்களைக் கருத்திற் கொண்டு அமைச்சரினுல் அங்கீகரிக்கப்படக்கூடியனவான அக்கூறின் கரைமீதான அத்தகைய வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் எழுகின்ற வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறென்றின்;''; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில்,

"அத்தொழில் சம்பந்தமான வேலை" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஒன்றில் அத்தொழில் அந்நிறுவனத்தின் பிரதான நோக்கத்தை உண்மையாக நிறைவேற்றும்போது கொண்டு நடாத்தப்பட்டால் அல்லது அத்தொழில் சம்பந்தமான வேலை" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவினை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீளவிலக்கமிடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில்—

(i) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "மூலம் அல்லது" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "மூலம் அல்லது ஆசிய நிதித்தாபனம் மூலம் அல்லது" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்;

(ii) அப்பந்தியின் (vi) என்னும் உட்பந்தியில் "இலங்கையிலுள்ளவர்களுமானோரின்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையிலுள்ளவர்களுமானோரின்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(iii) அப்பந்தியின் (vii) என்னும் உட்பந்தியில் "ஆட்களின்," என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஆட்களின்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(iv) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

"(viii) இலங்கைப் பிரசையல்லாதவரும் ஆசிய நிதித் தாபனத்தால் இலங்கையில் தொழிலுக்கமர்த்தப்பட்டவருமானஎவரேனும் ஆளின்";

(இ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் உள்ள "அத்துடன்" என்னும் சொல்லை நீக்குவதன்மூலமும் "அத்துடன்" என்னும் சொல்லை (ஔ) என்னும் பந்தியின் இறுதியில் இடுவதன் மூலமும்;

(ஈ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:—

"(க) தொழில்தருநர் ஒருவரால் ஊழியர் ஒருவருக்கு அத்தகைய ஊழியர் வதிவிடத்தில் இருந்து அவரது வேலைத்தலத்துக்கும், வேலைத்தலத்தில் இருந்து அவரது வதிவிடத்துக்கும் மோட்டார் கோச்சு மூலம் பிரயாணம் செய்ய வழங்கப்பட்ட ஏதேனும் இலவசப் பிரயாண வசதியின் பெறுமதி"; அத்துடன்

(உ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன்மூலமும்:—

‘‘(2) இலங்கைப் பிரசையல்லாதவரும், 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள தொழில் முயற்சி யொன்றாகவிருக்கும் பொறுப்புமுயற்சியொன்று தவிர்ந்த ஏதேனும் பொறுப்புமுயற்சியொன்றுடன் அல்லது ஏதேனும் பொறுப்புமுயற்சி யொன்றிலால், 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்—

(அ) தொழில் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ளவரும், அல்லது

(ஆ) இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு இலங்கையில் தொழிலுக்கமர்த் தப்பட்டுள்ளவரும்

ஆன எவரேனும் தனியாளுக்கு அல்லது அத்தனியாள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியில் உள்ளது எதுவும் ஏற்புடையதாகாது’’.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அதன் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது:—

‘‘(எ) ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறில் எவரேனும் ஆளின் வரவில் வெளிநாட்டு நாணயத்தில் இருக்கும் பணங்களின்மீது அவருக்குச் சேரும் வட்டியும்’’.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்—

‘‘இச்சட்டத்தின் 16 ஆம், 17 ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம், அல்லது 21 ஆம்’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘இச்சட்டத்தின் 15 ஆம், 16 ஆம், 16அ ஆம், 16ஆ ஆம், 17 ஆம், 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 21 ஆம், 22அ ஆம், 22ஆ ஆம், 22இ ஆம்’’ என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

‘‘(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான, ஒரு கம்பனி யால் பெறப்பட்ட அத்தகைய ஏதேனும் பங்கிலாபத்தில் இருந்து அக்கம்பனியின் பங்குதாரருக்கு 1979 நவம்பர் 15ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொடுக்கப்பட்ட பங்கி லாபம். ஆயின் இரண்டாவதாகக் கூறப்பட்ட பங்கிலாப மானது முதலாவதாகக் கூறப்பட்ட பங்கிலாபம் பெறப் பட்ட ஏதாவது வரிமதிப்பீட்டாண்டின் போது அல்லது அவ்வாறு பெறப்பட்டதிலிருந்து ஓர் ஆண்டுக் காலத்துள் கொடுக்கப்பட்டாதல் வேண்டும்.’’.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (xii) உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(xiii) 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் விலை கோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியில் பங்குகளாக வுள்ள ஏதேனும் ஆதனம் கைமாறுவதன்மீதும்;

(xiv) (அ) 1979, நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்; அத்துடன்

(ஆ) தனியாள் ஒருவரினல் தனித்து அல்லது வேறு ஆட்களுடன் பங்குடைமையாகக் கொண்டுநடாத்தப்பட்ட ஒரு தொழிலை விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கப்பனி யொன்ருக மாற்றியதன்மேல்,

அத்தொழிலுக்காக 1977, மார்ச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் கொள்வனை செய்யப்பட்டனவான அச்சொத்துக்களின் அத்தகைய பாகம், 1977 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அச்சொத்துக்களுக்கிருந்த சந்தை விலைக்கு மேற்படாத ஒரு விலையில் அக்கம்பனிக்கு மாற்றப் பட்டிருந்தால், மாற்றப்பட்டிருந்தால் மாத்திரமே, அக்கம்பனிக்கு அத்தொழிலின் மூலதனச் சொத்துக்களின் அப்பாகம் கைமாற்றப் படுவதன்மீதும்,''.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது:—

''(ஓ) மொத்த இலாபங்களின் சதவீதமொன்றின் அடிப்படையில் கணிப் பிடப்பட்டவையும், 16அ எனும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றினல், அக்கம்பனியின் இலாபங்களும் வருமானமும் எவ்வேதேனும் காலப்பகுதி தொடர்பில் விலக்களிக்கப்பட்டனவாக இருக்கின்றனவோ அவ்வேதேனும் காலப்பகுதி தொடர்பில், வதி வற்ற ஆளொருவருக்குச் செலுத்தப்பட்டவையுமான, முகாமைக் கான எவையேனும் கட்டணங்களானவை அத்தகைய வதிவற்ற ஆளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டமை இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதப்புரையின்மீது அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்டிருப்பின், அப்போது அக்கட்டணங்கள்;

(ஔ) இலங்கை வர்த்தக மன்றத்தினல் நடாத்தப்படும் ஏதேனும் இரத் தினக்கல் ஏலவிற்பனையில், 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், இரத்தினக்கற்களை விற்பனை செய்வதனல் எவரேனும் ஆளுக்கு எழுகின்ற இலாபங்களும் வருமானமும்;

(க) 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் இரத்தினக் கற்கள் ஏற்றுமதியிலிருந்து எவரேனும் ஆளுக்கு எழுகின்ற இலாபங் களும் வருமானமும்;

(ங) தரகர் ஒருவர் இலங்கை வர்த்தக மன்றத்திடமிருந்து உரிமமொன் றைப் பெற்றிருந்தால், அம்மன்றத்தினல் கொண்டுநடாத்தப்படும்

ஏதேனும் இரத்தினக்கல் ஏல விற்பனையில், 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் இரத்தினக்கற்களை விற்பனை செய்வதன்மூலம் அத்தரகரினல் பெறப்படும் ஏதேனும் தரகுப்பணம்;

(ச) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவைப் பெறுவதற்கு இலங்கை மத்திய வங்கியினல் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, 1979, நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இரத்தினக்கற்களையும் ஆபரணங்களையும் விற்பனை செய்வதிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய ஆளினல் பெறப்படுகின்றதான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமும்;

(ஞ) ஒப்படை அடிப்படையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டு ஏதேனும் செய்முறைக்கு அல்லது தயாரிப்புக்கு உட்படுத்தாமல் மீள ஏற்றுமதி செய்யப்படுவனவாக இருக்கும்—

(i) இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படாத எவையேனும் அருங்கற்களை அல்லது உலோகங்களை,

(ii) எவையேனும் பெற்ருேலியப் பொருள்களை, அல்லது

(iii) அத்தகைய பொருட்களை ஏற்றுமதி செய்வதன்மூலம் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுச் செலாவணி நன்மைகளைக் கருத்துட்கொண்டு இப்பந்தியின் நோக்கங்களுக்காக அமைச்சரினல் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பொருள்களை,

1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஏற்றுமதி செய்வதிலிருந்து அனுப்புநருக்கு அல்லது அனுப்பப்பெற்றவருக்கு இலங்கையில் எழுகின்ற இலாபங்களும் வருமானமும்;

(ட) இலங்கைக் குடியரசின் சனதிபதியினல் செய்யப்பட்ட வெகுமதியொன்ருக, ஆள் ஒருவரினல் பெறப்பட்ட ஏதேனும் பரிசும்;

(ண) எவரேனும் ஆளினல் உருவாக்கப்பட்ட ஒரு புத்தாக்கத்தை அல்லது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஆராய்ச்சியை அங்கீகரிக்குமுகமாக அரசாங்கத்தினல் செய்யப்பட்ட வெகுமதியொன்ருக, அவ்வாளினல் பெறப்பட்ட ஏதேனும் பரிசும்.''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''அமைச்சரால் கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலமாக அங்கீகரிக்கப்பட்டதுமான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அமைச்சரால் கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலமாக 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் நாளுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டதுமான'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. பதினரும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன; அவை, முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 அ, 16 ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும்:—

'1979, நவம்பர் 15 ஆந் தேதிக்குப் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட உல்லாசப் பிரயாண விடுதியகங்கள் தொடர்பான குறித்த சில பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

16 அ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது பொறுப்பு முயற்சியின், 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) இலாபங்களும் வருமானமும் பத்து ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பத்து ஆண்டுக் காலமானது, அத்தகைய பொறுப்பு முயற்சி தொழிலைத் தொடங்கிய தேதியில் இருந்து கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதப்புரையின் பேரில் அமைச்சரால் கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலமாக அங்கீகரிக்கப்பட்டதும் ;

(ஆ) 1979 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி ஒன்றினல் கொண்டுநடாத்தப்படுவதும் ;

(இ) பத்துக் கோடி ரூபாவுக்குக் குறையாத ஒப்பப் பணஞ் செலுத்தப்பட்ட ஒப்புரவு மூலதனத்தைக் கொண்டதாயும்

உள்ள உல்லாசப் பிரயாணிகளுக்கான விடுதியகங்களைக் கொண்டுநடத்தும் ஏதாவது பொறுப்புமுயற்சிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

"உல்லாசப் பிரயாணிகட்கான விடுதியகங்கள் தொடர்பானதும், மேலதிக படுக்கை அறைகளை 1979, நவம்பர் 15 ஆந் தேதிக்குப் பின்னர் கட்டுவதுமான சில பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் வரியில் இருந்து விலக்களித்தல்.

16 ஆ. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து மூன்றும் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 6(1) (v) ஆம் பிரிவின்கீழ் அல்லது இச்சட்டத்தின் 16 (அ) என்னும் பிரிவின்கீழ் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும், 1979 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் தேதிக்குப் பின்னர் அதன் பயன்பாட்டிற்காக மேலதிகப் படுக்கை அறைகளைக் கட்டியமைக்கின்றதுமான உல்லாசப் பிரயாணிகட்கான விடுதியகங்களைத் தொழிற்படுத்தும் பொறுப்புமுயற்சியொன்றன் இயையபான இலாபங்களும் வருமானமும், அத்தகைய மேலதிக படுக்கை அறைகளைக் கட்டியமைத்தலானது உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதென இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையின் விதப்புரையின்பேரில் கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அத்தகைய மேலதிக படுக்கை அறைகள் கட்டியமைக்கப்படும் தேதியிலிருந்து கணிப்பிடப்படும் ஐந்து ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில், "இயையான இலாபங்களும் வருமானமும்" என்பது, 1979, நவம்பர் 15 ஆந் தேதிக்குப் பின்னர் கட்டியமைக்கப்பட்ட மேலதிக படுக்கை அறைகளின் எண்ணிக்கை அப்பொறுப்பு முயற்சியினது படுக்கை அறைகளின் மொத்த எண்ணிக்கைக்குக் கொண்டுள்ள அதே விகித சமத்தை எந்தத் தொகையானது 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் கொண்டுள்ளதோ அந்தத் தொகையெனப் பொருள்படும்.'

**11.** பின்வரும் புதிய பிரிவுகள் 22 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன; அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 அ, 22 ஆ, 22 இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும்:—

"குறித்த சில ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதிலிருந்து எழும் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

22. அ. (அ) 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் ;

(ஆ) 1979ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையினது விதப்புரையின் பேரில் அந்த அதிகாரசபையினுல் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் நீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமானதென அவ் அதிகாரசபையின், அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஒப்பந்தமாகவிருக்கும், அவ்வதிகாரசபையுடன் செய்துகொள்ளப் பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தைப் புரிவதில் மாத்திரமே ஈடுபட்டுள்ளதும்

ஆன ஏதேனும் விலைகோரிப் பெறப்படும் பங்கிடைப் பகிரங்கக் கம்பனியின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் முதலாவது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தம், அத்தகைய கம்பனியால் அத்தகைய அதிகார சபையுடன் செய்துகொள்ளப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் ஐந்து ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

22ஆ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பனியின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் அத்தகைய கம்பனி தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குத் தொடங்கும் தேதியிலிருந்து கணிக்கப்படும் பத்து ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) 1979 நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும் ;

(ஆ) அது தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு தொடங்கும் தேதியில், விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியாக இருப்பதும் அல்லது அது தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்க கம்பனியாக வருவதும்; அத்துடன்

(இ) அரசாங்கத்தின் நகர அபிவிருத்திக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானதென (1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட) நகர அபி

விருத்தி அதிகாரசபையின் விதப்புரையின் பேரில் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்ட ஆதன அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் மாத்திரம் ஈடுபட்டிருப்பதும்;

(ஈ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்

ஆன ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

விலேகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனிகளினல் கொண்டுநடாத்தப்படும் பொறுப்பு முயற்சிகளின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்

22இ. (அ) ஒரு விலேகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியினுல் கொண்டுநடாத்தப்பட்டதும், அத்துடன்

(ஆ) அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டதும்

ஆன ஏதேனும் பொறுப்புமுயற்சியின் (மூலதனச் சொத்துக்களின் விற்பனேயிலிருந்து கிடைக்கும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லேக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் முன்னர் இருந்து வந்த ஏதேனும் தொழிலேப் பிரித்தல், மீள அமைத்தல் அல்லது கொள்ளுதல் மூலம் அத்தகைய பொறுப்பு முயற்சி உருவாக்கப்படாதிருப்பின், அத்தகைய பொறுப்புமுயறசி, தொழிலேக் கொண்டுநடாத்துவதற்குத் தொடங்கிய தேதியிலிருந்து கணிக்கப்படும் ஐந்து ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.''.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''1980 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1981, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று'' என்னுஞ் சொற்களேயும் எண்களேயும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''1980 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1981, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று'' என்னுஞ் சொற்களேயும் எண்களேயும் இடுவதன்மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''1980, ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர்'' என்னுஞ் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1981, ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர்'' என்னுஞ் சொற்களேயும் எண்களேயும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஈ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் —

(i) ''1980, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று'' என்னுஞ் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1981, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று'' என்னுஞ் சொற்களேயும் எண்களேயும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) ''1980, ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர்'' என்னுஞ் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, அப்பந்தியில் அவை காணப்படுமிடத்தெல்லாம், ''1981, ஏப்பிறில் 1 ஆந் தேதிக்கு முன்னர்'' என்னுஞ் சொற்களேயும் எண்களேயும் இடுவதன் மூலமும்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''தொடர்பில் தவிர'' என்னுஞ் சொற்களுக்கு பதிலாக ''தொடர்பில் தவிரவும் அத்தகைய ஆளின் ஊழியர்களை அவர்களது வேலைத்தலத்துக்கும் வேலைத் தலத்திலிருந்தும் எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் கோச்சு வண்டி ஒன்று தொடர்பில் தவிரவும்'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அதற்கான காப்புவாசகத்தின் (iii) ஆம் பந்தியில் ''மறுக்கலாம்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மறுக்கலாம்;'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(ஆ) அதற்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் பந்தியில், ''மீளளிக்கப்படுதல் வேண்டும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''மீளளிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) அதற்கான காப்புவாசகத்தின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(v) ஆறு ஆண்டுகளுக்கு அதிகமாகாத ஒரு காலப்பகுதிக்கு ஆண்டுத் தொகை ஒன்று அவரால் கொடுக்கற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆண்டுத்தொகையானது பெறுமதியானதும் போதுமானதுமான பிரதிபயனுக்காக அல்லது ஆண்டுத்தொகைக்கு உரியவர் வாழும் காலத்துக்கு மட்டுமென இருந்தாலன்றி, அத்தகைய ஆண்டுத்தொகை என்ற வகையில் அவரால் அந்த ஆண்டில் கொடுக்கற்பாலதான ஏதேனும் அத்தகைய தொகை தொடர்பாக கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.''.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதற்குள்ளதான காப்புவாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''ஆயின், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு தரும நிறுவனம் ஒன்றன் வரிமதிப்பிடற்குரியதான வருமானமானது—

(அ) முப்பத்தோராம் பிரிவின்கீழ் அத்தகைய நிறுவனம் உரித்துடையதாக உள்ள ஏதாவது விடுதொகை; அத்துடன்

(ஆ) பன்னிரண்டாயிரம் ரூபா ஆகிய விடுதொகை ஒன்று

இவற்றின் கூட்டுமொத்தத்தினைக் கழித்தபின்னர் வரும் அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கான வரிமதிப்பிடற்குரியதான வருமானமாகும்.''.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியினை உடனடுத்து பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

'(ஓ) எவரேனும் ஆளினுல் பணமாக—

(i) இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்திற்கு;

(ii) 1973 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை நிதித்தாபனச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை நிதித் தாபனத்திற்கு;

(iii) 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டபத் தியேட்டர் நிதித் தாபனச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட டவர் மண்டபத் தியேட்டர் நிதித் தாபனத்திற்கு;

(iv) 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைப் புத்தாக்குநர்க்கான ஊக்குவிப்புக்கள் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவிற்கு

செய்யப்பட்ட நன்கொடை ஒன்று;

(ஔ) (i) ஏதேனும் வீட்டின் அல்லது தொடர்மாடியின் தள இடப்பரப்பு ஆயிரத்து ஐநூறு சதுர அடிக்கு விஞ்சாததாக இருந்தால்; அத்துடன்

(ii) அத்தகைய வீட்டின் அல்லது தொடர்மாடியின் தொடர்பாக 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் விடுதொகை எதுவும், கழிக்கப்படுவதல்லாததாக இருந்தால்,

ஆளொருவரினுல் வேலைக்கமர்த்தப்பட்ட பணியாட்டொகுதியின் உறுப்பினர் எவரினுலும் குடியிருப்பு வீடொன்ருக குடியிருப்பதற்கென அத்தகைய வீட்டினை அல்லது தொடர்மாடியினைக் கட்டுவதில் அத்தகைய ஆளினுல் செலவு செய்யப்பட்ட ஏதேனும் தொகை;

(க) ஐம்பது கோடி ரூபாவை விஞ்சுவதான மூலதனத்தைக் கொண்டதும் 16அ அல்லது 22ஆ என்னும் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்டதுமான செயற்றிட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு கம்பனியில் ஏலவே இருக்கும் பங்குகள் தவிர்ந்த பங்குகளை கொள்முதல் செய்வதில் எவரேனும் ஆளினுல் முதலீடு செய்யப்பட்ட பணம் எதுவும்;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ''மூலதனம்'' என்பது, 18ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.'.

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''(2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(அ) அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும்:—

''(1) இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவற்றிற்கு அமைவாக, வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றிற்கும் எவரேனும் ஆளின்மீது —

(அ) அவர், பெறுநர் ஒருவராக, நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக, நிறைவேற்றுநர் ஒருவராக அல்லது ஒழிப்போன் ஒருவராக அத்தகைய தன்மையில் செயற்படுபவரல்லாத தனி ஆள் ஒருவராக இருந்தால்,

(ⅰ) 1979 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் ;

(ii) 1980 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்,

(ஆ) அவர் இலங்கைப் பிரசை ஒருவரல்லாதவராகவும் 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவினுல் வதிவற்றவரெனக் கருதப்பட்டவராகவுமுள்ள தனி ஆள் ஒருவராக இருந்தால், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIIஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில், அல்லது

(இ) அத்தகைய ஆள், கம்பனி ஒன்றல்லாத ஆளாக இருந்தால் அல்லது (அ) என்னும் பந்தி அவருக்கு ஏற்புடையவரான தனி ஆள் ஒருவர் அல்லாத வேறு ஆள் ஒருவராக இருந்தால், 1979 ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, இச்சட்டத்திற்கான மூன்ரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்,

அந்த ஆளின் அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கான வரிவிதித்தற்பாலதான வருமானத்தின்மீது, வருமானவரி விதிக்கப்படுதல் வேண்டும்.'':

(ஆ) அந்தப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''அவ்வரிமதிப்பீட்டு ஆண்டை உடன் முந்தியதான'' என்பதிலிருந்து அந்த உட்பிரிவின் முடிவுவரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும்:—

''அத்தகைய, முன்னர் சொல்லப்பட்டவாருன பணத்தொகையானது அத்தகைய தனியாளின் தொழில்தருநரால், ஆணையாளர் தலைமையதிபதியின் கருத்துப்படி அத்தகைய தொழில் தருநரால்

வேலைக்கமர்த்தப்பட்ட எல்லாத் தனி ஆட்களுக்கும் ஒரு சீராக ஏற்புடைத்தாகும் என்ற ஒரு திட்டத்திற்கு இணங்கச்செலுத்தப்பட்டதாக இருந்தால், இச்சட்டத்திற்கான முதலாம்அட்டவணையின் IV ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் வரிவிதிக்கற்பாலதாக இருத்தல் வேண்டும். அத்தகைய, முன்னர் சொல்லப்பட்டவாறான ஏதேனும் பணத்தொகையானது அத்தகைய தனியாளின் தொழில் தருநரால் ஆணையாளர் தலைமையதிபதியின் கருத்துப்படி அத்தகைய தொழில் தருநரால் வேலைக்கமர்த்தப்பட்ட எல்லாத் தனி ஆட்களுக்கும் ஒருசீராக ஏற்புடைத்தாகாத ஒரு திட்டத்திற்கு இணங்கச் செலுத்தப்பட்டதாக இருந்தால், (அத்தகைய விஞ்சிய தொகைகள் உட்பட) அவரின் வரிவிதிக்கற்பாலதான வருமானம்,

(i) *1979* ஏப்பிறில் *1* ஆந் தேதியன்று தொடங்கும் வரிவிதிப்பீட்டாண்டு தொடர்பாக, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் I ஆம் பாகத்தில்; அல்லது

(ii) *1980* ஏப்பிறில் *1* ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில்,

குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் வரிவிதிக்கற்பாலதாக இருத்தல் வேண்டும்''; அத்துடன்

(இ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் *33* ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''இலங்கையில் வதிவுள்ள கம்பனி எதுவும், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இலங்கையில் வதிவுள்ள கம்பனி எதுவும், *1979*, ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டில்'' என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(1அ) இலங்கையில் வதிவுள்ள கம்பனி எதுவும், *1980*, ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், அவ்வரிமதிப்பீட்டாண்டுக்குச் செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும் வருமான வரியானது—

(அ) (i) விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி ஒன்றாகவும் சிறிய கம்பனி ஒன்றாகவும் இருக்கும் கம்பனி ஒன்றன் விடயத்தில், ஒன்றில் அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதிலும் அல்லது கம்பனியானது அந்த வரிமதிப்பீட்டாண்டில் கூட்டிணைக்கப்பட்டவிடத்து, அது கூட்டிணைக்கப்பட்ட தேதி முதல் அந்த ஆண்டு முடிவடையும் வரையில் மேற்கூறியவாறு அக்கம்பனி இருந்திருக்குமெனில், அத்தகைய கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IV ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் கணிக்கப்பட்ட தொகை ஒன்றினை; அல்லது

(ii) விலேகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி ஒன்ருக இருந்த கம்பனி ஒன்றன் விடயத்தில், ஒன்றில் அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதிலும் அல்லது கம்பனியானது அந்த வரிமதிப்பீட்டாண்டில் கூட்டிணைக்கப்பட்டவிடத்து, அது கூட்டிணைக்கப்பட்ட தேதி முதல் அந்த ஆண்டு முடிவடையும் வரையில், மேற்கூறியவாறு அக்கம்பனி இருந்திருக்குமெனில், அத்தகைய கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IV ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் கணிக்கப்பட்ட தொகை ஒன்றினை; அல்லது

(iii) விலேகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி ஒன்ருகவும் மக்கள் கம்பனி ஒன்ருகவும் இருக்கும் கம்பனி ஒன்றன் விடயத்தில், ஒன்றில் அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதிலும் அல்லது கம்பனியானது அந்த வரிமதிப்பீட்டாண்டில் கூட்டிணைக்கப்பட்டவிடத்து, அது கூட்டிணைக்கப்பட்ட தேதிமுதல் அந்த ஆண்டு முடிவடையும் வரையில் மேற்கூறியவாறு அக்கம்பனி இருந்திருக்குமெனில், அத்தகைய கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IV ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் கணிக்கப்பட்டதொகை ஒன்றினை; அல்லது

(ஆ) (i) அத்தகைய கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு —

(அ) உட்பந்தி (ஆ) அல்லது உட்பந்தி (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டதான கம்பனி ஒன்றல்லாததான கம்பனி ஒன்றன் விடயத்தில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் பாகத்தில், அல்லது

(ஆ) ஒன்றில் அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதிலும் அல்லது கம்பனியானது அந்த வரிமதிப்பீட்டாண்டில் கூட்டிணைக்கப்பட்டவிடத்து, அது கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து அந்த ஆண்டு முடிவடையும் வரையில், சிறிய கம்பனி ஒன்ருக இருந்த கம்பனி ஒன்றன் விடயத்தில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில்; அல்லது

(இ) ஒன்றில் அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதிலும் அல்லது கம்பனியானது அந்த வரிமதிப்பீட்டாண்டில் கூட்டிணைக்கப்பட்டவிடத்து, அது கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து அந்த ஆண்டு முடிவடையும் வரையில், மக்கள் கம்பனி ஒன்ருக இருந்த கம்பனி ஒன்றன் விடயத்தில், இச்சட்டத்திற்கான இரண்டாம்

அட்டவணையின் III ஆம் பாகத்தில் குறித்துரைக்கப் பட்டதான தோதான வீதத்தில் அல்லது வீதங்களில் கணிக்கப்பட்ட தொகை ஒன்றினை; அத்துடன்

(ii) எவ்விலாபங்கள்மீது அத்தகைய கம்பனியின் வரிவிதிக்கற் பாலதான வருமானம் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகக் கணிக்கப்படுகின்றதோ அவ்விலாபங்களிலி ருந்து அக்கம்பனியால் அவ்வரிமதிப்பீட்டாண்டில் பகிர்ந் தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டுமொத்தத் தொகையின் இருபது சத வீதத்திற்குச் சமமான தொகை ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.'' அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''(1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக் காக'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக ''ஓராம், (1அ) ஆம் உட் பிரிவுகளின் நோக்கங்களுக்காக'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

**19.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத் தப்படுகின்றது; —

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''இரண்டாம் அட்டவணையின் IV ஆம் பாகத்தில்'' என்னுஞ் சொற்களுக்கும் எண் களுக்கும் பதிலாக, இரண்டாம் அட்டவணையின் V ஆம் பாகத்தில்'' என் னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாக பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

''(அ) வதிவுள்ள கம்பனியொன்றினால் அத்தகைய வதிவற்ற கம்பனி க்குக் கொடுக்கப்படும் எவையேனும் பங்கிலாபங்களை உள்ளடக்காத அத் தகைய பணத்தொகைகளாக, அக்கம்பனியின் இலாபங்களிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட அல்லது வெளிநாட்டில் வைத்திருக்கப் பட்ட பணத்தொகைகள் எனவும்''.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''அப்பங்கிலாபம் கொண்டிருக் குமிடத்தும்,'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அப்பங்கிலாபம் கொண்டிருக்குமிடத்தும்: அல்லது'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஈ) முதலில் குறிப்பிடப்பட்ட வதிவுள்ள கம்பனி, விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியொன்றாக இருக்கின்ற விடத்தும்,''

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''ஐம்பது சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதுமான'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''பங்கிலாபமானது 1980, மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன்முன் செலுத்தப் படற்பாலதாகவுள்ளவிடத்து ஐம்பது சத வீதத்தாலும், பங்கிலாப மானது 1980, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற்பாலதாகவுள்ளவிடத்து இருபத்தைந்து சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டதுமான'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் உள்ள ''வருமான வரியையும்; அத்துடன்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக ''வருமான வரியையும்,'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் :

(இ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:—

(ஈ) இயைபான பங்கிலாபமானது விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியிடமிருந்து அத்தகைய வதிவுள்ள கம்பனியால் பெறப்பட்ட ஒரு பங்கிலாபத் தொகையிலிருந்து செலுத்தப் பட்டால், அத்தகைய இயைபான பங்கிலாபத் தொகையின் ஐந்து சத வீதத்துக்குச் சமமான வருமான வரியையும்.''

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) ''வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி ஒன்றல்லாததான வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) ''பங்கிலாபங்களின் தொகையிலிருந்து, அத்தகைய தொகையின் முப்பத்துமூன்றேடு மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான வருமான வரியை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பங்கிலாபங்களின் தொகையிலிருந்து பங்கிலாபமானது 1980 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து முப்பத்துமூன்றெடு மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும், பங்கிலாபமானது 1980, ஏப்பிறில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கொடுபடற்பாலதாகவுள்ளவிடத்து, இருபது சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் ''இச்சட்டத்தின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதா'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''இச்சட்டத்தின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதா அல்லது விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி ஒன்றிலிருந்து பெறப்பட்டதா'' என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(அ) ''நியதிச்சட்ட முறையான வருமானத்தைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக'' என்பது தொடங்கி ''உரித்துடையவராதலும் வேண்டும்'' என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

''நியதிச்சட்டமுறையான வருமானத்தைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக —

(அ) 1979, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுக்கு ஐம்பது சதவீதத்தால் அதிகரிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் அவரால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து சொல்லப்பட்ட ஐம்பது சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) 1980, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு இருபத்தைந்து சதவீதத்தால் அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து சொல்லப்பட்ட இருபத்தைந்து சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றினைக் கழித்தற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்:'';

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் ''அதன் தொடர்பில்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அதன் தொடர்பில் அல்லது'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:— ''(இ) விலகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபத் தொகைக்கு அல்லது அதன் தொடர்பில்,''; அத்துடன்

(4) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், ''33 1/3 சதவீத'' என்னுஞ் சொற்களையும் எண்களையும் விட்டுவிடுவதன்மூலமும்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் இத்தாற் திருத்தப்படுகின்றது :—

''(1) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் பெறுமதி அவ்வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்று அதற்கிருந்த சந்தைப் பெறுமதியாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய ஆதனமானது, 1977, ஏப்பிறில் 1ஆந் தேதியன்று, (''வரிமதிப்பிடப்பெறுபவர்'' என இவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும்) எவ்வாளின் செல்வம் வரிமதிப்பிடப்பெறுகின்றதோ அவ்வாளினது செல்வத்தின் பாகமாக அது அமையுமாயின் அல்லது 1977, ஏப்பிறில்

1ஆந் தேதியன்று அவ்வாதனத்தைச் சொந்தமாக வைத்திருந்த அல்லது அதில் அக்கறை கொண்டிருந்த வேறு ஆளிடமிருந்து வரிமதிப்பிடப்பெறுபவரினுல் கொடை வகையாகவாகவாயினுஞ்சரி அல்லது மரபுரிமை வகையாகவாயினுஞ்சரி கொள்ளப்பட்டிருந்தால், 1979, ஏப்றில் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்று அவ்வாதனத்தின் சந்தைப்பெறுமதி 1977, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவ்வாதனத்துக்குச் செய்யப்பட்ட எவையேனும் சீர்திருத்தங்களின், சேர்ப்புக்களின் அல்லது மாற்றங்களின் செலவுக்குச் சமமான ஒரு தொகை அல்லது அந்த ஆண்டின் ஏப்பிறில் முதலாம் நாளன்று அதன் சந்தைப் பெறுமதி ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதனுல் அதிகரிக்கப்பட்ட, 1977, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அதற்கிருந்த சந்தைப் பெறுமதியாதல் வேண்டும் ''.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், ''தரும நிலையமொன்றுக்கு அளிக்கப்படும்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''தரும நிலையமொன்றுக்கு அல்லது 31ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்கு, நிதித் தாபனத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அளிக்கப்படும்'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்; ''அதன் பின்னர் செய்யப்பட்ட கொடைகள் தொடர்பில் அத்தகைய கொடை ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள்ளதாகவும், அத்தகைய தனியாளின் சீவிய காலத்துக்கு ஆகக்கூடியது மூன்று இலட்சம் ரூபாவுக்கு அமைவாகவும் இருக்க வேண்டும்;'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அதன்பின்னர் செய்யப்பட்ட கொடைகள் தொடர்பில், அத்தகைய தனியாளின் சீவிய காலத்துக்கு ஆகக் கூடியது ஐந்து இலட்சம் ரூபாவுக்கு அமைவாக இருக்கவேண்டும்:'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் இத்தாற் திருத்தப்படுகின்றது.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

''(1அ) கொடை ஒன்ருக அமையும் ஆதனமானது 1977, ஏப்பிறில் 1ஆந் தேதிக்கு முன்னர் கொடையளிப்பவரினுல் கொள்ளப்பட்ட அசைவற்ற ஆதனமாக இருக்கின்றவிடத்து, கொடைத் தேதியன்று அவ்வாதனத்துக்குள்ள சந்தைப் பெறுமதியானது, 1977, ஏப்பிறில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவ்வாதனத்துக்குச் செய்யப்பட்ட எவையேனும் திருத்தங்களின், சேர்ப்புக்களின் அல்லது மாற்றங்களின் செலவுக்குச் சமமான தொகை அல்லது அந்த ஆண்டின் ஏப்பிறில் முதலாம் தேதியன்று அதன் சந்தைப் பெறுமதி ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ, அதனுல் அதிகரிக்கப்பட்ட, 1977, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அவ்வாதனத்துக்கிருந்த சந்தைப் பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆம் பிரிவானது, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(7) இலங்கைப் பிரசை ஒருவராக இல்லாதவரும் இலங்கையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவருமான தனியாள் ஒருவர், முற்போந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இலங்கையில் அவர் தொழிலைத் தொடங்கு

கின்ற தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு வதிவற்ற வராகக் கருதப்படுதல் வேண்டும்.''.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அதற்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், ''அல்லது ஒரு வங்கித் தொழிலரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் கடன்மீதான அல்லது முற்பணம் மீதான வட்டிக்கு'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அல்லது ஒரு வங்கித் தொழிலரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் கடன் மீதான அல்லது முற்பணம் மீதான வட்டிக்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறில் வெளிநாட்டு நாணயத்தில் அவரின் வரவிலிருக்கும் பணங்கள்மீது எவரேனும் ஆளுக்குக் கொடுக்கப்பட்ட ஏதேனும் வட்டிக்கு'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது;—

''காப்புறுதியிலிருந்து கிடைக்கும் குறித்த சில வரவுகள் எவ்வாறு கருதப்படல் வேண்டும் என்பது.

89. காப்புறுதிக் கட்டுப்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை, ஏதேனும் வியாபாரத்திலிருந்து, தொழிலிலிருந்து, உயர் தொழிலிலிருந்து அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்து வரும் இலாபங்களை அல்லது வருமானத்தை உண்டாக்குவதில் உறப்பட்ட ஒரு செலவாக அனுமதிக்கப்படற்பாலதாக இருக்கின்றவிடத்து, அத்தகைய காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ்ப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை —

(அ) அவ்வாறு பெறப்பட்ட பணத்தொகை வியாபாரக் கையிருப்புத் தொடர்பானதாக அல்லது இலாபங்களின் இழப்புத் தொடர்பானதாக அல்லது இப்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படாததான வேறு பணத்தொகையாக இருந்தால், அத்தகைய வியாபாரத்திலிருந்து, தொழிலிலிருந்து, உயர்தொழிலிலிருந்து அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்து கிடைக்கப்பெற்ற வரவுகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அவ்வாறு பெறப்பட்ட பணத்தொகை எம் மூலதனச்சொத்தின்மீது 23 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கருத்துக்குட்பட மதிப்பிறக்கத்துக்கான விடுதொகையொன்று வழங்கப்பட்டுள்ளதோ அம்மூலதனச் சொத்துத் தொடர்பிலானதாயின், ஆதனத்தைக் கையுதிர்ப்பதிலிருந்து பெறப்படும் தொகை யொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன், அதற்கிணங்க அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தொகைக்கும் அத்தொகை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(இ) அவ்வாறு பெறப்பட்ட பணத்தொகை, எம் மூலதனச் சொத்தின்மீது 23 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கருத்துக்குட்பட மதிப்பிறக்கத்துக்கான விடுதொகையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லையோ அம் மூலதனச் சொத்துத் தொடர்பிலானதாயின், ஆதன மாற்றத்திலிருந்து பெறப்படும் தொகை யொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தொகைக்கும் அத் தொகை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்துக்குப் பதிலாக பின்வருவன வற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''ஆயின், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக எவரேனும் ஆளின் ஊழியத்திலிருந்து கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலான எவையேனும் நிலுவைகள் அவ்வாளினுல் பெறப்பட்டதன் விளைவாக அவ்வரிமதிப்பீட் டாண்டு தொடர்பில் அவ்வாளினுல் கொடுபடற்பாலதான வருமான வரியின் மதிப்பீட்டுக்கு இவ்வுட்பிரிவில் உள்ளதெதுவும் ஏற்புடையதாகாது:

ஆயின், மேலும் வரிமதிப்பீடு செய்யாமையானது அல்லது குறைத்து வரி மதிப்பீடு செய்யப்பட்டமையானது மோசடியினுலாயின் அல்லது வேண்டுமென்ற தவிர்வினுலாயின், அவ்வரிமதிப்பீட்டாண்டு முடிவடைந்த பின்னர் எந்நேரத்தி லேனும் அவ்வாள் தொடர்பில் வரிமதிப்பீடொன்று அல்லது மேலதிக வரிமதிப் பீடொன்று செய்யப்படலாம்.''.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (i) ஆம் பந்தியில், ''தவறுகை யிலுள்ள வரியின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது;'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''தவறுகையிலுள்ள வரியின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது;'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியில், ''அத்தகைய ஆள் ஏதேனும் தண்டம் செலுத்துவதற்கு ஆளாதலாகாது;'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய ஆள், வரியின் அத்தகைய காலாண்டுக் கட்டுப்பணம் எவ் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் போகுமதியாக வந்ததோ அவ் வரிமதிப்பீட்டாண்டின் முடிவை உடனடுத்துவரும் நவம்பர் முப்பதாம் நாள்வரை, ஏதேனும் தண்டம் செலுத்துவதற்கு ஆளாதலாகாது;'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

**31.** நூற்றுமுப்பத்தோராம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக் கத்தின் 131அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''வரியைக் காசாகக் கொடுப்பதற்குப் பதிலாக அசைவற்ற ஆதனத்தை அரசாங்கத்துக்கு மாற்றுதல்

131அ. (1) இச்சட்டத்தின் அல்லது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் வரியைச் செலுத்த வேண்டியவரான எவரேனும் ஆள், அத்தகைய வரியைக் காசாகக் கொடுப்பதற்குப் பதிலாக, அவ்வாளுக்கும் ஆணையாளர் தலைமை அதிபதிக்கும் இடையேயான உடன்படிக்கை மூலம் அவ்வாதனத்தின்மீது வைக்கப்பட்டுள்ள அத்தகைய பெறுமதியின்படி, அவ்வாளினுல் சொந்தமாக வைத் திருக்கப்படும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை அரசாங்கத்துக்கு மாற்றுதற்காக ஆணையாளர் தலைமை அதிபதிக்கு விண்ணப்பிக்க லாம்; அத்துடன், அரசாங்கத்துக்கு அவ்வாதனம் மாற்றப்பட்ட தன்பின்னர் அதன் முகாமை செய்வதற்குள்ள வசதி வாய்ப்பினைக் கருத்துட்கொண்டு ஆணையாளர் தலைமை அதிபதி அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிக்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விண்ணப்பத்தை ஆணையாளர் தலை ம அதிபதி அனுமதித்துள்ள விடத்தும், எவ்வாதனம் தொடர்பாக விண்ணப்பஞ் செய்யப்பட்டதோ அவ்வாதனத்தின் பெறுமதி என அவ்வுட்பிரிவினது ஏற்பாடு களுக்கிணங்க உடன்பட்டுக் கொள்ளப்பட்ட தொகையானது விண்ணப்பகாரரினல் கொடுபடற்பாலதான வரித்தொகையை விஞ்சுகின்ற விடத்தும், மேன்மிகைத் தொகையானது, விண்ணப்பகாரரினல் இலங்கை அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கருத்துக்குட் பட்ட நன்கொடை ஒன்றெனக் கருதப்படல் வேண்டும்.''.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (i) ஆம் பந்தியில், ''இருபத்தைந்து சத வீதத்தை'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக ''ஐம்பது சதவீதத்தை'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) ''இலங்கை உல்லாசப் பிரயாணச்சபை'' என்பதன் வரைவிலக் கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட் புகுத்துவதன் மூலமும் :—

''இலங்கை வர்த்தக மன்றம்'' என்பது வர்த்தக மன்றக் கட்டளைச் சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வர்த்தக மன்றம் எனப் பொருளாகும்;';

(ஆ) ''பிள்ளை'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

' ''வர்த்தக வங்கி'' என்பது நாணயச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;';

(இ) ''நிறைவேற்று அலுவலர்'' என்பதன் வரைவிலக்கணத்தில், ''ஆயிரம் ரூபாவுக்கு'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) ''வெளிநாட்டு நாணயம்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும்:—

' ''வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறு'' என்பது வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறென்றாகத் தொழிற்படவென இலங்கை மத்திய வங்கியினல் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தக் வங்கியொன்றன் கூறு அல்லது பகுதி என்று பொருளாகும்;'; அத்துடன்

(உ) ''ஆதனம்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும்:—

' ''விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி'' என்பது இலங்கையில் வதிவுள்ளதும்—

(i) கொழும்புத் தரகர் கழகத்தின் விதிகளுக்கிணங்க அக்கழகத் தினல்; அல்லது

(ii) கொழும்புத் தரகர் கழகத்திஞல் புரியப்படும் பணிகளே ஒத்த பணிகளே ஏதேனும் குழு புரிகின்றது என்ற் நிகழ்வைக் கருத்திற்கொண்டு, அமைச்சரிஞல் அங்கீகரிக்கப்படக்கூடிய வாறுன அத்தகைய வேறு குழுவிஞல்,

வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக நிரலில் அதன் பங்குகள் விலேகோரிப் பெறப்பட்டனவாகவிருக்கும் ஒரு கம்பனியென வரி மதிப்பீட்டாளர் அது தொடர்பில் திருப்தியுறுவதுமான ஒரு கம்பனி என்று பொருளாகும்;'

**34.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணே இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் புதிய அட்டவணே அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :-

### முதலாம் அட்டவணே

(பிரிவு 32)

வருமானவரி வீதங்கள் — எவரேனும் பெறுநர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், நிறைவேற்றுநர் அல்லது ஒழிப்போர் தவிர்ந்த தனியாட்கள்

#### பாகம் I

1979, ஏப்பிறில் 1ஆந் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுக்கான வருமான வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | | வரி வீதங்கள் |
|---|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 4,800 ரூபாவுக்கு | ... | 7½ சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 10 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 15 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 20 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 25 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானித்தின் அடுத்த 4.800 ரூபாவுக்கு | ... | 30 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 35 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான் வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 40 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 45 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 50 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 55 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 60 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 65 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு | | 70 சதவீதம் |

DISCARDED

#### பாகம் II

1980 எப்பிறில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக் கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

| | | வரி வீதங்கள் |
|---|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 4,800 ரூபாவுக்கு | ... | 7½ சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 10 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 15 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 20 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத் 4,800 ரூபாவுக்கு | ... | 25 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 30 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 35 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 4,800 ரூபாவுக்கு | ... | 40 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 45 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 7,200 ரூபாவுக்கு | ... | 50 சதவீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு | ... | 55 சதவீதம் |

#### பாகம் III

இலங்கைப் பிரசையல்லாதவரும், 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கீழ் வதிவற்றவராகக் கருதப்படுபவருமான தனியாள ஒருவருக்கு, 1970 எப்பிறில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு ஏற்புடைத்தான வருமானவரி வீதம், .................................. 25 சதவீதம்.

பாகம் IV

32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட, தொழிலிலிருந்து கிடைக்கும் குறித்த சில இலாபங்களுக்கு ஏற்புடையனவான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் | 50,000 | ரூபாவுக்கு | ... | இல்லை |
| அடுத்த | 25,000 | ரூபாவுக்கு | ... | 5 சதவீதம் |
| அடுத்த | 25,000 | ரூபாவுக்கு | ... | 10 சதவீதம் |
| மீதிக்கு | | ... | ... | 15 சதவீதம் |

35. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அவ்வட்டவணையின் IV ஆம் பாகத்தை அவ்வட்டவணையின்; V ஆம் பாகமென மீள இலக்கமிடுவதன் மூலமும்: அத்துடன்

(ஆ) அவ்வட்டவணையின் III ஆம் பாகத்தை உடனடுத்து பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"பாகம் IV

விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனி

விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது ... ... 40 சதவீதம்"

36. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றும் அட்டவணை, அவ்வட்டவணையின், 4ம் ஆம் விடயத்தின் (ஆ) என்னும் பந்தியில், "70 சதவீதம்" என்னுஞ் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "55 சதவீதம்" என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

## 1980ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, நிதி (திருத்த)ச் சட்டம்

*[1980, ஓகத்து மாதம் 7 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

### 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் *1980* ஆம் ஆண்டின் *29* ஆம் இலக்க, நிதி (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தினல் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான *1963*ஆம் ஆண்டின் *11* ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் *120* ஆம் பிரிவு, அப்பிரிவின் *(3)*ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

" (iv) *1971*ஆம் ஆண்டின் *13* ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணங்கள் தவிர, உற்பத்தி செய்யப்பட்ட அல்லது பதப்படுத்தப்பட்ட ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்வதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சி;".

# 1980 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[1980 ஒத்தோபர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

**1.** இச்சட்டமானது, 1980 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

**2.** இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

''ஆணைக்குழுவின் நியாயாதிக்கம்.

5. ஆணைக்குழுவானது—

(1) அதிகார இடப்பரப்பிலும் அதன்மீதும்:

(2) ஏதேனும் உரிமம்பெற்ற வலயத்திலும் அதன் மீதும்; அத்துடன்

(3) ஏதேனும் உரிமம்பெற்ற தொழில்முயற்சியிலும் அதன் மீதும்,

நியாயாதிக்கம் உடையதாதல் வேண்டும்.''.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

''அதிகார இடப்பரப்பிலும் உரிமம்பெற்ற வலயங்களிலும் உள்ள சிறப்புத் தத்துவங்கள்.

20. (1) இதற்கான 'இ' என்னும் அட்டவணையில் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள எழுத்திலான சட்டங்களானவை, கீழே கூறப்படும் துணைவிதிகளை, ஒழுங்குவிதிகளை, கட்டளைகளை அல்லது அறிவிப்புகளை ஆக்குவதற்கு அல்லது விடுப்பதற்கு அல்லது கீழேகூறப்படும் தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரி பற்றி, அலுவலர் பற்றி அல்லது ஆள் பற்றி அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள குறிப்பீடுகள், ஆணைக்குழு பற்றிய குறிப்பீடுகளென்றாற்போன்ற அதே விதத்தில், ஆணைக்குழு—

(அ) அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் துணைவிதியை, ஒழுங்கு விதியை, கட்டளையை அல்லது அறிவிப்பை அதிகார இடப்பரப்பின் அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வலயத்தின் முழுமைக்குமாக அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்துக்காக ஆக்குதலும் அல்லது விடுத்தலும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஆளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள எல்லாத் தத்துவங்களையும் அல்லது பணிகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அதிகார இடப்பரப்பில் அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வலயத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும்,

சட்டமுறையானதாயிருத்தல் வேண்டுமென்ற திரிபுக்கமைய, அதிகார இடப்பரப்பிலும் உரிமம்பெற்ற வலயமொவ்வொன்றிலும் பயனுறுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை ஆணைக்குழுவின் சார்பில் பிரயோகிப்பதற்கென அல்லது நிறைவேற்றுவதற்கென எவரேனும் அலுவலரை அல்லது ஆளை விதி மூலம் பதவிகுறித்து நியமிக்கலாம்.''.

4. இருபத்திரண்டாம் பிரிவை உடனடுத்துப் பின்னராகப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''உரிமம்பெற்ற வலயங்களைத் தாபித்தல்.

22அ. (1) அதிகார இடப்பரப்பிலடங்காத ஏதேனும் இடப்பரப்பில், உரிமம்பெற்ற தொழில் முயற்சிகளால் பொறுப்பு முயற்சிகள் தாபிக்கப்படுவதற்கு வசதிகளை அல்லது சீராக்கல்களை ஏற்பாடுசெய்வதும், அத்தகைய நோக்கத்துக்காக, இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு சில தத்துவங்களைப் பிரயோகிப்பதனை இயலச்செய்வதும், அவசியமானதெனச் சனாதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய இடப்பரப்பினை உரிமம்பெற்ற வலயமொன்றாக அவர் வெளிப்படுத்தலாமென்பதுடன் அத்தகைய வலயத்தின் எல்லைகளையும் குறித்துரைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமம்பெற்ற வலயமொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வலயத்துக்குள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கட்டிட வரைபடங்களை அல்லது திட்டமிடுதலை, அபிவிருத்தியை அல்லது சீராக்கலை அங்கீகரித்தல் தொடர்பான ஏதேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை, ஆணைக்குழு தவிர்ந்த ஆளெவரும், குழுவெதுவும் அல்லது அதிகாரசபையெதுவும் பிரயோகித்தலோ, புரிதலோ அல்லது நிறைவேற்றுதலோ வாகாது.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) ''உரிமம்பெற்ற தொழில்முயற்சி'' என்பதன் வரைவிலக்கணத்தில், ''தொழில்முயற்சி அதிகார இடப்பரப்புக்கு வெளியே ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துகிறதோ அல்லது கொண்டு நடாத்த உத்தேசித்துள்ளதோ அந்தத் தொழில்முயற்சியொன்று எனப் பொருளாகும்; அத்துடன்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''தொழில்முயற்சி அதிகார இடப்பரப்புக்கு வெளியே ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதோ அல்லது கொண்டுநடாத்த உத்தேசித்துள்ளதோ அந்தத் தொழில்முயற்சியொன்று எனப் பொருளாகும்'' என்ற சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(ஆ) ''உரிமம்பெற்ற தொழில்முயற்சி'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னராகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம்:—

''உரிமம்பெற்ற வலயம்'' என்பது 22அ என்னும் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட வலயமொன்று எனப் பொருளாகும்; அத்துடன்'

6. (1) முதன்மைச் சட்டவாக்கத்தில் 'ஆ' என்னும் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) ''1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டு அரசிறைச் சட்டம்'' என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னராகப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

''1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டு அரசிறைச் சட்டம்''; அத்துடன்

(ஆ) ''1961 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க நிதிச் சட்டம்'' என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னராகப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்

''1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் XII ஆம் பாகம்''.

(2) (அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினுல் முதன்மைச் சட்டவாக்கத்தில் 'ஆ' என்னும் அட்டவணையில் செய்யப்பட்ட திருத்தமானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டு அரசிறைச் சட்டம் தொடங்கும் தேதியில் வலுவுக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினுல் முதன்மைச் சட்டவாக்கத்தில் 'ஆ' என்னும் அட்டவணையில் செய்யப்பட்ட திருத்தமானது, முதன்மைச் சட்டவாக்கம் செயற்பாட்டுக்கு வந்த தேதியில் வலுவுக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

## 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்

*[1980, ஒத்தோபர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

மத்திய சூழல் அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும்; அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் தொடர்பில் ஏற்பாடு செய்வதற்கும்; சூழலைப் பாதுகாப்பதற்கும் முகாமை செய்வதற்குமான ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.

1. இச்சட்டம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினுல் நியமிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### மத்திய சூழல் அதிகாரசபையையும், சூழல் பேரவை ஒன்றினையும் தாபித்தல்

2. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மத்திய சூழல் அதிகார சபை என அழைக்கப்படும் அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் ''அதிகார சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்திய சூழல் அதிகாரசபை, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் அப்போதைய உறுப்பினர்களாக இருக்கின்ற ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினுல் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருதல் வேண்டுமென்பதுடன், அது இடையருவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாயிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் அல்லது அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

**3.** (1) அதிகாரசபை அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனுதிபதியினுல் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்—

(அ) அவர்களுள் இருவர், சூழல் என்னும் விடயத்தில் போதிய நிபுணத்துவம் உடையவர்களாகவும் தகுந்த தகைமைகள் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவர்களுள் ஒருவர், சூழல் முகாமையில் பொருத்தமான நிருவாகத் திறனும் அனுபவமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(2) சனுதிபதி அத்தகைய உறுப்பினர்களுள் ஒருவரை அதிகாரசபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

**4.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபையின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது அதிகாரசபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபையின் இரு உறுப்பினரின் சமுகத்திலன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் இருவரும் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

**5.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தை உடையதாதல் வேண்டும். பின்வருவன அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்:—

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினுல் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) அதிகாரசபை அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிக்கும்போதும், புரியும்போதும், நிறைவேற்றும்போதும் அதனுல் பெறக்கூடியவாறுன அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இலங்கையிலாயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, எத்தகையனவுமான எம்மூலங்களிலிருந்தும் அதிகாரசபையினுல் பெறக்கூடியவாறுன அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(2) அதிகாரசபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கும்போதும், புரியும்போதும், நிறைவேற்றும்போதும் அதனுல் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் தொடக்க மூலதனம் இரண்டு கோடி ரூபாவாக விருத்தல் வேண்டும். தொடக்க மூலதனத் தொகையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அமைச்சரின் கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய தவணைப் பணங்களில் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பணத்தொகைகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

6. (1) அதிகார சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) அதிகார சபையின் வருமானமும் செலவினங்களும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் அதன் மற்ற எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி, அதிகார சபையானது முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க ஒவ்வோர் ஆண்டும் அதிகார சபையின் கணக்குகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(4) அதிகார சபையின் வேலை பற்றிய அறிக்கையொன்றை ஆண்டுதோறும் அதிகார சபையானது தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும்; கணக்காய்வாளர் தலைமையதிபதி அவரது அறிக்கையுடன் சேர்த்து அத்தகைய அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டுமென்பதுடன், எந்த ஆண்டுக்கான நிதிகள் பற்றியதாக அத்தகைய அறிக்கை உள்ளதோ, அந்த ஆண்டை அடுத்து வரும் ஆண்டு முடிவடைவதன் முன்னர் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக அத்தகைய அறிக்கைகள் கசற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

7. (1) இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும், சூழல் பேரவை தாபிக்கப்படுதல் வேண்டும். இப்பேரவை அமைச்சரினுல் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) உள்ளூராட்சியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஆ) நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(இ) திட்டம் செயற்படுத்தல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர்;

(ஈ) காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(உ) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஊ) கைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(எ) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஏ) மின்சக்தி, வலு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஐ) பெருவழிகள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஒ) கமத்தொழில் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஓ) கடற்றொழில் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஔ) உல்லாசப் பிரயாணம் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(க) தொழில் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ங) புடவைக்கைத்தொழில் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர்;

(ச) பெருந்தோட்டத் தொழில் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர்;

(ஞ) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர்;

(ட) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர்;

(ண) 1978 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க, பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ்தாபிக்கப்பட்ட மா கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சிரேட்ட அலுவலர் ஒருவர்:

(த) அதிகாரசபையின் பொதுமுகாமையாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கின்ற ஆள்; அத்துடன்

(ந) சூழல் சம்பந்தப்பட்ட துறையில் உள்ள வலிந்துதவு முகவர் நிலையங்களின் நலன்களை எடுத்தியம்புவதற்கென அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்.

(2) பேரவையின் தவிசாளராகவிருப்பதற்கென, (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(3) பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) அதிகாரசபையின் பொறுப்புடைமைகள், தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட கருமங்கள் பற்றி அதிகார சபைக்குப் பொதுவாக ஆலோசனை கூறுதல்: அத்துடன்

(ஆ) அதிகாரசபையினால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எவையேனும் கருமங்கள் பற்றி அதிகாரசபைக்குப் பொதுவாக ஆலோசனை கூறுதல்.

8. (1) ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவாராக இருப்பின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகவரின் ; அல்லது

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழியின்,

அவர், அதிகாரசபையின் அல்லது பேரவையின் உறிப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து உறுப்பினராக இருப்பதற்குத்தகைமையற்றவராதல் வேண்டும்.

(2) பிரிவு 3 (1) பிரிவு 7 (1) ஆகியவற்றின் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்கள் விடயத்திற்கேற்ப, இப்பிரிவின் (4) ஆம் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, மூன்று ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்குப்பதவிவகித்தல் வேண்டும் என்பதோடு, மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவர்களாதல் வேண்டும்.

(3) (அ) அதிகாரசபையின் உறுப்பினர் எவரும், பேரவையின் உறுப்பினரொருவராயிருத்தலாகாது. அத்துடன்

(ஆ) பேரவையின் உறுப்பினர் எவரும், அதிகாரசபையின் உறுப்பினரொருவராயிருத்தலாகாது.

(4) அதிகாரசபையின் உறுப்பினர் எவரும் —

(அ) (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தகைமையீனங்களுள் எவற்றுக்கும் ஆட்பட்டவராக வருவாரெனில்; அல்லது

(ஆ) ஏதேனும் உடற்சுகவீனம் அல்லது சித்தசுவாதீனம் காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வருவாரெனில்; அல்லது

(இ) அதிகாரசபைக்கு மதிப்புக்கேடு உண்டாக்கும் சாத்தியமுடையதெனச் சனாதிபதி அபிப்பிராயப்படக்கூடியதான ஏதேனும் செயலைச் செய்வாரெனின்,

அத்தகைய உறுப்பினரை, சனாதிபதி அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

(5) பேரவையின் உறுப்பினர் எவரும்—

(அ) (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தகைமையீனங்களுள் எவற்றுக்கும் ஆட்பட்டவராக வருவாரெனில்; அல்லது

(ஆ) ஏதேனும் உடற்சுகயீனம் அல்லது சித்தசுவாதீனம் காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வருவாரெனின்; அல்லது

(இ) பேரவைக்கு மதிப்புக்கேடு உண்டாக்கும் சாத்தியமுடையதென அமைச்சர் அபிப்பிராயப்படக்கூடியதான ஏதேனும் செயலைச்செய்வாரெனின்,

அத்தகைய உறுப்பினரை, அமைச்சர் பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பேரவையின் உறுப்பினர் எவரும், அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், அதிகாரசபையின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் பதவிவை வறிதாக்கும் சந்தருப்பத்தில் சனாதிபதி, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் வேறெவரேனுமானை, அவர் எவ்வுறுப்பினரைத் தொடர்ந்து பதவிக்கு வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கென நியமிக்கலாம்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பேரவையின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் சந்தருப்பத்தில், அமைச்சரானவர் வேறெவரேனுமானை, அவர் எவ்வுறுப்பினரைத் தொடர்ந்து பதவிக்கு வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கென நியமிக்கலாம்.

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் எந்த நியமனமும், அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி செய்யப்படுதல் ஆகாது.

(8) அதிகாரசபையின், தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வருமிடத்து, அவரது இடத்தில் தவிசாளராக அல்லது உறுப்பின ராகச் செயலாற்றுவதற்கென வேறெவரேனும் ஆளை, சனாதிபதி, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நியமிக்கலாம்.

(9) பேரவையின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிக மாக இயலாதவராக வருமிடத்து, அவரது இடத்தில் தவிசாளராக அல்லது உறுப் பினராகச் செயலாற்றுவதற்கென வேறெவரேனும் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, அத்தகைய நியமனமெதுவும் செய்யப் படுதலாகாது.

(10) அதிகாரசபையின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அதற் கென சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம் எந்த நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(11) பேரவையின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அதற்கென அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம் எந்த நேரத்திலும் தமது பதவியி லிருந்து விலகலாம்.

(12) அதிகாரசபையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் உறுப்பினருக்கு அல்லது பேரவையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் உறுப்பினருக்கு, அமைச் சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(13) அதிகாரசபையின் அல்லது பேரவையின் தவிசாளர் சமுகமாயிருப்பின், விடயத்திற்கேற்ப, அதிகாரசபையின் அல்லது பேரவையின் எல்லாக் கூட்டங் களுக்கும் அவரே தலைமைதாங்குதல் வேண்டும். அதிகாரசபையின் அல்லது பேரவையின் தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்தின்போது இல்லாதிருந்தால், சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(14) (அ) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப் பெண் இரண்டு உறுப்பினராதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினராதல் வேண்டும்.

(15) (அ) விடயத்திற்கேற்ப அதிகாரசபை அல்லது பேரவை அத்தகைய அதிகாரசபையின் அல்லது பேரவையின் கூட்டங்கள் சம்பந்த மாகவும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப் படுதல் சம்பந்தமாகவும் அவற்றின் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்;

(ஆ) அதிகாரசபையின் கூட்டங்கள், அதிகாரசபை தீர்மானிக்கின்ற வாறுன அத்தகைய காலங்களிலும் அத்தகைய இடங்களிலும் நடைபெறுதல் வேண்டும்;

(இ) அதிகாரசபையினுல் நிர்ணயிக்கப்படுகின்ற அத்தகைய காலங் களிலும் இடங்களிலும் ஒவ்வோராண்டும், ஆகக் குறைந்தது நான்கு தடவையேனும் பேரவையானது கூடுதல் வேண்டும்.

(16) அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களை, பணிகளை, கடமைகளைப் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் அமைச்சரினுல் காலத்துக்குக்காலம் விடுக்கப்படக்கூடியவாறுன அத்தகைய பொது வான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(17) அதிகாரசபையின் உறுப்பினரொருவர் சிறப்புச் சூழ்நிலைகளில் அன்றியும், அமைச்சரின் கலந்தாலோசனையுடனுன சனுதிபதியின் எழுத்திலான சம்மதத்துடன் அன்றியும், தாம் பதவியில் தொடர்ந்திருக்கும் காலத்தின்போது, தமது பதவிக் குரிய கடமைகளுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் ஊதியம் ஈட்டும் ஊழியத்தில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுதலாகாது.

(18) அதிகாரசபையின் அல்லது பேரவையின் உறுப்பினர்களிடையே வெற் றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரினது நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், அதிகாரசபையின் அல்லது பேரவையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

**9.** (1) அதிகாரசபையானது, அது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய எண்ணிக் கையினரான உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டச் சூழல் முகவராண்மை யொன்றை ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் நியமித்தல் வேண்டும்.

(2) அத்தகைய மாவட்டத்தின் அரசாங்க அதிபர், ஒவ்வொரு மாவட்டச் சூழல் முகவராண்மையினதும் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(3) மாவட்டச் சூழல் முகவராண்மையொன்று, அதிகார சபையினுல் அத்த கைய முகவராண்மைக்குக் கையளிக்கப்படக்கூடியவாறுன அதிகாரசபையின் எவை யேனும் தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) மாவட்டச் சூழல் முகவராண்மையின் உறுப்பினர்களுக்கு, நிதி அமைச் சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கின்ற அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## பாகம் II

## அதிகார சபையின் தத்துவங்களும், பணிகளும் கடமைகளும்

**10.** (1) அதிகாரசபையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் பின் வருவனவாதல் வேண்டும்:—

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி களையும் நிருவகித்தல்;

(ஆ) தூலமானவை ஆயினும்சரி அல்லது சூட்சுமமானவை ஆயினும்சரி பாதுகாக்கப்படவேண்டியனவான பயன்பாடுகளும் பெறுமதிகளும் சம்பந்தமாகவும், அத்துடன் பேணப்படவேண்டியதரம், சூழலின் தரத் திற்குத் தீங்கின்றிக் கழிவுகள் வெளிவிடுதலை அனுமதிக்கக்கூடிய அளவு, நீண்டகால அபிவிருத்திப் பயன்பாடுகளும் திட்டமிடுதலும் என்பன சம்பந்தமாகவும், அத்துடன் சூழலைப் பாதுகாத்து முகாமைப்படுத்துதல் தொடர்பிலான வேறெவையேனும் விடயங்கள் சம்பந்தமாகவும் சூழலின் ஏதேனும் பாகத்தின் தேசிய சூழல் கொள்கையையும், கட்டளைக்கல்லையும் அமைச்சருக்கு விதந்துரைத்தல்;

(இ) தீழ்ப்புக் காரணிகள், தீழ்ப்பின் தன்மை, தீழ்ப்பின் அளவு, அதைத் தடுத்தல் என்பன பற்றிக் கணித்து நோக்கலும் அவற்றின்மீது புலனாய்வுகளை மேற்கொள்ளுதலும், அத்துடன் அதையொத்த கணித்து நோக்குதலைச் செய்கின்ற அல்லது புலனாய்வுகளை நிறைவேற்றுகின்ற வேறு ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கு உதவியளித்தலும், அத்துடன் அவ் ஆட்களுடன் அல்லது குழுக்களுடன் ஒத்துழைத்தலும்;

(ஈ) சூழல் தாழ்வடைதல் பற்றிய ஏதேனும் அமிசம் தொடர்பில் அல்லது சூழல் தாழ்வடைதலைத் தடுத்தல் தொடர்பில் ஆராய்ச்சி நடாத்து தலும் ஆராய்ச்சியை மேம்படுத்துதலும், ஒருங்கிணைத்தலும், அத்துடன் சூழலைப் பாதுகாப்பதற்கும், சீராக்குவதற்குமான கட்டளைக்கல்லை உண்டாக்குதல்;

(உ) குழுவின் நலமார்ந்த பயன்களைப் பாதுகாப்பதற்கும் சூழற்றரத்தைப் பேணுவதற்கும் ஆன நியமங்களையும், முன்மாதிரியையும், கட்டளைக் கல்லையும் குறித்துரைத்தல்.

(ஊ) சூழல் பாதுகாப்பு பற்றியதும், முகாமை பற்றியதுமான எவையேனும் அமிசங்கள் தொடர்பில் அறிக்கைகளையும் தகவல்களையும் வெளியிடுதல்;

(எ) இச்சட்டம் இணங்கியொழுகப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்து வதற்கான புலனாய்வுகளையும் பரிசீலனைகளையும் மேற்கொள்ளுதலும், அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுடனும் இணங்கி யொழுகாமை தொடர்பிலான முறைப்பாடுகளைப் புலனாய்தலும்;

(ஏ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மாதிரிகளை எடுத்தலிலும் சோதனை களைச் செய்தலிலும் மேற்கொள்ளப்படவேண்டிய முறைகளைக் குறித் துரைத்தல்;

(ஐ) சூழற் பாதுகாப்பு, சூழலைச் சீராக்கல் என்பன பற்றிய தகவலையும் அறிவையும் பொதுமக்களுக்கு அளித்தல்;

(ஒ) சூழற் பாதுகாப்பு, சூழல் முகாமை என்பன தொடர்பில் வேறு நாடு களுடனும் சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் பிணைப்பினைத் தாபித் தலும் பேணுதலும்;

(ஓ) சூழற் பாதுகாப்புடனும் சூழல் முகாமையுடனும் சம்பந்தப்பட்ட கருமங்கள்மீதும், அத்துடன் சூழலின் ஏதேனும் பகுதி பற்றியவையான ஏலவேயுள்ள சட்டவாக்கங்களில் அதிகாரசபை செய்ய விரும்புகின்ற ஏதேனும் திருத்தங்கள்மீதும், அத்துடன் அமைச்சரினால் அதிகார

சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எவையேனும் கருமங்கள்மீதும் அமைச்சருக்கு அறிக்கை செய்தல்.

(ஔ) சூழற் பாதுகாப்பிலும் சூழல் முகாமையிலும் நீண்டகாலத் திட்டமிடுதலை மேம்படுத்தலும், ஊக்குவித்தலும், ஒருங்கிணைத்தலும், நிறைவேற்றுதலும்;

(க) எச்சங்களை மாற்றியமைப்பதற்கும், பயன்படுத்துவதற்குமான வழிவகைகளை ஊக்குவித்தலும், மேம்படுத்தலும், பயனுறுத்துதலும்.

(2) ஒவ்வோர் ஆண்டும் திசெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர், முந்திய நிதியாண்டின்போதான அதிகாரசபையினதும் பேரவையினதும் வேலைகள் பற்றிய அறிக்கையொன்றை அதிகாரசபையானது அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அமைச்சரானவர் அறிக்கையைப் பெற்ற பதினன்கு நாட்களுக்குள் அதனைப் பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கச் செய்வித்தல் வேண்டும்; அல்லது பதினன்கு நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் அமர்வுகள் இடம்பெறவில்லையெனில் அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தின் பின்னர் அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

**11.** அதிகார சபையானது, அமைச்சரின் சம்மதத்துடன், அல்லது அவரால் அளிக்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, இச் சட்டத்தின்கீழ் அதிகார சபையின் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்கும், அதன் கடமைகளைப் புரிவதற்கும் அதிகார சபைக்குத் தேவையான அத்தகைய பணத் தொகைகளை மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறு வகையாகத் தற்காலிகமாகக் கடன் எடுக்கலாம் ;

ஆயின், இந்த உட்பிரிவின்கீழ் அதிகார சபையினல் திரட்டப்பட்ட எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரினல் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலேனும் விஞ்சுதலாகாது.

**12.** (1) அதிகார சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உள்ளூர் இடப்பரப்புக்குள் சூழலின் காப்புக்கெனவும் பாதுகாப்புக்கெனவும் அவசியமென அதிகார சபை கருதுகின்ற ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்வதற்கு அல்லது செய்விப்பதற்கு, சிறப்பானதோ அல்லது பொதுவானதோ ஆன அத்தகைய பணிப்புரைகளை எழுத்தில் காலத்துக்குக் காலம் அத்தகைய உள்ளூர் அதிகார சபைக்கு வழங்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் பணிப்புரையொன்று, எந்த உள்ளூர் அதிகார சபைக்கு விடுக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த உள்ளூர் அதிகார சபை ஒவ்வொன்றும் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

## பாகம் III

### அதிகாரசபையின் பணியாட்டொகுதியினர்

**13.** (1) அதிகார சபையின் பொது முகாமையாளரொருவர் அமைச்சரினல் நியமிக்கப்படுதல் வேண்டும். அவரே அதிகார சபையின் பிரதான நிறைவேற்றுலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) பொது முகாமையாளரானவர், தவிசாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகார சபையின் அலுவல்களை நெறிப்படுத்துவதற்கும் அதிகார சபையின் தத்துவங்களை, பணிகளை, கடமைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும், அத்துடன் அதிகார சபை ஊழியர்களின் நிருவாகத்திற்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(3) பொது முகாமையாளர், அதிகார சபையின் செயலாளராகவும் பணியாற்றுதல் வேண்டும்.

(4) செயலாளர் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கவும் கூட்டங்களில் பேசுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார்.

**14.** (1) அதிகார சபையானது, அதன் தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமென அது கருதும் அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கு விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறைகளிலும் அத்தகைய வீதங்களிலும் அதிகார சபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த ஒழுங்கு விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தவர்களாயிருத்தலும் வேண்டும்.

(3) அதிகார சபையின் வேண்டுதலின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகார சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து 1978ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, போக்வரத்து சபைச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, போக்குவரத்து சபைச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்வதாக உடன்பட்டுக்கொள்ளும் ஓர் ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை, அதிகார சபை வேலைக்கமர்த்துமிடத்து, அத்தகைய

ஆளினுல் அதிகார சபைக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவ்வாளினுல் அர சாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகார சபையின் வேண்டுதலின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் வேறு எவ ரேனும் அலுவலர் அல்லது எவரேனும் சேவையாளர், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய உறுப்பினரதும் அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும், உள்ளூ ராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினதும் அல்லது அந்த உள்ளூரதிகார சபை யினதும் சம்மதத்துடன், அதிகார சபையினுல் அதையொத்த சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு அதிகார சபையின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதிகார சபையினு லும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினுலும் அல்லது அந்த உள்ளூ ரதிகார சபையினுலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறுன அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது (ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலான நியதி நிபந்தனைகள் உட்பட) அதிகார சபையின் அத்தகைய பணியாட்டொகு திக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) எவரேனும் ஆள், (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அதி காரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு 'எவரேனும் உறுப்பினர் அமைந்தொழுக வேண்டிய அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவரா தல் வேண்டும்.

## பாகம் IV

## சூழல் முகாமை

**15.** அதிகாரசபையானது, பின்வரும் குறிக்கோள்களுக்கு இசைவாக, பேரவையின் கலந்தாலோசனையுடனும், காணி என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் உதவியுடனும் காணிப்பாவனைத் திட்ட மொன்றினை வகுத்தமைத்தலும் விதந்துரைத்தலும் வேண்டும்:—

(அ) காணியிலிருந்தும் அதன் மூலவளங்களிலிருந்தும் ஆகக்கூடிய நலன்களைப் பெறும்வகையில் காணியையும் அதன் மூலவளங்களையும் கொள்ளுவதற் கெனவும், பயன்படுத்துவதற்கெனவும், கையுதிர்ப்பதற்கெனவும் பகுத் தறிவுக்கொத்ததும் ஒழுங்கானதும் செயற்றிறன் மிக்கதுமான முறைமை யொன்றினை ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஆ) நாட்டின் தேவைகளுக்கும் காணிமூலவளங்களுக்குமிடையிலான ஏற்றத் தாழ்வைத் தடுக்கும் வகையில் அத்தகைய காணி மூலவளங்களை விவேக மாகப் பயன்படுத்துவதற்கும், பேணிக்காப்பதற்கும் ஊக்குதவியளித்தல்.

**16.** பதினைந்தாம் பிரிவின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட காணிப்பாவனைத் திட்ட மானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும், அதாவது—

(அ) அறிவியல் ரீதியாகப் போதுமான காணி விபரப்பட்டியலும் பாகுபாட்டு முறைமையையும்;

(ஆ) தற்போது காணி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதும், அத்துடன் அத்தகைய காணி எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது, முழுமைக்குக் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றது அல்லது வெறுமனே விடப்பட்டுள்ளது அல்லது கைவிடப்பட்டுள்ளது என்பதும் பற்றிய தீர்மானமொன்றையும்;

(இ) சமூக அபிவிருத்தி, கமத்தொழில், கைத்தொழில் அல்லது வர்த்தகம் ஆகியவற்றுக்கென காணியை இசைவாக்குவது பற்றிய அனைத்தடக்கமானதும் திட்டமானதுமான தீர்மானமொன்றையும்;

(ஈ) கட்டுப்பாடில்லா அபிவிருத்தி, ஈடுசெய்யொணுச் சேதத்தை உண்டுபண்ணக்கூடியதாகவிருக்கின்றவிடத்து, வரலாற்று ரீதியான, பண்பாட்டு ரீதியான முக்கியத்துவம் கொண்டவையும் அல்லது அழகியல்புப் பெறுமதிவாய்ந்தவையுமான பிரதேசங்களை அடையாளம் கண்டு கொள்ளுதலையும்;

(உ) சூழற் கட்டுப்பாடு அவசியமெனக் கருதப்படும் பிரதேசங்களிலுள்ள காணியைப் பயன்படுத்தல்மீது அரசாங்கத்தால் கட்டுப்பாடு பிரயோகிக்கப்படுவதற்கான முறையொன்றையும்; அத்துடன்

(ஊ) ஆட்களை மீளக்குடியமர்த்துவதற்காகப் புதிய பிரதேசங்களை இடம் குறி நாடுவதில் ஆர்வமேற்படுவதற்கான கொள்கையொன்றும், அத்தகைய பிரதேசங்களிலும் அவற்றினைச் சூழவுமுள்ள காணியின் பயன்படுத்தல்மீது தோதான கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான முறைகளையும்,

உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

### இயற்கை மூலவளங்கள்

**17.** அதிகாரசபையானது, நாட்டினது இயற்கை மூலவளங்களிலிருந்து மிகக் கூடிய நலன்களைப் பெறுவதற்கெனவும், எதிர்காலச் சந்ததியினருக்காக அவற்றைப் பேணிக்காப்பதற்கெனவும், அத்தகைய மூலவளங்களின் முகாமை, மற்றும் பேணுகைமீதான அடிப்படைக் கொள்கையையும், அத்துடன் அத்தகைய கொள்கையானது எந்தப் பொது நடவடிக்கைகளினூடாகச் செயலூக்கத்துடன் மேற்கொள்ளப்படக்கூடியதாயுள்ளதோ அப்பொது நடவடிக்கைகளையும் பேரவையின் கலந்தாலோசனையுடன் அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

### கடற்றொழில்

**18.** அதிகாரசபையானது, இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பிலேயுள்ள அல்லது அதன்புறநீங்கலான பொருளாதார வலயத்தினுள் உள்ள அல்லது அதன் உள்ளூர் நீர்ப்பரப்பிலேயுள்ள கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்களைப் பகுத்தறிமுறையில் நாடித் தேடுவதற்கான முறைமையொன்றினை, பேரவையின் கலந்தாலோசனையுடனும் கடற்றொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் உதவியுடனும் அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நீர்ப்பரப்பின் மிகக்கூடியதும் தொடர்ச்சியானதுமான விளைவுப்பெருக்கத்தினை பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் என பிரசைப் பங்குகோடலை ஊக்குவித்தலும் வேண்டும்.

**19.** கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்களைப் பகுத்தறிமுறையில் நாடித்தேடுவதற்கான நடவடிக்கைகள், அருகி ஒழிந்துபோகலாம் என அஞ்சப் படும் வகையினவான மீன்களை அல்லது வேறு நீர் வாழுயிரினங்களைச் சந்தைப் படுத்தலைக் கட்டுப்படுத்துவதனையும் உள்ளடக்கலாம்.

### வனவிலங்குகள்

**20.** அதிகாரசபையானது, பேரவையின் கலந்தாலோசனையுடனும், வன விலங்குப்பேணல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் உதவியுடனும், வனவிலங்கு மூலவளங்களைப் பகுத்தறிமுறையில் நாடித்தேடலுக்கும் பேணிக்காத்தற்குமான முறைமையொன்றினை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய செயல் நடவடிக்கைகளில் பிரசைப் பங்குகோடலை ஊக்குவித்தலும் வேண்டும்.

### காட்டியல்

**21.** அதிகாரசபையானது, பேரவையின் கலந்தாலோசனையுடனும் காட்டியல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் உதவி யுடனும்—

(அ) (i) காட்டு மூலவளங்களைப் பகுத்தறிமுறையில் நாடித்தேடலுக்கும்,

(ii) அருகி ஒழிந்து போகலாம் என அஞ்சப்படும் காட்டுமூலவளங் களின் சந்தைப்படுத்தலை கட்டுப்படுத்தலுக்கும்,

(iii) அருகி ஒழித்துபோகலாம் என அஞ்சப்படும் மரவகைகளைப் பேணிக்காத்தற்கும்,

ஆன முறைமையொன்றை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும் என்பதுடன், நாட்டினது காட்டு மூலவளங்களை எக்காலத்தும் மிகக் கூடிய உற்பத்தியில் வைத்திருப்பதற்கு, அதில் பிரசைப் பங்கு கோடலை ஊக்குவித்தலும் வேண்டும்.

(ஆ) மீளக் காடமைத்தலிலும், வெட்டுமரக் காலை முன்னேற்றத்திலும், காட்டுப் பாதுகாப்பிலும், காணி வகைப்படுத்தலிலும், காட்டுக் குடியிருப்பு முகாமையிலும், கைத்தொழில் மர நடுகையிலும் பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு முகாமையிலும், பல பயன்பாட்டுக் காடுகளிலும், வெட்டுமர முகாமையிலும் காட்டு ஆராய்ச்சியிலும் தொடரும் முயற்சியொன்றினை மேம்படுத்தும்,

முறைமையொன்றை அமைச்சருக்கு விதந்துரைத்தல்வேண்டும்.

### மண் பாதுகாப்பு

**22.** அதிகாரசபையானது, பேரவையின் கலந்தாலோசனையுடனும் மண் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் உதவியுடனும் இடரார்ந்த நீர்ப்படுக்கைப் பிரதேசங்களை அடையாளம் காணலும், பாதுகாத்தலும், அறிவியல் பூர்வமான பண்ணைத் தொழில்நுட்பங்களை ஊக்கு வித்தல், பௌதிக முறையிலும் உயிரியல் முறையிலும் மண்ணைப் பாதுகாத்தல், அத்துடன் விளைப்பயன்மிக்க மண் பாதுகாப்புக்கான குறுகிய, கால நீண்டகால

ஆராய்ச்சியும் தொழில் நுட்பமும் ஆகியவற்றை உட்படுத்தும் மண்பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

**23.** அதிகாரசபையானது, சூழல் முகாமையில் தொடர்ச்சியான கற்கைகளையும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ளலாம் என்பதுடன் அவற்றை விருத்தியும் செய்யலாம். அத்துடன் சூழல் ஆராய்ச்சியில் முந்துரிமைப் பிரதேசங்களைக் காலத்துக்குக் காலம் தீர்மானித்தலும் வேண்டும்.

பாகம் V

பொது

**24.** *(1)* இச்சட்டத்தின் நெறிகளுக்கும் குறிக்கோள்களுக்கும் பயனளிக்கும் நோக்கத்திற்காக, அதிகாரசபையானது, ஏதேனும் வளவின் இருப்பாட்சியாளரிடம் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் அந்த இருப்பாட்சியாளரை, பதினான்கு நாட்களுக்குள் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நீண்ட காலத்திற்குள், அத்தகைய வளவில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் உற்பத்தி பற்றிய, கைத்தொழில் பற்றிய அல்லது வியாபாரச் செயல்முறை அமைப்புப் பற்றிய அத்தகைய தகவலை அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான சொல்லப்பட்ட வளவிலிருந்து வெளியேற்றப்படும் எவையேனும் கழிவுகளைப் பற்றிய அல்லது வெளியேற்றப்படும் சாத்தியமுடைய எவையேனும் கழிவுகளைப் பற்றிய அத்தகைய தகவலை அதிகாரசபைக்குக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டைப் பின்பற்றி, அதிகாரசபைக்குக் கொடுத்துதவப்பட்ட எல்லாத் தகவலையும் அது கடும்பிடியான இரகசியத்துடன் கணித்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்கின் நோக்கத்துக்காக, *(3)* ஆம் உட்பிரிவுக்கு அமைய, நீதிமன்றமொன்று தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு அத்தகைய தகவலை வெளியிடுதலுமாகாது.

*(3)* ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டைப் பின்பற்றி, அதிகாரசபைக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்று அத்தகவலைக் கொடுத்துதவுகின்ற அல்லது அக்கூற்றை அளிக்கின்ற ஆள், தாம் அவ்வாறு தகவலைக் கொடுத்துதவுதல் அல்லது கூற்றை அளித்தல், தம்மீது குற்றம் சுமத்தக்கூடிய சாத்தியம் கொண்டதாக இருக்கக்கூடும் என்ற ஏதுவின்மீது, அத்தகவலை அல்லது அக்கூற்றைக் கொடுத்துதவும் நேரத்தில், அவ்வாறு கொடுத்துதவுவதற்கு அல்லது அளிப்பதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்தால், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக அவ்வாளுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏலத்தக்கதாலாகாது.

**25.** அதிகாரசபையானது —

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எடுக்கப்பட்ட மாதிரிகளைப் பகுப்பாய்வதற்கென இரசாயனப் பகுப்பாய்வாளர்களையும்; அத்துடன்

(ஆ) கழிவுகள் உள்ளமையையும், அவற்றின் அளவையும் தன்மையையும், அத்துடன் சூழலின் வாங்கு துண்டங்களின் மீதான அவற்றின் தாக்கங்

ளையும் எங்ஙனமெனக்காட்டும் தகவல் அனுப்புபதிவேடுகளையும், கண்டு பிடித்தற்கான விதித்துரைக்கப்பட்ட வேறு சாதனங்களையும் நிறுவுகை களையும் பார்வையிடுவதற்காகவும் மதிப்பீடுசெய்வதற்காகவும் தீழ்ப்புக் கட்டுப்பாட்டு அலுவலர்களையும்,

நியமிக்கலாம்.

**26.** (1) அதிகாரசபையானது, (5) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களுள், கடமைகளுள், பணிகளுள் எதனையும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு, அல்லது உள்ளூரதிகார சபைக்குக் சுட்டளைமூலம் கையளிக்கலாம்.

(2) அதிகாரசபையானது ஏதேனும் அரசாங்கத் திணைக்கனத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு ஏதேனும் தத்துவத்தைக் கையளித்துள்ள விடத்து, அத்தகையஅரசாங்கத் திணைக்களத்தின் அல்லது உள்ளூர் அதிகார சபையின் எவரேனும் அலுவலர், பொது முகாமையாளர் தாமே அத்தத்துவத்தைப் பிரயோகிப்பவராக இருந்திருப்பாரெனின் எந்தத் தத்துவங்களை அவர் பிரயோகிக்கவியன்றவராக விருந்திருப்பாரோ அந்தத் தத்துவங்களுள் எதனையும் பிரயோகிக்கலாம்.

(3) இப்பிரிவிலுள்ள எதுவும் சூழலைப் பாதுகாக்கும் ஏதேனும் பொறுப்பிலிருந்தும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிர்வகிப்பதிலிருந்தும் அதிகாரசபையை விலக்கிவைத்தலாகாது.

(4) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அதிகார சபையினால் எந்நேரத்திலும் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(5) ஒராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று-

(அ) அமைச்சரின் ஒருபாட்டுடனன்றி, ஏதேனும் உள்ளூரதிகாரசபை தொடர்பில்; அத்துடன்

(ஆ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி அத்தகைய அரசாங்கத் திணைக்களம் தொடர்பில்,

அதிகாரசபையினால் ஆக்கப்படுதலாகாது

**27** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**28.** இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபை அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்ருகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

**29.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணுக எது எவ்விதமிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையன வாதல்வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது

ஒவ்வாமை காணப்படும் சந்தருப்பத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினது ஏற்பாடுகளிலும்மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

**30.** (1) (அ) இந்தச்சட்டத்தின் கீழ் அதிகாரசபையினுல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லதுசெய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகாரசபைக்கெதிராக;

(ஆ) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது அதிகாரசபையின் பேரவையின் அல்லது மாவட்டச் சூழல் முகவரான்மையின் உறுப்பினர்களால், அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும்செயலுக்காக அவருக்கெதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) அதிகாரசபையினுல் அல்லது அதிகாரசபைக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகார சபையினுல் உறப்பட்ட ஏதேனும் செலவு, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையினுல் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள், அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறுன அத்தகைய எவரேனும் ஆளினுல் இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில்அத்தகைய ஆளினுல் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினுல் அறவிடப்பட்டாலன்றி, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**31.** இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடு எதனையும் மீறும் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறும் ஆள் ஒவ்வொருவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாதல்வேண்டும் என்பதுடன், நீதிவானெருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டணைக்கு அல்லது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**32.** (1) இச்சட்டத்தினுல் விதித்துரைக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தினுல் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல்வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் சாத்தியப்படக்கூடியவாறான அத்தகைய விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல்வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் அதன் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி, எத்தேதியன்று ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**33.** இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''நலமார்ந்த பயன்பாடு'' என்பது, பொதுமக்களின் நலனுக்கு, சேம நலனுக்கு, பாதுகாப்புக்கு அல்லது சுகாதாரத்துக்கு உகந்த முறையில் இருக்கின்றதும் கழிவு வெளியேற்றுதல்களின், வெளிவிடுதல்களின் அல்லது படியவிடுதல்களின் விளைவுகளிலிருந்து பாதுகாப்பு வேண்டி நிற்கின்றதும் ஆன சூழற் பயன்பாடு அல்லது சூழலின் ஏதேனும் பாகத்தின் பயன்பாடு எனப் பொருளாகும்;

''சூழல்'' என்பது, காணி, மண், நீர், வளிமண்டலம், காலநிலை, ஓசை நாற்றங்கள், சுவைகள் அத்துடன் ஒவ்வொரு விவரணத்தினவுமான விலங்குகளினதும் தாவரங்களினதும் உயிரினவியல்சார் காரணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மனித வர்க்கத்தின் சுற்றுடல்களின் பௌதீகவியற் காரணிகள் எனப் பொருளாகும்;

''புறநீங்கலான பொருளாதார வலயம்'' என்பது, 1976ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கரையோர வலயங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பிரகடனம் மூலம் புறநீங்கலான பொருளாதார வலயம் என வெளிப்படுத்தப்பட்ட வலயம் எனப் பொருளாகும்;

''காணி'' என்பது, காணிமனைகளையும், கட்டடங்களையும் இவை தொடர்பிலான எவையேனும் செல்வழியுரிமைகளையும் உள்ளடக்கும்;

''உள்ளூரதிகாரசபை'' என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருளாவதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

''தீழ்ப்பு'' என்பது, ஏதேனும் நலமார்ந்த பயன்பாட்டைப் பங்கமான முறையில் பாதிக்கும்வகையில் பொதுமக்களின் சுகாதாரத்துக்கு பாதுகாப்புக்கு அல்லது சேமநலத்துக்கு, அல்லது ஒவ்வொரு விவரணத் தினவுமான விலங்குகளுக்கு, பறவைகளுக்கு, வன விலங்குகளுக்கு, நீர்வாழ் உயிரினங்களுக்கு அல்லது தாவரங்களுக்கு தீங்கானதாகவுள்ள ஒரு நிலைமையை அல்லது தீங்குவிளைவிக்கக்கூடிய ஆற்றலுடையதாக உள்ள ஒரு நிலைமையை உருவாக்கும் வகையில் கழிவுகளை வெளியேற்றுவதன்மூலம், வெளிவிடுவதன் மூலம், அல்லது படியவிடுவதன் மூலம் சூழலின் ஏதேனும் பகுதியின் பௌதீகக் கூறினை, வெப்பநிலைக் கூறினை, இரசாயனக் கூறினை, உயிரினவியற் கூறினை அல்லது கதிர் இயக்கக்கூறினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மாற்றுதல் எனப்பொருளாகும்;

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது, ஒழுங்குவிதிகளினுல் விதித்துரைக்கப் பட்டது எனப் பொருளாகும்;

''ஆள்புல நீர்ப்பரப்பு'' என்பது, இலங்கையின் ஆள்புலக் கடற்பரப்பையும், வரலாற்றுவழிச் சொந்தமான நீர்ப்பரப்புக்களையும் உள்ளடக்கும்; அத்துடன்

''கழிவு'' என்பது, கழிவென விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளையும், சூழலில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய அத்தகைய கனவளவில், அமைப்புக் கூறில் அல்லது முறையில் சூழலுக்குள் வெளியேற்றப்படுகின்ற, வெளிவிடப்படுகின்ற அல்லது படிய விடப்படுகின்ற ஏதேனும் பொருளையும் (அப்பொருள் திரவமாயினுஞ்சரி, திண்மமாயினுஞ்சரி, வாயுத்தன்மையானதாயினும்சரி அல்லது கதிர் இயக்கத் தன்மையான தாயினும்சரி) உள்ளடக்கும்.

## 1980ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

*[1980 திசெம்பர் மாதம் 29ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

### 1979ஆம் ஆண்டின் 71ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

**1.** இச்சட்டமானது, 1980ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 71ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''ஆயிரத்து நூற்றி இருபது கோடியே ஒரு இலட்சம் ரூபாவுக்கு'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''ஆயிரத்து ஐநூறு கோடியே தொண்ணூறு இலட்சம் ரூபாவுக்கு'' என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

# 1980ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

*(1980, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

1981ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய் சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ வெளிநாடுகளிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு, குறித்த நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களை திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அப்பணங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வற்கும், முற்கூறிய கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்வினவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.

1. இச்சட்டம் *1980* ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. *(1)* இச்சட்டத்தில் *''1971ஆம் நிதியாண்டு''* எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் *1981*, சனவரி *01* ஆந் தேதி தொடங்கி *1981*, திசெம்பர் *31* ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலத்துக்கான சேவைக்காக இரண்டாயிரத்து முந்நூற்றிஎண்பத்திரண்டு கோடி ஐம்பத்தெட்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நூற்று எண்பத்தொரு ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி—

(அ) திரட்டு நிதியத்தினின்று அல்லது அரசாங்கத்திற்கு சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறெந்த நிதியத்தினின்று அல்லது பணங்களினின்று வழங்கப்படுமாறு இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளினின்றும், அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்படும்படி இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியினின்றும், (எவ்வாறுயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகை ஆயிரத்து இருநூற்றித் தொண்ணூற்றேழு கோடி பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படலாகாது)

பெறப்படல் வேண்டும்.

இதன்கண் முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இரண்டாயிரத்து முந்நூற்றி எண்பத்திரண்டு கோடி ஐம்பத்தெட்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நூற்று எண்பத்தொரு ரூபாக் கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலுள்ள வேறு எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பங்கமின்றி பயனுடையனவதால் வேண்டும்.

3. *(1)* இரண்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின் போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்

துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். ஆனுல், அவ் வாறு வரவு வைக்கப்பட்ட வரவுகளின் கூட்டுமொத்தத்தொகை அந்த அட்டவணை யின் IIIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அத்தகைய முயற்சியினின்று அத்தகைய ஆகக்கூடிய எல்லைக்கு மேலாகப் பெறப்படும் வரவுகள் எவையும் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*(2)* இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக் கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும் அரசாங்கத்தால் உறப்படும் செல வினம், அந்த நிதியாண்டின்போது அத்தகைய முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல் வேண்டும். ஆனுல், அத்தகைய செலவினம், அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக் கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

*(3)* இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின் முடி வில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித் துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக் கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது, அத்துடன் அந்த நிதி யாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்ட வணையின் V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

**4.** இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்த முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினுல் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமெனத் தம்மாற் கருதப்படும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதி யத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறே தேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டு மெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாருயினும் அவ் வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாமலிருத் தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட எப்பணத்தொகைளும் அமைச்சராற் கட்டளைமூலம் பணிக்கப் படக்கூடிய முறையில் திரட்டு நிதியத்திற்குத் திரும்பக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

**5.** *(1)* இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனுக, அட்டவணையில் குறித்துரைக்கப்பப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழுந் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினதிற்குப் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்து, ஆனுல் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாள ரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்

டளைமூலம், அந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உட்பட்ட ஆக்கப்பொருட்செலவினத் திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்கு உட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் மீண்டுவரும் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதே னும் தலைப்பின்கீழுள்ள எந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் ஆக்கப்பொருட் செலவுக் குப் பகிரப்பட்டுள்ள எப்பணங்களும் அப் பகிர்விருந்து வேறெதற்கும் மாற்றப் படலாகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்கு மென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக் கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென,

அமைச்சர் திருப்தியடையுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங் கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து, அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத் தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத் தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லை களுள் எதனையும் அல்லது III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளுள் எதனையும் அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு, 1982 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம். அத்தகைய எந்தக் கட்டளையும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடி யதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண் டாம் அட்டவணையை, அவ்வட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும் அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லை களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

## 1980 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க இலங்கை வங்கி (திருத்தச்) சட்டம்

(1980 டிசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1980 ஆம் ஆண்டில் 60 ஆம் இலக்க இலங்கை வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துநான்காம் ஆண்டின் 10 ஆம் இலக் கச் சட்டத்தினல் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிம்பீடுசெய்யப் யப்படும்) 7ம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

மூலதனம் 7. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாவைக்கொண்ட பத்து இலட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட நூறு கோடி ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனமானது, கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் காலத்திற்குகாலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும்.

(3) எந்தவொரு நேரத்திலும், தனிப்பங்குதாரர் என்ற வகையில் அரசாங்கத்தின் பொறுப்பானது, அப்போதைக்கு அரசாங்கத்தால் வைத்திருக்கப்பட்ட பங்குகளாற் குறிப்பிடப்படும் மூலதனத்தின் மொத்தத்தொகைக்கு வரையறுக்கப்பட்டதாயிருந்தல் ''வேண்டும்''

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துநான்காம் ஆண்டின் 10 ஆம் இலக்கச்சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுன முதன்மைச் சட்டவாகத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

அமைச்சர் பணிப்புரைகளை வழங்க வேண்டும் என்பது அமைச்சரானவர், வங்கியின் கடமைகளைப் புரிதல் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல், என்பன தொடர்பில் சபைக்கு பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை காலத்திற்குக்காலம் எழுத்தில் வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புரைகளுடன் இனங்கியொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

## 1980 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம்

*(1980 திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

### 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

**1.** இச்சட்டம், 1980 ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2.** 1978 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மக்கள் வங்கி (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுன, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும் 8ம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

''(1) சபையானது அமைசரால் நியமிக்கப்பட்ட பத்து பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்களுள் இருவர், கூட்டுறவுகள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.''

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மூலதனம் 12. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது, ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவைக் கொண்ட இரு கோடி பங்குக ளாகப் பிரிக்கப்பட்ட நூறுகோடி ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனமானது கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் காலத்திற்குக்காலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படகூடியவாறான அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும்.''

4. நாற்பத்திரண்டாம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு, இத் தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 42அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்;

"அமைச்சர் பணிப் புரைகளை வழங்க வேண்டும் என்பது 42. அ. அமைசரானவர், வங்கியின் கடமைகளைப் புரிதல் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் என்பன தொடர்பில் சபைக்கு பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை காலத்திற்குக் காலம் எழுத்தில் வழங்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புரை களுடன் இணங்கியொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண் டும்.''

## 1980ஆம் ஆண்டின் 62ஆம் இலக்க பண (திருத்தச்) சட்டம்

*[1980, திசெம்பர் மாதம் 29ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டமானது 1980ஆம் ஆண்டின் 62ஆம் இலக்க பண (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பணச் சட்டத்தின் 44ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.